27 வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416.282.8059
Email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

RBC Insurance
அனைத்து காப்புறுதி மற்றும் சேமிப்புத்திட்ட தேவைகளுக்கும்...
Jey Ahamparam
416 301 1733
உங்கள் வாகன, வீட்டு (for your Home & Auto)

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி 27 | பாலம் 14 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JULY 15, 2017

# பொருளாதார வளர்ச்சியும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும்!

வலுவான பொருளாதார வளர்ச்சியையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் ஒன்றாகச் சேர்த்து முன்னேற்ற முடியும் என்று G20 மாநாட்டின் முடிவில் கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ ஊடக வியலாளர்களுக்குத் தெரிவித்தார் என CNN ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.




உலகிலுள்ள மிகப்பெரிய பொருளாதாரங் களைக் கொண்ட 20 நாடுகளின் G20 மாநாடு இம்முறை ஜேர்மனியில் உள்ள ஹம்பேர்க் நகரில் 2017 யூலை 7 மற்றும் 8ஆம் திகதிகளில் நடைபெற்றது. இதற்கு முந்தைய G20 மாநாடு 2016 செப்ரெம்பரில் சீனாவில் நடை- பெற்றது. அடுத்த G20 மாநாடு 2018 இல் ஆஜன்ரீனாவில் நடை பெற உள்ளது.

இம்முறை ஜேர்மனியில் நடைபெற்ற G20 மாநாட்டில் ஆஜன்ரீனா, அவுஸ்ரேலியா, பிறேசில், கனடா, சீனா, பிரான்ஸ், ஜேர்மனி, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், மெக்சிகோ, ரஸ்யா, சவூதி அரேபியா, தென் ஆபிரிக்கா, தென் கொரியா, துருக்கி, இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய மிகப்பெரிய பொருளாதாரங்களைக் கொண்ட G20 நாடுகள் பங்குபற்றின. இம்மாநாட்டுக்குப் பார்வையாளர்களாகப் பங்குபற்ற 8 நாடுகள் அனுமதிக்கப்பட்டன. நெதர்லாந்து, நோர்வே, செனகல், சிங்கப்பூர், ஸ்பெயின், வியட்நாம், சுவிற்சலாந்து மற்றும் கினி (Guinea) ஆகிய 8 நாடுகளுமே பார்வையாளர்களாக பங்குபற்றின. G20 நாடுகளில் அமெரிக்கா தவிர்ந்த ஏனைய 19 நாடுகளும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சம்பந்தமான பாரிஸ் திட்டத்திற்கு தமது முற்றுமுழுதான ஆதரவைத் தெரிவித்தன. இந்த 19 நாடுகளும் பாரிஸ் திட்டத்தில் ஏற்றுக்கொண்டபடி காபன் வெளியிடும் அள வைக் குறைக்க முடிவு செய்தது மட்டுமல்லாமல் அத்திட்டத்தில் கூறியபடி வளர்முகநாடுகளுக்குக் காபன் வெளியிடும் அளவைக் கட்டுப்படுத்தும் திட்டங்களுக்குப் பணவுதவி புரிவது பற்றி பாரிஸ் திட்டத்தில் கூறியதையும் ஏற்றுக்கொண்டன.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதுடன் நாட்டின் பாதுகாப்புத் தேவைகளை மேம்படுத்திக்கொண்டு காபன் வெளி யிடும் அளவைக் குறைக்கும் அணுகு முறைக்கு அதன் வலுவான உறுதிப்பாட்டை அமெரிக்கா உறுதிப்படுத்தியது. ஆனால் பாரிஸ் திட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வளர்முக நாடுகளுக்குக் காபன் வெளியிடும் அளவைக் கட்டுப்படுத்தும் திட்டங்களுக்கு அமெரிக்கா வழங்க வேண்டும் என நிர்ணயிக்கப்பட்ட நிதிப் பங்களிப்பை முற்றாக நிராகரித்தது.

(தொடர்ச்சி 03ஆம் பக்கம்...)

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

Lexus of Richmond Hill
LEXUS
குமார் ஜெகசோதி
Tel. 905.883.8812
Cell: 416.451.0565
11552 Yonge Sreet
Richmond Hill, ON L4E 3N7
www.lexusrh.com
Kumar Jegasothy
Sales Consultant

Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPURTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
Realtor
416.888.7877
www.divhomes.com

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com
Homelife/Future Realty Inc.

MORTGAGE
For all your Mortgage
We Deal with all banks
Any situations
NESAN 416-908-5656
Lic# M15001465
Toll Free: 1-844-878-2721 Fax: 647-351-3099
mortgage@nesan.ca www.nesan.ca
1585 Markham Rd, Unit #407A, Toronto, M1B 2W1
SUBRA MORTGAGES INC.

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

Buying-Leasing-Renting-Selling
A name you can trust
RUTH VIJENDRAN
Full-Time Sales Representative
416.300.5454
ruthvjhomes@gmail.com
ruthvjhomes.com
LISTING COMMISSION 1%
Home is where your story begins, let me help you get there!!!
HOMELIFE/FUTURE REALTY Inc. Brokerage

DENTAL OFFICE
இப்பொழுது 2 இடங்களில்
Dr.Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS, RCPS(Glasg.)
DENTAL SURGEON
Wisdom Tooth Extraction.
Root Canal.
Gum Treatment.
Tooth Filling.
Dental Implant.
Dentures.
3150 Eglinton Ave. East, Unit #5
Markham & Eglinton
Tel: 416-264-3232
3351 Markham Road., #129
Markham & Steeles
Tel: 416-609-2022

JENA GULASINGHAM
Sales Representative
416.702.2030
jenahomelife@gmail.com
This Special Offer Valid Only This Year
Buy a Home with Me & Listing Commission FREE FREE FREE
HomeLife/Future Realty Inc.



$838,900
Under Construction
Occupancy: Dec 17, 4 BR, 4 WR
$649, 000
Scarborough-Detached
Renovated solid brick, BR: 4 WR: 3
$689, 999
Semi Detached-Markham
3 BR, 3 WR, No sidewalk
$799,000
Brand New-Detached, Brampton
BR 4, WR 3
$299, 000
Under Construction-Scarborough
Occupancy: Nov 2018, BR 1+1 WR 2
$499,000
2 Yr New Town House -Oshawa
BR 3 , WR 3, Fin. W/O Basement
$549,900
NOT ON MLS
Condo-Markham, BR :2+1
2 Full WR, Maint. Fee: $140
THAS....
SOLID NEGOTIATOR
15 YEARS OF BUSINESS EXPERIENCE
REAL ESTATE INVESTOR & ADVISOR.
Sellers: CALL ME ONLY, IF YOU WANT TOP DOLLAR FOR YOUR HOME.
Buyers: NOT ENOUGH DOWN PAYMENTS? CALL ME FIRST.
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE INDEPENDENTLY OWNED AND OPERATED
3-1286 Kennedy Rd. Toronto, Ont.
www.remaxace.com
#1 RE/MAX
Thas Thirunavukkarasu
Sales Representative Dip-in-Eng(Hons)
416-388-4333
thasremax@gmail.com
Not intented to solicit buyers/sellers under contract. All properties advertised herein may not be listed by Thas.




Cottages, Homes,Farms, Lands...
RICE LAKE #275 - COTTAGE
$525,000
Havelock ,Trent River - Cottage Water front
$649,000
Scarb & Ellesmere 3BD 2 WR Sep Ent + apt
WATER FRONT COTTAGE WEEKDAYS & WEEKEND RENTALS
From $150 per day
2350 sq. ft. Living Space
6Bed Rooms Free BBQ, Canoe, padel boat, life jackets and more..
$534,000
Tapscott & Finch- 3BR / 2WR
$369,000
SIMCO LAKE - Cottage Water front
MULTIOFFICE
RENTED
BEST INVESTMENT
Markham/ Denison - UNIT FOR SALE
$10,000 Profit per Month
VARIETY STORE FOR SALE - VICTORIA PARK & DANFORTH
$599,000
TAUNTON/ RITSON - Premium Lot
BUILDING PERMITS !!!
For addition and new homes get an advice and cosultancy services and Building Permit Applications
Century 21
BROKERAGE*
AFFILIATE REALTY INC.
OFFICE : 416-290-1200
17 YEARS REAL ESTATE EXPERIENCE
PAT PUSHPAKANTHAN
Call :416-894-1187
REAL ESTATE BROKER - HALL OF FAMER
PAT WILL BEAT ANY DEAL*!!
1% Listing Commission *
Also Available

# பொருளாதார...

## 01ஆம் பக்கத்தொடர்ச்சி

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் மகள் இவான்கா ட்ரம்பின் தலைமையில் வளர்முக நாடுகளில் உள்ள பெண் தொழில் முனைவோருக்கு (Female entrepr eneurs) உதவும் முகமாக பொது, தனியார் கடன் திட்டத்தை அறிமுகப்படுத்துவதாக

உலகவங்கி G20 மாநாட்டில் அறிவித்தது. இத்திட்டத்திற்கு அமெரிக்கா $50 மில்லிய-னையும், கனடா $20 மில்லியனையும் வழங்கியது. ஜேர்மன், சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு நாடுகளும் பெரும் தொகைப் பணத்தை இத்திட்டத்திற்கு வழங்கியது. உலகவங்கி இத்திட்டத்திற்கு உடனடியாகவே $325 மில்லியன் சேர்த்துள்ளதாக அறிவித்தது. இத்திட்டம் 'We- Fi' எனப்படும் பெண்கள் தொழில் முனைவோர் நிதி முனைப்பு (Women Entrepreneurs Finance Initiative) என அழைக்கப்படும்.

"கனேடிய அரசின் புதிய 'பெண்ணிய சர்வதேச உதவிக் கொள்கை' இற்கு ஆதரவாக We-Fi திட்டம் இருக்கிறது. இத்திட்டம் பாலின சமத்துவ (Gender equality) மற்றும் பெண்களுக்கு அதிகாரம் அளித்து (Empowerment of women) சமாதானமும், முழுமையானதுமான (Inclusive) ஒரு வளமான (Prosperous) உலகத்தை உருவாக்குவதற்கான சிறந்த வழியாகும்" எனக் கனேடியப் பிரதமர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

We-Fi பற்றி ஜேர்மன் அதிபர் அஞ்சலா மேர்க்கெல் கருத்துத் தெரிவிக்கையில் இத்திட்டம் வளர்முக நாடுகளில் உள்ள பெண்களுக்கு ஓர் உண்மையான முன்னேற்றத்தைக் கொடுக்கும் என்று கூறித் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

பெற்றாலும் யூலை 7இல் சில இடங்களில் நடைபெற்ற கலவரங்களில் வீதிகளில் நிறுத்தி வைக்கப்பட்ட கார்கள் சில நெருப்பு வைக்கப்பட்டன. 114 இற்கும் மேற்பட்ட கலவரக்காரர்கள் கைது செய்யப் பட்டனர். 200 இற்கும் மேற்பட்ட பொலீசார் காயப்பட்டனர்.




"எமக்கு அருகில் கனடாவில் ஒரு திறமையான அயலவர் இருக்கிறார். அவர் பிரமிக்கத்தக்க (Spectacular) வேலைகளைச் செய்து வருகிறார். எல்லோரும் அவரை விரும்புகிறார்கள்" என ஜஸ்ரின் ரூடோவிற்குப் புகழாரம் சூட்டினார் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம். இம்முறை நடைபெற்ற மாநாட்டிற்கு 2017 யூன் மாதத்தில் இருந்தே பல எதிர்ப்பு ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடைபெற்றன. இதில் 10,000 இக்கும் மேற்பட்ட மக்கள் பங்குபற்றினர். G20 நாடுகளின் முதலாளித்துவ கொள்கைகளுக்கு எதிராக நடைபெற்ற இந்த எதிர்ப்பு ஊர்வலங்கள் பெரும்பாலும் அமைதியாக நடை-

கனேடியப் பிரதமர் தனது ஜேர்மன் பயணத்தின்போது ஜேர்மன் நாட்டின் முயற்சியில் ஆரம்பிக்கப்பட்ட 'Skills for girls' என்னும் பெண்களுக்கு திறமைகளைக் கற்றுக் கொடுக்கும் திட்டத்திற்கு கனேடிய அரசின் சார்பில் $15.8 மில்லியன் நிதி உதவியை வழங்கினார். இத்திட்டத்தில் ஐந்து அம்சங்கள் அடங்கியுள்ளன.

- தேர்ந்தெடுக்கப்பட்ட சில பொதுநலவாய நாடுகளில் பெண்களுக்குக் கல்வி மற்றும் பயிற்சி முறைகள் வழங்குவதன் மூலம் பால்ய வயது திருமணத்தையும் கட்டாயத் திருமணத்தையும் தவிர்க்க உதவுதல்.
- கணித விஞ்ஞான திறன்களை வளர்க்க உதவும் ஆபிரிக்க நிறுவனத்தின் மூலம் கணித விஞ்ஞான அறிவை ஆபிரிக்க மாணவர்களுக்குப் புகட்டி அவர்களுக்கு வேலை கிடைக்க வழிசெய்தல்.
- கென்யாவில் உள்ள தடாப் அகதி முகாமில் மாணவர்களுக்கு உயர்கல்வி பெறுவதற்கான ஆசிரிய உதவி வழங்குதல்.
- ஹெயிட்டி இளைஞர்களுக்கு கணினித் துறையில் வேலை பெறுவதற்கான பயிற்சி வழங்குதல்.
- எகிப்தில் உள்ள ஏழைச் சமூகங்களுக்குக் கணினியில் பயிற்சி வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்திற்கான வாய்ப்புக்களை மேம்படுத்துதல்.


கனேடியப் பிரதமர் ஜேர்மனியில் நடைபெற்ற 12,000 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்ட 'Global Citizen Concert' இல் பங்குபற்றினார். அவரை அறிமுகப் படுத்தியபோது அவரின் பெண்களை மேம்படுத்தும் செய்தியால் (Message of empowering women) கவரப்பட்ட இளைஞர்கள் மிகவும் ஆரவாரத்துடன் உற்சாகமாக அவரை வரவேற்றனர்.

அங்கு உலக வங்கித் தலைவர் Jim Yong Kim உரையாற்றுகையில் 'கனேடிய மக்களே! நீங்கள் பிரதமமந்திரியாக இந்த மனிதனைப் பெற்றதால் மிகவும் அதிஷ்டசாலிகள். இவர் எவ்விடயத்தையும் நேரடியாகப் பேசுகிறார் (Directness), எந்தப் பிரச்சினையையும் முழுமனத்துடன் ஈடுபட்டு

(தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...)



# 'கனடா 150' - சின்னம்



ஞா. ஆரணி அகவை 18

கனடாவின் 150ஆவது ஆண்டைக் கொண்டாடுவதற்குப் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றும், நடைபெற்றுக் கொண்டும் இருக்கின்றன. இந்நிகழ்ச்சிகளை ஒன்றாக அடையாளப்படுத்துவதற்கு இவ்விழாவிற்கு ஒரு சின்னம் உருவாக்கப்பட்டது.




இச்சின்னத்தை உருவாக்க மாணவர்களுக்கு இடையே மட்டும் ஒரு போட்டி நடத்தப்பட்டது. இப்போட்டிக்கு வந்த 300 சின்னங்களுக்கான வரைவில் ஒன்று தெரிவு செய்யப்பட்டது.

இது Waterloo பல்கலைக்கழகத்தில் Global Business & Digital Arts படிக்கும் மாணவியான Ariana Mari Cuvinனினால் கீறப்பட்டது. Hong Kong ஐ விட்டு 2002இல் குடும்பத்துடன் கனடாவிற்கு புலம்பெயர்ந்த இவர் ரொறன்ரோவில் வாழுகிறார். 2015 இல் இவர் Deans Honour List இல் தெரிவு செய்யப்பட்டு இருந்தார்.

Cuvin இற்கு இச்சின்னம் தெரிவு செய்யப்பட்டமைக்காக $5,000 பணப் பரிசு வழங்கப்பட்டது. இச்சின்னத்தில் 13 Diamondகள் ஒரு மேப்பிள் இலையின் உருவத்தில் வரையப்பட்டுள்ளது. இலையின் காம்புடன் சேர்ந்து இருக்கும் நான்கு சிறிய Diamondகளும் கனடா 1867 இல் கூட்டமைப்பு நாடான பொழுது இருந்த நான்கு மாகாணங்




களை (Ontario, Quebec, New Brunswick, Nova Scotia) குறிக்கின்றன. மீதி 9 Diamondகளும் ஏனைய மாகாணங்களையும், பிரதேசங்களையும் குறிக்கின்றன. பல வர்ணங்களையுடைய சின்னத்தில் ஒரே வருடத்தில் கனடாவின் கூட்டமைப்பில் சேர்ந்த மாகாணங்கள் கிட்டத்தட்ட ஒரே நிறத்தில் உள்ளன.

தனிச் சிவப்பு நிறத்தில் உள்ள இன்னொரு சின்னத்தில் 13 மாகாணங்களும் ஒற்றுமையாக ஒரே நாடாக இருப்பதால் 13 Diamondகளும் ஒரே நிறமாக (சிவப்பு) உள்ளன.



FREE REAL ESTATE CLASSES START EVERY WEEK
• Office open 7 days • 9:00 am - 9:00 pm
• Over 5,000 Sqft. office • Conveniently Located in GTA Square Mall
An experienced Manager to provide classes with the most advanced and up-to-date education and training.
To Join Free Real Estate Classes Please Call : 416.321.6969
HomeLife/GTA Realty Inc. Brokerage*
*Independently Owned & Operated

## நிர்க்கதியாகும் என் கனவுகள்

நினைவுகளை நிழலில் புதைத்து
நிஜத்தில் மூச்சை நிறுத்தி
வைக்கிறேன்
நின்று போகும் கணங்களில்
நிர்க்கதியாகும் என் கனவுகளை
நிகரில்லா தூய நேசம்
நிகரற்ற அன்பு உள்ளம்
நிகழ்நிலை மறந்து
நிலை தடுமாறுகிறது

மீரா - ஜேர்மனி




அம்மா
நகை அடைவு மாடம்

AMMA PAWN BROKER
வர்த்தகத்துறையில் நீண்டகால முன்னோடிகளான அம்மா நகைமாடத்தின் சிறப்பு வட்டி வீதம்

உங்கள் நகைக்கு கூடிய
பெறுமதியும் குறைந்த வட்டியுடன்
5 நிமிடங்களில் உங்கள் கையில்
பணமும் பாதுகாப்பும் அளிக்கும்
நட்பான சேவையுடன்
கைராசியான நிறுவனம்
2425 Eglinton Ave. E
Scarborough, ON
(சங்கர அன் கோவுக்கு அருகில்)
416-757-0034
416-994-3861
Downtown: 416-921-0034
ammapawnbroker@gmail.com

1.5%
முதல்
2%
$1000ற்கு
மாதம்
$20 மட்டுமே
(Month)

நம்பிக்கை
நாணயம்
உத்தரவாதம்
அம்மாவுக்கு நிகரான சேவை
அம்மா நகை அடைவுமாடமே
உங்கள் பழைய நகைகளை
நியாயமான விலையில்
வாங்கலாம்/விற்கலாம்
அரச அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி செய்யப்பட்ட
முதன்மையான அடைவு சேவை

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

- பவர் ஒப் சேல் பிரச்சினையிலிருந்து விடுபட ,
- நல்ல ரேட்ல மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- லைன் ஒப் கிரெடிட் எடுக்க
- ரீபைனான்ஸ் செய்ய
- 2வது, 3வது மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- கொன்சுமர் ப்ரொபோசல், பாங்க்ரப்சி நிலையில மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க



## மற்றும் உங்கள் அனைத்து விதமான மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தேவைகளுக்கும்...

WIN UP TO
**$100,000**
Everyone Who Funds
A Mortgage With US
Ask How !
*See contest rules at
www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp

## "மோட்கேஜ் கிளினிக்"

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.



**வோக் இன்**

**சனி 9.00 - 5.00 மணிவரை**

**416-613-2788 / 416-816-9011**

திங்கள்—வெள்ளி (call for an appointment)

எமது முகவரி
**1504 Markham Rd,**
**Toronto, ON, M1B 2V9**
**(Markham & HWY 401)**

**ஜெ(Jey) இராசதுரை** MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Broker
FSCO Lic # M 09001428

**Cell : 416-624-4843**

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto*

Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4   Toll Free : 1-877-366-3487   Brokerage Office : 112–895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC   Office Phone : 416-391-3232

# சின்னஞ் சிறு அதிசயமே பெக்கிஸ் கோவ்

## கனடா - 150 வருடங்கள்



சுந்தரம் இந்திராஜா

கனடாவின் ஒரு மாகாணமான நோவா ஸ்கோஷியாவின் (Nova Scotia*) தலைநக ராக விளங்கும் கலிபக்ஸ்ஸிற்கு (Halifax) தென்மேற்காக 43 கிலோமீற்றர் தொலை வில் இருக்கும் அழகுமிகு அத்திலாந்திக் கடற்கரையின் ஒரு குடாவில் 18ஆம் நூற்றாண்டு ஆரம்ப காலத்தில் நிகழ்ந்த அதிசயம் இது.

இக் கடற்கரையிலும் கடலினுள்ளும் பளிங்குக் (Granite) கற்பாறைகற்கள் இயற்கையாகவே வளர்ந்து நிறைந்திருந் தன. உள் ஊர் மாலுமிகள் இதனை அறிந்திருந்தனர். வெளியூர் மாலுமிகள் இதனை அறிந்திருப்பார்கள் என்று சொல்ல முடியாது. இந்தக் குடாவைச் சூழ சில மீனவக் குடும்பங்கள் வாழ்ந்து வந்தனர். அங்கு வாழ்ந்து வந்த பீற்றர் என்ற மீனவனும் ஒருவன். பீற்றருக்கும் அவன் மனைவிக்கும் மாத்திரம் பிள்ளைப் பாக்கியம் இல்லாதது அவன் குடும்பத்தில் சந்தோசம் குன்றிக் காணப்பட்டது.



இயற்கை சீற்றங்கள் தவிர்க்க முடியாத தொன்று. ஒரு நாள் காற்று வேகமாக வீசி யது. கடல் அலைகளும் உயர எழுந்து உருண்டோடின. அன்று அக்குடா மீனவர் கள் கடலுக்குப் போகவில்லை. மறு நாள் காலை கடல் அமைதியானது. மீனவர்கள் கடலுக்குப் புறப்பட்டார்கள். பீற்றர் என்ற ஒரு மீனவனது கண்ணுக்கு மாத்திரம் தொலைவில் ஓர் உடல் கரை ஒதுங்கி யிருப்பது தெரிந்தது. ஓடோடிச் சென்று பார்த்தான். அது ஒரு அழகிய சிறுமியின் உடல். உணர்வின்றி காணப்பட்டாள். பீற்றர் அச்சிறுமியை அள்ளி அணைத்துத் தனக் குத் தெரிந்த முதலு தவிகள் அனைத்தை யும் செய்து பார்த்தான். அவளுக்கு உணர் ச்சி கிடைத்தது. சந்தோசம் அடைந்தான். சிறுமியாக இருந்ததாலோ தெரியவில்லை தான் எப்படி அங்கு வந்தேன் என்ன நேர்ந்தது தனது பெற்றோர் யார் எந்த ஊர் என்ற தகவல்கள் எதுவும் அவளால் பீற்றருக்கு சொல்ல முடியவில்லை. அவளுக்கேற்பட்ட விபத்தில் மறந்து விட்டாள் போலும். காற்றின் வேகத்தால் அக்கப்பல் கிரனைட் கற்பாறைகற்களுடன் தான் மோதி உடைந் ததற்கான அறிகுறி கள் சில மட்டும் தென்பட்டனவே தவிர கப்பலில் சிறுமியுடன் பயணம் செய்தவர் களில் ஒருவரையும் அக்குடாவில் வாழ்ந்த மீனவர்களுக்கு தேடிக் கண்டுபிடிக்க முடியாது போய் விட்டது. இறுதியில் சக மீனவர்களது விருப்பத்துடன் தானே அச் சிறுமியை வளர்ப்பதாகத் தீர்மானித்தான். இதனைக் கேள்வியுற்ற பீற்றரது மனைவி யும் அளவிலா மகிழ்ச்சி அடைந்தாள். கடலில் கிடைத்த முத்து (Pearl) அல்லது சிறிய அதிசயம் (Little Miracle) என்ற பொருள் கொண்ட பெக்கி (Peggy**) என்ற பெயரை அச்சிறுமிக்குச் சூட்டினார் கள். நாளடைவில் அக்குடா பெக்கியின் குடா (Peggy's Cove) எனப் பெயர் பெற்றது. காலம் போனது பெக்கியும் வளர்ந்து பெண் ஆக வந்து விட்டாள். அன்பாக பெக்கி எனச் சிறுமியைத் தான் அழைப்பது வழமை. வளர்ந்ததும் பெக்கிக் குச் சமமான மார் கிறட் என்ற பெயரைச் சூட்டினார்கள். மார் கிறட் என்ற பெயரும் பெருமை பெற்றது. இப்போ அந்தக் கடல் பகுதியும் மார் கிறட்டின் வேய் (Margaret's Bay) எனப் பெயர் பெற்றது.

பெக்கியின் குடா (Peggy's Cove) வில் உயர்ந்த பளிங்குக் கற்பாறைகற்கள் உள்ள பகுதியில் கப்பல் பயணிகளுக்கு வழிகாட்டுவதற்காக மரத்தூண்கள் கொண்டு முதல் வெளிச்சவீட்டை 1868 ஆம் ஆண்டில் மீனவ சமூகங்கள் ஒன்றி ணைந்து நிறுவினார்கள். இந்த வெளிச்ச வீட்டின் பயனும் பயன்பாடும் அதிகரித்தது. அரசாங்கத்தினால் 1914ஆம் ஆண்டில் கம்பிகள் கொங்கிறீட் கொண்டு 50அடி உயரமும் எட்டுப் பக்கச் சுவர் கொண்ட வெளிச்சவீட்டையும் இயக்குபவர் தங்க அருகில் ஓர் அறையும் கட்டப்பட்டது. 1958 இல் வெளிச்சவீட்டை இயக்குபவர் இன்றி இயங்கத் தானியங்கியாக்கப்பட்டது. வெளிச்சவீட்டில் வெள்ளை நிற ஒளி தான் பாவனையில் இருந்து வந்தது. இறுதியாக உலகத் தரத்திற்கு அமைய 2007-ல் சிவப்பு ஒளி மிளிரும் வண்ணம் மாற்றப் பட்டது. இன்றும் கண்கவர் கம்பீரமாக



நின்று காட்சி தருவதனால் மட்டுமல்ல சிறுமி பெக்கியின் கதையை ஞாபகப் படுத்தவும் அதிசயம் நிகழ்ந்த பகுதியைக் காணப் பார்வையாளர்கள் நிறைந்து காணப்படுகின்றனர். நோவா ஸ்கோஷியா மாகாணத்தில் அதிக எண்ணிக்கையான விருந்தாளிகள் கண்டு களித்த இடமாகப் பெக்கியின் கோவ் (Peggy's Cove) இருக் கிறது. இந்தக் கடல் பகுதியில் இயற்கை யாகவும் கூடுதலாகவும் சிங்க இறால் (லொப்ஸ்ரர் - Lobster) என்ற கடல் உயிரினம் கிடைப்பது ஒரு சிறப்பம்சம்.

விருந்தாளிகள் வெளிச்சவீட்டையும் பிரமி க்க வைக்கும் இயற்கை எழில் மிகு காட்சி களை கண்டு களிப்பதும் அவற்றை புகை படங்களாக்கி எடுத்துச் செல்வதும் மட்டு மல்ல அருகில் அமைந்துள்ள உணவ கத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் உயிருள்ள சிங்க இறால்களை தூக்கி அழகு பார்க்கிறார்கள். சமைத்த லொப்ஸ் ரர் கடலுணவை சுவைத்தும் பார்க்கி றார்கள். உள்ளூர் கலைஞர்கள் மற்றும் உள்ளூர் மக்கள் செய்த கைவேலைச் சிற்பங்கள் அருகில் அமைந்துள்ள கடையில் (Gift Shop) பரிசு பொருட்களை ஞாபகார்த்தமாக வாங்கி செல்கிறார்கள்.

*புதிய ஸ்கொட்லாந்து லத்தீன் மொழியில் நோவா கோஷியா (Nova Scotia means New Scotland in Latin)

** Peggy- little pearl nickname from the name Margaret another meaning 'pearl'

# வேண்டும் சங்கங்கள்



சங்கங்களால் மக்கள் சாதித்தல் கூடும்
பெரும் பெரும் காரியங்கள்
சிங்கங்கள் போல் பலம் சேர்ந்திடும்
யாவரினதும் ஒற்றுமையால்
பொங்கிடும் நிலவெனப் பூரிக்கும் நெஞ்சத்தில்
புதுப் புதுத் திட்டங்கள்
சங்கங்களின் சட்ட திட்டங்களை யாவரும்
ஏற்று நடக்க வேண்டும்
அங்கம் வகித்து அதில் அன்பினை மேற்கொண்டு
முன்நின்று உழைக்க வேண்டும்
எங்கும் சொல்ல வைக்க வேண்டும் எமது சங்கம்
நல்வழிகாட்டும் சங்கமென
சங்கம் எழுவதிலோ சாய்வதிலோ யாவும்
சங்கத் தலைமையிலே தானுண்டு
ஏற்றதொரு தலைமை அமைந்து விட்டால்
எல்லாமே சாத்தியமாகும்
கூட்டிடவும் கொள்கை நாட்டிடவும் யாவரும்
முன்வந்து நிற்கவேண்டும்
அங்கத்தவரிடை வில்லங்கங்கள் ஏற்படின்
பங்கங்கள் ஏற்படும் சங்கத்தில்
தூய நல் எண்ணங்கள் அங்கத்தவரிடை தோன்றிடில்
இன்பங்கள் பொங்கும் சங்கத்தில்
தமிழர்களுக்கு உதவவெனத் தமிழ்ஈழ சங்கம்
முதியோர்க்கு உதவவென முதியோர் சங்கம்
இன்னும் பல சங்கங்கள் இயங்கினாலும் அவை
நல்வழிநாடிச் செல்ல வேண்டும்
சங்கங்கள்



கவிநாதம் பரந்தாமன்


CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# கனடாவின் பழங்குடியினரும் ஈழத்தமிழரும் – 5



குரு அரவிந்தன்


ஈழத்தமிழர்கள் எப்படி இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் முதற்குடி மக்களாக இருக்கிறார்களோ அதேபோல, வட அமெரிக்காவில் பல வருடங்களுக்கு முன் வாழ்ந்த பழங்குடி மக்கள் எல்லோரையும் முதற்குடிகள் என்றே தற்போது அடையாளம் காண்கின்றனர். இவர்களை அடையாளம் காண்பதற்காகக் கனேடிய அரசு பல வழிகளிலும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அவர்கள் வாழ்ந்த பகுதிகளை இனங்கண்டு அந்தந்த இடங்களை அவர்களுக்காக ஒதுக்கிக் கொடுத்திருக்கின்றது. அனேகமான முதற்குடி மக்களின் அடுத்த தலைமுறையினர் தாங்கள் வாழ்ந்த பகுதிகளை விட்டு வெளியேறி தங்களுக்கு வசதியான இடங்களைத் தேர்ந்தெடுத்து வாழப் பழகிக் கொண்டு விட்டனர்.




இவர்களில் குறிப்பிட்ட தொகையினர் கல்வி அறிவு பெற்றவர்களாக இருக்கின்றனர். கனடாவின் வடக்கு, மேற்குப் பகுதிகளுக்குச் சென்றபோது அவர்கள் வாழ்ந்த சில பகுதிகளைக் காணமுடிந்தது. அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இப்பகுதிகளை முன்பு பொதுவாக 'இன்டியன் றிசேவ்' என்று அழைத்தார்கள். முதற்குடிகளின் கட்டுப் பாட்டில் இருந்த அரசை பான்ட் (Band) என்று அழைத்தார்கள். கனடா முழுவதும் இப்படியான அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட சுமார் 2300 பகுதிகள் இருப்பதாகத் தெரிகின்றது. இப்படி ஒதுக்கப்பட்ட பகுதிகள் சுமார் 11,000 சதுர மைல்களைக் கொண்டிருக்கின்றன. இதில் சுமார் 960 பகுதிகளிலேயே முதற்குடிமக்கள் ஓரளவு வாழ்கிறார்கள். பதிவு செய்யப்பட்ட 638,000 ஆயிரம் முதற்குடிமக்கள் இப்பகுதிகளில் செறிந்து வாழ்வதாகவும் தகவல் தெரிவிக்கின்றது. 1876 ஆம் ஆண்டு இன்டியன் உரிமைச் சட்டத்தின்படி இவர்களின் உரிமைகள் கனடாவில் பாதுகாக்கப் பட்டிருக்கின்றன.

சட்டத்தின்படி முதற்குடி மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டாலும் நடைமுறைப்படுத்துவதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. உதாரணமாக இலங்கையில் தமிழ் மொழி அரசகரும மொழியாக இருந்தாலும் அனேகமான சந்தர்ப்பங்களில் அதை நடைமுறைப்படுத்துவதில்லை. ஊழியரின் பற்றாக் குறை என்று சொல்லித் தட்டிக் கழித்து விடுவார்கள்.

வெளி உலகிற்கு எல்லா வசதிகளும் சிறுபான்மை இனத்தவர்களுக்குக் கிடைப்பது போலத் தெரிந்தாலும், பொதுவாக அவை கிடைப்பதில்லை. அதுபோலத்தான் கனடாவிலும் முதற்குடி மக்களின் அரசியல் பாதுகாப்பும் இருக்கின்றது. முதற்குடிமக்கள் (Indigenous) வாழ்ந்த பாரம் பரிய பகுதியில் உள்ள அனேகமான வீடுகள் எல்லா அடிப்படை வசதிகளையும் கொண்டனவாக இல்லை என்பது பெரும் குறையாக இருக்கின்றது. குறிப்பாக தீ விபத்தில் இருந்து வீடுகளையும், அதில் வாழும் மக்களையும் காப்பாற்றுவதற்கான வசதிகள் முழுமை பெறவில்லை என்றே கூறலாம். சில வாரங்களுக்கு முன் 78 வயதான டர்வின் என்ற முதற்குடிமகன் ஒருவர் அதிகாலையில் ஏற்பட்ட தீவிபத்தால் மரணமடைந்தார். 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை சுமார் 175 முதற்குடி மக்கள் தீவிபத்தினால் கொல்லப்பட்டிருக்கிறார்கள். கனடாவில் உள்ள ஏனைய மக்களோடு ஒப்பிடும்போது இவர்களுக்குத் தீயினால் ஏற்படும் பாதிப்பு அதிகமாக இருக்கின்றது. தீவிபத்தை இப்பகுதிகளில் தடுப்பதற்கு மேலதிக தன்னார்வத் தொண்டர்களுக்குப் பயிற்சி கொடுப்பது பற்றியும் ஆராயப்பட்டது. முதற்குடி மக்களின் வீடுகளில் எச்சரிக்கை அலாரம் பொருத்துவது பற்றியும், அவற்றைத் தகுந்த முறையில் பராமரிப்பது பற்றியும் அப்போது ஆலோசனை வழங்கப்பட்டது. எச்சரிக்கை அலாரம் இருந்தாலும் அவற்றைத் தகுந்த முறையில் பராமரிக்காவிட்டால், அவை பலனற்றதாகிவிடும்.



## கனடாவின் 150ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வெளியாகும் கட்டுரை.




இதேபோல முதற்குடி மக்கள் சிலரின் சமீபகால மரணங்கள் பற்றியும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. தண்ணீரில் மூழ்கியதால் மரணம் ஏற்பட்டதாகச் சொல்லப்பட்டாலும் அதற்குரிய காரணம் தெளிவாக விசாரிக்கப்படவில்லை என்ற குறையும் அவர்களுக்கு இருக்கின்றது. றெயினிறிவர் பகுதியில் சமீபகால மரணமான 41 வயதான டிபஞ்ஜி, 14 வயதான ஜோசிபெக், 17 வயதான கியாஸ் ஆகியோரின் மரணங்களுக்கான காரணம் சரியாகத் தெரியவில்லை. இதில் கியாஸ் நன்றாக நீந்தக்கூடியவர் என்பதும், அவர் தண்ணீரில் எப்படி மரணமானார் என்பதும் சுட்டிக் காட்டப்பட்டது. தண்டபே பகுதியில் உள்ள முதற்குடி மக்களில் ஏழு பதுமவயதினர் 2000 ஆண்டுக்கிடையில் இவ்வாறு இறந்திருப்பது கவலைக்குரியதாக இருக்கின்றது. ஏனைய சமுதாயத்தோடு பார்க்கும் போது, முதற்குடி மக்களில் தற்கொலை செய்பவர்களின் தொகையும் ஐந்து மடங்கு அதிகமாக இருப்பதாகத் தெரிகின்றது. உயர்கல்வி கற்பதற்கு முதற்குடி மக்களின் பிள்ளைகள் நகரத்திற்கு வரவேண்டி இருப்பதால் சில பெற்றோர்கள் அதை அனுமதிப்பதில்லை என்ற குறையும், அதனால் முதற்குடியைச் சேர்ந்த பிள்ளைகளின் உயர்கல்வி தடைப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது.

குடிநீர், போக்குவரத்து, உணவு போன்ற காரணங்களுக்காக ஏரிகள், ஆற்றங்கரைகளிலேயே அனேகமான முதற்குடிமக்களின் கிராமங்கள் அமைந்திருந்தன. முன்பெல்லாம் அனேகமான மரணங்களுக்குக் காரணம் தெரிந்திருக்கவில்லை. சமீபத்தில் குடிநீரில் ஈகோலி (Escherichia Coli) என்ற பக்ரிறியா அதிக அளவில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதால் அப்பகுதியில் வாழ்ந்த முதற்குடிமக்கள் பாது காப்பான வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். ஆனாலும் தங்கள் பாரம்பரிய மண்ணை விட்டுப் போவதற்கு அவர்கள் விரும்பவில்லை. பக்ரீறியாவின் தாக்கத்தைக் குறைப்பதற்கு அதிக அளவில் குளோறின் பாவிக்கப்பட்டதால் அங்கிருந்தவர்களில் சிலர் சரும வியாதிகளுக்கு உள்ளாகினர். கொதிக்க வைத்த தண்ணீரைப் பாவிக்கும்படி அறிவுறுத்தப்பட்டாலும், பழைமையில் ஊறிப்போன முதற்குடி மக்களின் கிராமங்களில் இப்டியான நடைமுறைச் சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது.

முதற்குடி மக்களைப் பற்றி அறிந்து கொள்வதற்காக அவர்கள் வாழ்ந்த சில பகுதிகளை நேரடியாகச் சென்று பார்க்க விரும்பினேன். இம்முறை பாடசாலை விடுமுறை அதற்கு உதவியாக இருந்தது. வேலை செய்யும் இடத்தில் மூன்றுவார விடுப்பு எடுத்துக்கொண்டு, அல்பேட்டா மாகாணத்தில் உள்ள றொக்கி மலைத் தொடரில் பான்வ் (Banff) என்ற மலைப் பகுதிக்கு முதலில் சென்றேன். அங்கே தங்கி இருந்தபோது முதற்குடி மக்களைப் பற்றிய சில அருங்காட்சியகங்களைக் காணமுடிந்தது. அப்பகுதியில் வாழ்ந்த முதற்குடி மக்களின் வாழ்க்கை வரலாறு, அப்பகுதியின் இயற்கை அமைப்பு, அங்கு இருந்த மிருகங்கள், பறவைகள் பற்றிய விளக்கங்கள், அவற்றின் பழக்க வழக்கங்கள் பற்றிய புகைப்படங்களும், செயற்கையாகச் செய்யப்பட்ட மிருகங்கள், பறவைகளின் உருவ அமைப்புக்களையும் அங்கே காணமுடிந்தது.

LOANS & MORTGAGES.... that meets your needs
$5,000...$35,000...$50,000...$100,000...1Million...
MORTGAGE ALLIANCE
Corporate Office:
2005 Sheppard Ave E.
Suite 200, Toronto ON M2J 5B4
Toll Free: 1-877-366-3487
- Commercial Mortgages.
- 2nd Mortgages.
- Construction Mortgages.
- Secured Credit line.
- Unsecured Loans.
SAM SURENDRAN
Mortgage Agent Lic# 16002312
647-922-5704
Twitter @OK_Mortgages


# மாணவி வித்தியாவின் கொலை தொடர்பில் வெளியாகும் அதிர்ச்சித் தகவல்கள்!

- ஆதித்தன் -

யாழ். புங்குடுதீவு மாணவி வித்தியா பாலியல் வல்லுறவின் பின் படுகொலை செய்யப்பட்ட வழக்கு தற்போது ட்ரயல் அட் பார் தீர்ப்பாயத்தில் விசாரணை செய்யப்பட்டு வருகின்ற நிலையில் பல அதிரச்சிகரமான தகவல்கள் வெளியாகி வருகின்றன. வித்தியா படுகொலைச் சம்பவம் வெளிநாடுகளிலிருந்து திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டது என்றும், இதற்காகப் பல கோடி ரூபா பணம் கைமாறப்பட்டிருப்பதாகவும் சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது. இக்கொலை சந்தேக நபர்களில் ஒருவரான சுவிஸ் குமார் என்பவர் தன்னை விடுவித்துக் கொள்வதற்கு 20 மில்லியன் ரூபா பேரம் பேசியிருப்பதாகவும் நீதிமன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சந்தேக நபர்களிடம் ஒரு வருடம் புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், சட்டமா அதிபரின் மேற்பார்வையின் கீழ் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதி நிலைநாட்டப்படும் என்ற நம்பிக்கையில் தற்போது விசாரணைகள் நடைபெறுகின்றன.

ஒன்பதாவது சந்தேகநபரான சுவிஸ் குமார் தொடர்பில் பல விடயங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. பல கோடி ரூபாய்களுக்கு சர்வதேச நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கு அமைய சம்பவம் அரங்கேற்றப்பட்டுள்ளது எனவும், மாணவி வித்தியாவை பாலியல் வல்லுறவிற்குட்படுத்தி அதனை நேரடி ஒளிபரப்புச் செய்வதற்காக ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், இதற்காகப் பணப் பரிமாற்றமும் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இரண்டு நபர்கள் இச்சம்பவத்தை வீடியோவாகத் தொகுத்து விற்பனை செய்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வீடியோ பதிவாகியிருந்த கையடக்கத் தொலைபேசியில, இருந்து அக்காட்சி அழிக்கப்பட்டுள்ள போதும் அதனை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



சந்தேக நபர் சுவிஸ் குமாரிடம் புலன் விசாரணை மேற்கொண்ட அதிகாரியிடம் தன்னை விடுதலை செய்தால் 20 மில்லியன் ரூபா பணம் தருவதாகப் பேரம் பேசப்பட்ட தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வழக்கில் 13 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவரும் சாட்சியம் அளித்துள்ளார். சாட்சி வழங்க ஆரம்பித்து சற்று நேரத்தில் அம்மாணவன் மயங்கி விழும் நிலையில் இருந்துள்ளார். இதனைத் தொடர்ந்து 10 நிமிடம் சாட்சியினைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையை ஒத்தி வைக்குமாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர். அதன் பின்னர் 10 நிமிடத்தில் மீண்டும் குறித்த மாணவர் சாட்சி வழங்கியுள்ளார். சம்பவ தினத்தில் குறித்த பகுதியில் முனகல் சத்தம் கேட்டதையும், சந்தேக நபர்களில் ஒருவர் அப்பகுதியில் நடமாடியதையும் மாணவனின் சாட்சியம் வெளிப்படுத்தியுள்ளது.

மாணவி வித்தியாவின் உயிரிழப்புக்கு மூன்று காரணங்களைக் கூறலாம் என நிபுணத்துவ சாட்சியமளித்த சட்ட மருத்துவ அதிகாரி ட்ரயல் அட்பார் தீர்ப்பாயத்தில் தெரிவித்துள்ளார். ஒன்று தலையில் ஏற்பட்ட காயத்தால் அதிக குருதிப் பெருக்கு ஏற்பட்டு உயிரிழப்பு சம்பவித்து இருக்கலாம். அது சில மணி நேரங்களில் தான் உயிரிழப்பை ஏற்படுத்தும். இது உள்ளக குருதிப் பெருக்கு. அதனை கட்டுப்படுத்துவது கடினம். சத்திர சிகிச்சை மேற்கொள்ளவும் முடியாது. ஆனால் உடனடியாக சிகிச்சை வழங்க முடியும். ஆனால் சிகிச்சையின் மூலம் காப்பாற்ற முடியும் என நிச்சயமாகக் கூற முடியாது எனவும், இரண்டாவது, கழுத்துப் பட்டியால் கழுத்தை நெரித்தும் கட்டியதால் கழுத்து இறுகி உயிரிழப்பு ஏற்பட்டிருக்கலாம். அதுவும் சில நிமிடத்தில் உயிரிழப்பை ஏற்படுத்தும் எனவும், மூன்றாவது வாய்க்குள் உள்ளாடையை திணித்தமையால் சுவாசப் பாதை அடைக்கப்பட்டு உயிரிழப்புச் சம்பவித்து இருக்கலாம். வாய்க்குள் உள்ளாடையை திணித்தமையால் மூச்சு திணறல் ஏற்பட சந்தர்ப்பம் குறைவு. ஏனெனில் மூக்கினால் சுவாசிக்க முடியும். ஆனால் வாய்க்குள் திணிக்கப்பட்ட துணி உமிழ் நீர் சுரப்பினால் ஈரமாகி அதனால் துணி பாரம் கூடி தானாக தொண்டைக் குழியை நோக்கி உட்சென்று சுவாசப் பாதையை அடைத்து இருக்கலாம். அல்லது தொண்டை குழி வரையில் துணியை அடைந்து இருக்கலாம். அவ்வாறாயின் அந்த உயிரிழப்பு சில நிமிடங்களுக்குள் நிகழலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

வித்தியாவின் உடலில் 8 காயங்கள் இருந்தன. வித்தியாவின் பின் பக்கம், தலை, இடுப்பு, மற்றும் காலில் முள் குத்திய அடையாளங்களும், கன்னம், உதட்டிலும் காயங்கள் இருந்தன. பரிசோதனை செய்தபோது கூட்டு வன்புணர்விற்கான காயங்கள் இருந்தன எனவும் சட்ட வைத்திய அதிகாரி சாட்சியம் அளித்துள்ளார்.

இவ்வழக்கில் சட்டத்தரணியும் கொழும்பு பல்கலைகழகத்தின் சட்ட பீடாதிபதியுமான வீ.ரி.தமிழ்மாறன் சாட்சியம் வழங்க அழைக்கப்பட்டார். உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் என்பவரும் மற்றொரு பொலிஸ் உத்தியோகத்தரும் தனது காரில் புங்குடுதீவு வந்தனர் எனவும், அங்கு அவர்கள் ஒருவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டனர் எனவும், சந்தேகநபர் ஒருவர் சரணயடையவுள்ளார் என்று அவர்கள் தனக்குத் தெரிவித்தனர் எனவும் அவர் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

“சுவிஸ்குமார் மனைவி, கைக்குழந்தை, தாய் ஆகியோருடன் சரணடைந்தார். பொலிஸாரின் வாகனம் வரத் தாமதமடையும் என்பதால் எனது வாகனத்தில் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றோம். அங்கு ஒரு வாங்கில் அவர்களை உட்கார வைத்தனர். நான் வீடு சென்றுவிட்டேன். மறுநாளே சந்தேகநபரான சுவிஸ்குமார் விடுவிக்கப்பட்டார் என்பது தெரிந்தது. சரணடைந்தவர் மீது குற்றச்சாட்டோ, முறைப்பாடோ இல்லாததால் அவர் விடுவிக்கப்பட்டார் என்று சீனியர் டி.ஐ.ஜி அப்போது நடைபெற்ற மக்கள் சந்திப்பில் தெரிவித்தார். கூட்டத்தில் மக்கள் சுற்றிவளைத்ததால் சீனியர் டி.ஐ.ஜி புங்குடுதீவு கடற்படையிடம் என்னை ஒப்படைத்தார். அங்கிருந்து காங்கேசன்துறை சென்று பின்னர் கொழும்பு சென்றேன்” என்று அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்தார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள் ஏனைய சந்தேகநபர்கள் இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்திலேயே கைது செய்யப்பட்டிருந்தனர் என்பதைச் சுட்டிக்காட்டினர். இதனால் இந்தச் சாட்சியத்தை ஏற்க முடியாது என்றும் குறிப்பிட்டனர். எனினும் பின்னர் அரச தரப்பு சட்டத்தரணிகளின் வேண்டுகையின் அடிப்படையில் சாட்சியத்தைத் தொடர அனுமதித்தனர். இந்த வழக்கில் இதுவரையில் 10 சாட்சியங்கள் சாட்சியமளித்துள்ள நிலையில் இன்னும் 40 சாட்சியங்கள் சாட்சியமளிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். புங்குடுத்தீவு பகுதியில் 2015 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி மாணவி சிவலோகநாதன் வித்தியா கூட்டு பாலியல் வன்புனர்விற்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். யாழ். மேல் நீதிமன்றில் வழக்கு விசாரிக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது ரயல் அட் பார் முறையில் வழக்கு விசாரணைகளை மேற்கொள்வதற்கு பிரதம நீதியரசரால் மூன்று நீதிபதிகள் நியமிக்கப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. நீண்ட காலமாக இழுபட்டு வந்த இந்த வழக்கு விசாரணைகள் விரைவில் நிறைவு



பெற்று குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பது வித்தியாவின் குடும்பத்தினருக்கு மட்டுமல்லாமல் அனைவரதும் எண்ணமாகவுள்ளது. இக்கொலையில் நேரடியாக சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய தண்டணை வழங்கப்படுவதோடு இதில் மறைமுகமாக சம்மந்தபட்டவர்கள், சர்வதேச பின்னணியில் இருந்து செயற்பட்டவர்கள் அனைவரும் தண்டனைக்குள்ளாக்கப்பட வேண்டும்.

குற்றவாளிகளை காப்பாற்ற முயன்றவர்களும் இனங்காணப்பட்டு, அவர்களுக்குரிய தண்டனையும் விதிக்கப்படல் வேண்டும்.

27 வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™

| | |
|---|---|
| பதிப்பாளர்: | ராஜா மகேந்திரன் |
| பத்திரிகை ஆசிரியர்: | சத்தியா மகேந்திரன் |
| பத்திரிகை முகாமையாளர்: | கமல் செல்லையா |
| ஊடகப்பொறுப்பாளர்: | விஜய் செல்லையா |
| தட்டச்சு: | கலா விஜயபாலன் |
| அலுவலக பொறுப்பாளர்: | செல்வி ரஞ்சன் |
| | தாரணி இந்திரராஜ் |

பதிப்பு: Canyon Press Inc.

**Vlambaram Publications Inc.**
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com / www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை ‘விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்’ ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

MATH WORLD
MOST ADVANCED TALENTED HELP
- A private math institute -

"Teaching Experience in Math for more than 23 years"

Students & Parents!

# Advanced Function G12

for School year Sept. 2017, Starting July 2nd

# 90%

& above

With more than 23yrs of experience in teaching math

Guaranteed Results
**Money Back Guaranteed**

G11- Function
G10- Advanced level
Starting 1st week of July

Limited Space

**416-666-5515**

61 Snowy Owl Way (Markham & Steeles)

# மகாநாயக்கர்களின் போர்க் கொடி!

**-விகிர்தன்**

உத்தேச அரசியலமைப்பு தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வினைக் கொண்டுவரும் என்ற உறுதிப்பாடுகள் வெளியிடப்பட்டு வருகின்ற நிலையில், அந்த அரசியலமைப்பு இன்று கடும் எதிர்ப்பிற்குள்ளாகி வருகின்றது.

மஹிந்தவிற்கு ஆதரவான தரப்பினர் இதனை தொடர்ந்து விமர்சித்தும், எதிர்த்தும் வருகின்றமை ஒரு புறமிருக்க, தற்போது பௌத்த மகாநாயக்கர்கள் எதிர்ப்பு தெரிவித்திருப்பது அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. மஹிந்த ஆதரவாளர்கள் சிங்கள மக்கள் மத்தியில் மேற்கொண்டு வரும் இனவாத பரப்புரைகளுக்கு உதவுவதாகவே மகாநாயக்க தேரர்களின் நடவடிக்கை அமைந்துள்ளது. இலங்கையிலுள்ள நான்கு பிரதான பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் மற்றும் பௌத்த சபைகள் கூடி தங்களது எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளனர்.

பிரதான பௌத்த பீடங்களான அஸ்கிரிய, மல்வத்த மற்றும் அமரபுர உள்ளிட்ட பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் மற்றும் பௌத்த சபைகள் கண்டியில் கூடி இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதோடு அதனை அவர்கள் ஜனாதிபதிக்கும் அறிவித்துள்ளனர். புதிய அரசியலமைப்பு நாட்டிற்கு தேவையில்லை எனவும், இது பிரச்சனையை ஏற்படுத்துகின்ற விடயம் என்றும் பௌத்த பீடங்களினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. புதிய யாப்பு நாட்டிற்கு பொருத்தமற்றதாக இருப்பதால் தற்போது நடைமுறையிலுள்ள அரசியல் யாப்பை தொடர்ந்து பேணுவதுதான் பொருத்தமானதாக இருக்கும் என்றும் பௌத்த பீடங்களின் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

பௌத்த மதத்திற்கு இந்த அரசியல் யாப்பில் முன்னுரிமை வழங்கப்பட மாட்டாது என்கின்ற இனவாதிகளின் பொய்யான பரப்புரைகளையும் மகாநாயக்க தேரர்கள் நம்புகின்றனர். அதுமட்டுமன்றி, தற்போது நடைமுறையில் உள்ள பயங்கர வாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கும், பௌத்த பீடங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள் ளன. பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தை நாடாளுமன்றில் நிறைவேற்று வதற்கும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாநாயக்க தேரர்களின் இந்தக் கருத்துக்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பு தற்போது சாடியுள்ளது. புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டு விரைவில் நடைமுறைக்கு வரும் என்றும் அது தமிழ் மக்களுக்கான தீர்வினைக் கொண்டு வரும் என்றும் அடிக்கடி நம்பிக்கை வெளியிட்டு வரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் நாடாளுமன்றில் உரையாற்றும் போது, நாட்டின் முக்கிய விடயங்கள் குறித்த சட்டத்தை நான்கு பேர் கூடி தீர்மானிப்பதாக இருந்தால், சட்ட வாக்க உயர்பீடமாகவுள்ள நாடாளுமன்றம் எதற்கு என கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த எதிர்ப்புகளினால் புதிய அரசியலமைப்பை தயாரிக்கும் பணிகளிலிருந்து அரசாங்கம் பின்வாங்க முடியாது என்றும், நாடாளுமன்றமே சட்டவாக்க அதிகாரத்தைக் கொண்ட உயர்பீடம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அரசியல- மைப்பை தயாரிக்கும் பணிகள் தோல்வியடையுமாயின் அது நல்லிணக்கத்துக்கான தோல்வியாகவே அமையும். தடைகள் ஏற்படும்போது அரசாங்கம் புறமுதுகிட்டு ஓடாது மக்களுக்கு வழங்கிய ஆணையை நிறைவேற்ற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். சில சிங்கள அரசியல்வாதிகளும் தேரர்களின் கருத்தை விமர்சித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. புதிய அரசியல் சாசனத்தில் பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், மகாநாயக்க தேரர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பது பொருத்தமற்றதென தென் மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரிய தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஆட்சி முறை உள்ளிட்ட சகல விடயங்களிலும், மகாநாயக்க தேரர்கள் நடுநிலையான கொள்கைகளை கடைப் பிடிப்பது அவசியமென அவர் குறிப்பிட்டுள் ளார். மாகாநாயக்க தேரர்கள் தங்களின் நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். மல்வத்து பீடத்தின் துணை மகாநாயக்க தேரர் திம்புல்கும்புரே விமலதம்ம தேரர் மகாநாயக்கர்களின் நடவடிக்கையை கண்டித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஸவை முன்னிலைப்படுத்தி அரசியலில் ஈடுபடும் தரப்பினர் புதிய அரசியல் யாப்பிற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதில் எந்தவொரு நியாயப்படும் இருப்பதாக தெரியவில்லை என மல்வது பீடத்தின் துணை மகாநாயக்கர் தெரிவித்திருக்கின்றார். மஹிந்த தரப்பினர் மனதில் கற்பனை செய்து கொண்டு அரசியல் யாப்பிற்கு எதிராகக் குரல் கொடுத்து வருவதாக அவரை சந்திக்கச் சென்றிருந்த முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஸவிடம் அவர் கூறியுள்ளார்.

இன்னமும் தயாரிக்கப்படாது இருக்கும் புதிய அரசியல் யாப்பிற்கு எதிராக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ விற்கு ஆதரவாக அரசியலில் ஈடுபட்டு வரும் தரப்பினரின் நடவடிக்கை வயிற்றில் இருக்கும் சிசுவிற்கு சாதகக் குறிப்பொன்றை எழுதுவது போன்றது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.



மல்வது பீட மாகாநாயக்கத் தேரர் புதிய அரசியல் யாப்பிற்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பில் இவ்வாறு கருத்துக்களை தெரிவித்த நிலையிலும் அவருடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த கோட்டாபய ராஜ பக்ஸ, புதிய அரசியல் யாப்புத் தயாரிப்புப் பணிகள் அவசியமற்றது என்று கூறியதுடன் அதனை தான் முழுமையாக எதிர்ப்பதாக வும் தெரிவித்துள்ளமை இங்கு சுட்டிக் காட்டத்தக்கது.

நாட்டின் ஜனாதிபதியும், பிரதமரும் தேரர்களை சமாளிக்கும் நடவடிக்கைகளில் மட்டும் ஈடுபட்டு வருகின்றமையினை அவதானிக்க முடிகின்றது. ஒற்றையாட்சி முறைமைக்கோ, பௌத்த மதத்திற்கான முன்னுரிமைக்கோ பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் எந்தவொரு அரசியலமைப்பு மறுசீ ரமைப்பும் மேற்கொள்ளப்படாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேரர் களிடம் உறுதியளித்துள்ளார். அஸ்கிரிய, மல்வத்தை, ராமன்ன பீடங்களின் மகாநாயக்கர்கள், மற்றும் 22 பௌத்த பிக்குகள் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

புதிய அரசியலமைப்பு தொடர்பில் உருவாக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு செயற்குழுவில் தான் தலைவர் பதவியில் உள்ளவரையில் பௌத்த மதத்துக்கு உரிய முதலிடத்தை இல்லாமலாக்க இடமளிக்க மாட்டேன் என பிரதமர் ரணில் விக்கிரம சிங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். இதேவேளை, புதிய அரசியலமைப்பில் சமஸ்டி, வடக்கு-கிழக்கு இணைப்பு ஆகிய வற்றிற்கு வாய்ப்பே இல்லை என தேசிய கலந்துரையாடல்கள், சமூக நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளமையினையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது.

அதிகாரப் பரவலாக்கள், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைய ஒழித்தல், தேர்தல் முறை மாற்றம் உள்ளிட்ட விடயங் களை செய்ய வேண்டும் என்பது மக்களின் ஆணை. புதிய அரசியலமைப்பின் ஊடாக வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப் படாது. மேலும் தற்போது நடைமுறை யிலுள்ள யாப்பிற்கு அமைய, பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமையை இல்லாமல் செய்யப் போவதும் இல்லை.

எனினும், அதிகாரப் பரவலாக்கள், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழித்தல் உள்ளிட்ட விடயங்களை முன்னிறுத்தி புதிய அரசி யலமைப்பு உருவாக்கப்பணிகள் நடைபெற்று வருகின்றன என அவர் தெரிவித்துள்ளார். உண்மையில் புதிய அரசியலமைப்பில் உள்ளடக்கப்படும் விடயங்கள் இவைதாம். இதற்கே இவ்வளவு எதிர்ப்புகள் காட்டப்படுகின்றன.

உத்தேச அரசியலமைப்பின் என்னென்ன விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்கிற கலந்துரையாடல்களே நடைபெற்று முடிவடைந்துள்ளன. அதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அதன் முன்மொழிவுகளை முன்வைத்துள்ளது. சில விடயங்கள் ஏற்றுக் கொள்ளப்படாவிடினும் சில ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக வடக்கு கிழக்கு இணைப்பு, சமஸ்டி என்ற பதம் ஆகியன நிராகரிக்கப்பட்டுள்ளன. அதிகாரப் பகிர்வு என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பொலிஸ், காணி அதிகாரங்கள் கேள்விக்குறியாகவே உள்ளன. இவ்வகையில் இறுதித் தீர்வு என்பது எவற்றை உள்ளடக்கியதாக இருக்கும் என்பது எவருக்கும் தெரியாது.

பௌத்த தேரர்களின் ஒப்புதலைப் பெற்றே புதிய யாப்பு நாடாளுமன்றில் நிறைவேற்றப் படுமாயின் அது எந்த நிலையில் அமையப் போகின்றது என்பதை யாரும் எதிர்வுகூற முடியாது. எனவே, தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் அரசியல் யாப்பு குறித்து அதித நம்பிக்கையை தமிழ் மக்களிடம் திணிப்பதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# நாமும் நமது இல்லமும் - 491



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397
416.321.6969

கனேடிய மத்திய வங்கியின் வட்டி வீதம் அதிகரிப்பதனைப் பற்றிய விடயத்தை அதிகமாகக் பேசத் தொடங்கியுள்ளது. கனடிய பொருளாதார வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, வேலை தேடுபவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி, அமெரிக்க வட்டிவீத அதிகரிப்புக்கள் போன்றவை காரணமாகலாம்.

வட்டி அதிகரிப்பு வரலாம் என எண்ணி, அதற்குரிய ஆரம்ப நடவடிக்கைகளை தொடங்குவது புத்திசாலித்தனமாகலாம். வட்டிவீத அதிகரிப்பு அடமானக்கடன் வாகனக்கடனின் கடன், Line of credit, credit cards, வேறு கடன்கள் போன்றவற்றின் மாதாந்த கொடுப்பனவில் நிச்சயமாக மாற்றத்தை ஏற்படுத்தும்.

இதனை மனதில் ஏற்று அதற்கேற்ப முன்னேற்பாடுகள் கொள்வது எதிர்காலத்தில் நன்மை பயக்கலாம். இதற்கான சில எண்ணங்கள் கீழே

**1. அடமானக்கடனை புதுப்பித்தல்**

எதிர்வரும் ஆறு மாதங்களிற்குள் ஏற்கனவே பெற்றுக்கொண்ட அடமானக்கடனின் புதுப்பித்தல் (Renewal) வர இருந்தால், அதற்கு முன்பாக, கடன் வைத்திருக்கும் நிறுவனத்துடன் கலந்தாலோசித்து, குறிப்பிட்ட திகதிக்கு முன்பாகப் புதுப்பித்தல் சிறந்ததாகலாம். குறிப்பிட்ட நிறுவனம், நீங்கள் எதிர்பார்க்கும் அடமானக்கடனின் வட்டி வீதத்தை தர மறுத்தால் வேறு நிதி நிறுவனங்களில் உங்கள் கடனை மாற்றிக் கொள்ள கால வசதி இருக்கும். புதுப்பிக்கும் காலம்வரை காத்திராமல், முன்பாக இதற்கான ஏற்பாட்டை செய்து கொள்ளலாமா.



**2. மாறாத அடமானகடனிற்கு செல்லுதல் சிறந்ததாகலாம்**

பொதுவாக இதுவரையில் மாறுகின்ற வட்டி வீதம் (Variable mortgage rate) மிகச்சிறந்த தெரிவாக இருந்தது. 2010 இலிருந்து வட்டிவீதம் அதிகரிக்கப்படவில்லை. குறைந்தே வந்துள்ளது. இதனால் மாறுகின்ற வட்டிவீதம் (Variable Mortgage) சிறப்பாக இருந்தது. இன்றைய நிலைமை அவ்வாறு இல்லை. வட்டிவீத அதிகரிப்பினை எதிர்பார்க்கலாம். இதனால் மாறாத அடமானக்கடன் (Fixed rate mortgage) எமக்கு பாதுகாப்பாகலாம்.

குறைந்தது எதிர்வரும் 5 வருடங்களுக்கு உங்களது அடமானக்கடனின் கொடுப்பனவு மாறாது இருக்கும். 5 வருடங்களுக்குள் வாழும் மனை, வீட்டை விற்கும் நோக்கம் இருந்தால் அதற்கேற்ப, உங்களது மாறாத காலத்தை தெரிவு செய்வது சிறந்தது.

3. அடமானக்கடனின் ஒரு பகுதியை செலுத்துதல் (Pre payment) வசதிக்கேற்ப அடமானக்கடனின் ஒரு தொகையை முன்னமே செலுத்துவதால் வட்டிவீதம் அதிகரித்தாலும் கொடுப்பனவில் மாற்றம் குறைவாக இருக்கலாம். வட்டிவீதம் அதிகரிக்காமல் இருந்தாலும் வட்டியில் சேமிப்பு ஏற்படும்.

**4. ஆதனம் வாங்கும் சிந்தனை இருந்தால் முன்பாக அடமானக் கடனை பெறுதல்** (Pre approval)

பொதுவான நிதி நிறுவனங்கள் 90-120 நாட்கள் அடமானக்கடனின் வட்டிவீதத்தை மாற்றாமல் வைத்திருக்கும். எதிர்காலத்தில் ஆதனம் வாங்குவது நோக்கமாக இருந்தால் அதற்கான ஏற்பாடாக அடமானக் கடனை பெற்று (approval - commitment) அதனை வைத்திருத்தல்.

5. Line of credit **கடனைச் செலுத்துதல்**

பொதுவாக Line of credit வைத்திருப்பவர்களில் 25% ஆனவர்கள் கடனின் வட்டியை மட்டுமே மாதாமாதம் செலுத்துவதாக Federal Agency இன் அறிக்கை தெரிவிக்கின்றது. கடனிற்குரிய வட்டியை மட்டுமே செலுத்தி வருவதால், எப்பொழுதும் கடன் இருந்து கொண்டே இருக்கும். அத்துடன் வட்டிவீதம் அதிகரித்தால் மாதாந்த வட்டிக் கொடுப்பனவும் அதிகரிக்கும்.


**6. வாகனம் வாங்குவதில் கவனம் தேவை**

(தொடர்ச்சி 15 ஆம் பக்கம்...)

NO MEDICAL INSURANCE
No Questions Asked! No Medical Exams! 100% Guaranteed Approval!
Recently got cancer, heart attack, any heart conditions, stroke, high blood pressure, diabetes, or any medical conditions.
• 18 முதல் 85 வயதானவர்கள் எவரும் எந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களாயினும், எந்தக் குறைபாடு உள்ளவர்களாயினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் காப்புறுதியைப் பெறலாம்.
• விசா இல்லாதவர்களும் சுப்பர் விசாவில் உள்ளவர்களும் 78 வயதுவரை பெறலாம்
KABIS
KABIS & ASSOCIATES INC.
உங்கள் தற்போதைய காப்புறுதி பற்றிய சகல சந்தேகங்களுக்கும் உடன் அழையுங்கள்.
Does your current life insurance policy need a tune up please call me.

Nimal Subramaniam
Cell: 416.816.7994 Email:neel900@hotmail.com
La Capitale Financial Group
IA INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Assumption Life
•Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP
•Non-Medical Insurance •Travel Insurance •Super Visa Medical Coverage •Drug and Dental Plan •TFSA

# அத்தனைக்கும் ஆசைப்படு



## சத்குரு வாசுதேவ்

எது நல்லது. எது கெட்டது? உண்மையில் இதை உங்கள் உள்ளுணர்வுதான் முடிவு செய்ய வேண்டும். ஆனால் இன்றைக்கு யார் முடிவு செய்கிறார்கள்?

உங்கள் மீது சமூகத்தாலும், குடும்பத்தாலும், சுற்றியுள்ளவர்களாலும், நிறைய எதிர்பார்ப்புகள் வைக்கப்படுகின்றன. அவற்றை நிறைவேற்றினால் நீங்கள் நல்லவராகவும், நிறைவேற்றாவிடில் கெட்டவராகவும் கருதப்படுகிறீர்கள். சூதாடுவது கெட்ட பழக்கம் என்று சிறு வயதிலிருந்தே கற்பிக்கப்பட்டிருந்தாலும், வீட்டில் அதைப் பற்றிப் பேசுவது கூடக் குற்றமாகத்தோன்றும். அதேசமயம், சூதாட்ட கிளப்பில் போய் உட்கார்ந்து கொண்டால், அந்தக்குற்ற உணர்வு மாயமாய் மறைந்துவிடும். சூதாடாமல் இருந்தால்தான், அங்கே பலவீனமானவராகக் கருதப்படுவீர்கள்.

சில கொள்ளைக்காரரர் சமூகங்களில் சிறு வயதிலிருந்தே திருடுவதற்கும், கொள்ளையடிப்பதற்கும் சொல்லித் தரப்படுகிறது. அந்தக் கலையில் மேன்மை பெற, அதற்கென்று இருக்கும் கடவுள்களை வேண்டிக் கொள்ளும் பழக்கம்கூட அங்கே இருக்கிறது. அங்கு பிறந்து வளர்ந்தவராயிருந்தால், திருட்டுத் தொழிலின் சூட்சுமங்களைக் கற்றுத் தேர்ச்சி பெற்றால்தான் நீங்கள் வல்லர். நல்லவர்! வளர்க்கப்பட்ட விதத்தில், மறுபடி சொல்லிக் கொடுத்ததை வைத்துதான் நல்லது, கெட்டது என்று பிரித்துக் கொண்டீர்கள். சமூகத்தில் பார்வையில் உங்கள் நல்லவராகக் காட்டிக் கொள்ள இயல்பை மறைத்து வாழத் துவங்கினால் பிரச்சினை! இப்படித்தான். நல்லது செய்பவனே சொர்க்கத்துக்கு போவான் என்று மற்றவர்கள் சொல்லிச் சொல்லி சங்கரன்பிள்ளை மிகக் கவனமாக வாழ்ந்தார். ஒரு நாள் அவர் வாழ்க்கை முடிந்தது. அடுத்த காட்சி, சொர்க்கத்தின் வாசலில் அரங்கேறியது. அவரைக் காக்க வைத்துவிட்டு, அங்கிருந்த தேவதைகள் கூடிப் கூடிப் பேசினர். பின்பு அவரிடம் வந்தனர். 'ஒரே ஒரு கெட்டது செய்திருந்தால் முதல் மாடி, இரண்டு கெட்ட காரியங்கள் செய்தால் இரண்டாவது மாடி என்று சொர்க்கத்தில் வெவ்வேறு மாடிகள் இருக்கின்றன. ஒரு பாவம்கூட செய்யாமல் உங்களைப் போல் இதுவரை யாரும் வந்ததில்லை. உங்களை எங்கே அனுப்புவது என்று குழப்பமாக இருக்கிறது! என்றனர்.

சங்கரன்பிள்ளை அதிர்ந்தார், 'என்னது... நல்லவனாயிருந்தால் பூமியில்தான் என்னை யாரும் சேர்த்துக்கொள்ளவில்லை. இங்கேயுமா?'

'ஆமாம், மிஸ்டர் பிள்ளை! அடுத்த மூன்று மணி நேரத்துக்கு உயிரைத் திருப்பித் தருகிறோம். சீக்கிரம் போய் ஏதாவது தப்பைச் செய்துவிட்டு வாருங்கள்.'

பூமியில் சங்கரன்பிள்ளையின் உடல் உயிர்த்து எழுந்தது. அவரசத்துக்கு என்ன பாவம் செய்வது? யோசித்தார்.

பக்கத்துத் தெருவில் இருந்த ஒரு முதிர் கன்னி எப்போது அவரைப் பார்த்தாலும், கண்களால் அழைப்பாள். மனைவி இருக்கும்போது அடுத்த பெண்ணைப் பார்ப்பதே பாவம் என்று அவளைத் தவிர்த்து வந்திருந்தார். இப்போது அங்கே விரைந்தார். 'உன்னோடு சந்தோஷமாக இருக்கவே வந்தேன்' என்றார். அவளும் ஆச்சரியமாகி, விருப்பத்தோடு இணங் கினாள். எல்லாம் முடிந்து புறப்பட்டபோது, 'அப்பாடா! ஒரு கெட்டகாரியம் செய்து விட்டேன். சொர்க்கத்தில் இடம் உண்டு' என்று சங்கரன்பிள்ளை நிம்மதியானார். அவளோ, அவரது சங்கரனைப் பற்றிக் கொண்டு நன்றியுடன் சொன்னாள்... 'இன்பத்தையே அனுபவித்திராத ஒரு பெண்ணுக்கு நீங்கள் எப்பேர்ப்பட்ட நல்ல காரியம் செய்திருக்கிறீர்கள், தெரியுமா?' சொர்க்கத்தின் கதவுகள் அறைந்து மூடப் படும் சத்தம், இங்கேயே சங்கரன்பிள்ளையின் காதுகளில் விழுந்தது.

நல்லவர்களாகத் தங்களை நினைத்துக் கொள்பவர்கள் இப்படித்தான் இங்கேயும் வாழாமல், அங்கேயும் இடமில்லாமல் அல்லாடுகிறார்கள். உலகில் பெரும்பாலான துன்பங்கள் தங்களை நல்லவர்கள் என்று நினைத்துக் கொள்பவர்களால்தான் நிகழ்கின்றன. உண்மையில் நல்லது, கெட்டது என்பது செயலில் இல்லை. எண்ணத்தில் இருக்கிறது. ராமகிருஷ்ணர் வழக்கமாகச் சொல்லும் ஓர் அற்புமான கதை நினைவுக்கு வருகிறது.

வாரக் கடைசியில் விலைமகளைத் தேடிப் போகும் இரு நபர்கள் இருந்தார்கள். ஒரு முறை அந்த ஊரில் பகவத்கீதை பற்றிய சொற்பொழி நடந்தது. ஒரு நண்பன் அதற்குப் போவதென்று முடிவு செய்தான். அடுத்தவனோ வழக்கம்போல் விலை மகளைத் தேடிப் போனான். சொற்பொழிவுவில் உட்கார்ந்திருந்தவனுக்கு மனதில் பதற்றம்.... 'முட்டாள் தனமாக இங்கே வந்து சிக்கிக் கொண்டோமே. அங்கே நண்பன் ஜாலியாக இருப்பானே?' விலைமகளிடம் போயிருந்தவனுக்கோ, 'அடடா, வாழ்க்கையில் வளர்ச்சிக்கு முக்கியமாகத் தேவையானது பகவத் கீதையல்லவா? நண்பனுக்கு இருந்த தெளிவு எனக்கில்லையே? என்று வருத்தம். இதில் யார் நல்லவன்..யார் கெட்டவன்? கீதையைக் கேட்டாலே புண்ணியம் என்று தன்னை ஏமாற்றிக்கொண்டு, விலைமகளைப் பற்றியே நினைத்துக் கொண்டு இருந்தவனைவிட, விலைமகளுடன் இருந்தாலும் கீதையை நினைத்தவன் மேலல்லவா?

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

வஞ்சமோ, வேதனையோ இன்றி, அன்போடு செய்யும் எந்தக் காரியமும் நல்ல காரியம்தான். ஒரு மானைப் புலி வேட்டையாடுவது அதன்மீது உள்ள வஞ்சத்தால் அல்ல...பசியால்! சக மனிதனிடம் கோபமாகப் பேசி வருத்தும் ஒருவன் செய்யும் பாவமல்லவா அதைவிடக் கொடியது?

மற்றவர்கள் கண்களில் நல்லவராகத் தெரிய வேண்டும் என்று முயற்சிப்பதை விட்டுவிட்டு, உண்மையானவராக... தூய்மையானவராக வாழப்பழகுங்கள்.

## குருவிடம் ஒரு குறுக்கு விசாரணை!

'ஆனந்தம் தரும் செயலையே செய்யச் சொல்கிறீர்கள். வன்முறையை ஆனந்தமாக நினைப்பவர்களை என்ன செய்வது?'

'நீங்கள் படைப்போடு விளையாடுகிறீர்கள். துக்கத்தையும், துன்பத்தையும் தரும் எந்த விளையாட்டையும் விளையாடுவதில் அர்த்தமில்லை. உங்களுக்கும் மற்றவர்களுக்கும் ஆனந்தமாக இருக்கும் விதத்தில் விளையாடுங்கள் என்றுதான் சொன்னேன். போர்தான் உங்களுக்கு ஆனந்தம் தருகிறதா? ஆயுதங்களைப் பயன்படுத்துவதில்தான் மகிழ்ச்சி கொள்கிறீர்களா? குற்றமேயில்லை. அடுத்தவர் உங்களால் சுட்டு வீழ்த்தப்படும்போது கிடைக்கும் அதே ஆனந்தம், அவரால் நீங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டாலும் உங்களுக்கு கிடைக்கும் என்றால், அந்த விளையாட்டும் தவறேயில்லை. ஆனால் நீங்கள் மட்டுமே சுட்டு வீழ்த்த நினைப்பது நியாயமற்ற ஆசை அல்லவா?




## பொருளாதார...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

தீர்க்கமுயல்கிறார் (Commitment of the issues), எவ்விடயத்திற்கும் புத்துணர்வை ஊட்டுகிறார் (He has brought an incredible breath of fresh air) என்றார்.

ஆறு நாள் சுற்றுப் பயணத்தில் அயர்லாந்து, இங்கிலாந்து மற்றும் ஜேர்மனிக்குச் சென்று G20 மாநாட்டில் கலந்து விட்டு கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ நாடு திரும்பினார்.

கனேடியப் பிரதமரின் இந்த G20 இற்கான வெளிநாட்டுப் பயணத்தைப் பற்றி CBC ஊடகம் தெரிவிக்கையில், ஜஸ்ரின் ரூடோ மீண்டும் தான் ஒரு சர்வதேச பிரபலம் (International Celebrity) என உறுதிப் படுத்தியுள்ளார்.

G20 GERMANY 2017
HAMBURG



இது ஒரு கருத்து (Opinion) அல்ல, ஓர் எளிமையான உண்மை (Simple fact). அவரது இந்த வெளிநாட்டுப் பயணம் கனடாவின் உத்தியோகபூர்வ எதிர்க் கட்சியையும் மற்றும் விமர்சகர் களையும் ஏமாற்றும் என்று கூறியுள்ளது.

# இந்தியக் குடியரசு தலைவர் தேர்தல் முடிவு தெரிந்த போட்டி!

**சிவதாணு**

தேர்வு முடிவுகள் தெரிந்துகொண்டு தேர்வை எழுதும் மாணவன் போல், 15 ஆவது குடியரசுத் தலைவர் தேர்தலுக்கு தயாராகிக் கொண்டிருக்கிறது இந்தியா. 93 பேர் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டு 2 பேர் மட்டுமே களத்தில் உள்ளார்கள் என்றாலும், ஒருவரைச் சுற்றியே வருகிறது அனைத்து தேர்தல் நகர்வுகளும். அவர் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர் ராம்நாத் கோவிந்த். இந்தியாவின் அடுத்த குடியரசு தலைவர் இவர்தான் என்பது கிட்டத்தட்ட உறுதியான செய்தி!

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, பாஜக கூட்டணி கட்சிகளின் குடியரசு தலைவர் தேர்தல் வேட்பாளராக ராம்நாத் கோவிந்தை அறிவித்ததும், ஒரே இரவில் பிரபலமாகி விட்டது ராம்நாத் கோவிந்த் என்னும் பெயர். அதன்பிறகுதான் யார் இவர்? அந்தளவுக்கு என்ன சாதித்துள்ளார் என பாஜக கட்சியினரே ராத்நாத் கோவிந்த் பற்றி தேடத் தொடங்கினார்கள். பாஜகவின் குடியரசு தலைவர் வேட்பாளர் பரிசீலனைப் பட்டியலில் கட்சியின் மூத்த தலைவரான அத்வானி, சுஷ்மா ஸ்வராஜ், மோகன் பகவத் போன்றவர்களின் பெயர்கள் எல்லாம் இருக்கையில் வேட்பாளர் பட்டியலிலேயே இல்லாத, அதிக பிரபலமில்லாத ராம்நாத் கோவிந்தை தேர்ந்தெடுத்தது அனைவரிடத்திலும் கேள்வியை எழுப்பியது.

சரி யார் இவர்?

உத்தரப் பிரதேச மாநிலம் கான்பூரில் உள்ள தேராப்பூரில் 1945-ம் ஆண்டு பிறந்தவர் ராம்நாத் கோவிந்த். தற்போதைய வயது 71. கான்பூர் பல்கலைக்கழகத்தில் எல்.எல்.பி. வழக்கறிஞர் படிப்பை முடித்த இவர் 16 ஆண்டுகள் டெல்லி உயர் நீதிமன்றத்திலும் உச்ச நீதிமன்றத்திலும் அரசு வழக்கறிஞராகப் பணியாற்றியுள்ளார்.

இந்துத்துவா கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு ஆர்.எஸ்.எஸ்.இல் தீவிரமாக செயல்பட்டு வந்த ராம்நாத் கோவிந்த், அரசியல் ஆர்வத்தால் பாஜகவில் சேர்ந்து இரண்டு முறை ராஜ்யசபா உறுப்பினராகவும், பாஜகவின் ஒடுக்கப்பட்ட சாதியினர் பிரிவான தலித் மோர்ச்சாவின் தலைவராகவும் இருந்துள்ளார். 2015-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் பீகாரின் ஆளுநராகப் பதவி வகித்தார். தற்போது இந்தப் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

மோடி, குடியரசுத் தலைவர் வேட்பாளராக ராம்நாத் கோவிந்தை அறிவிக்க முக்கிய காரணமாகக் கருதப்படுவது இவர் ஒரு தலித் என்பதுதான்.



தலித் சமூகத்தைச் சார்ந்த ஒருவரை வேட்பாளராக அறிவித் தால் பெரும்பாலான எதிர்க்கட்சிகள் ஆத ரவு அளிக்கும் என்ற எண்ணத்திலும், 2014-ம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் பாஜகவுக்கு விழுந்த 24% தலித் வாக்குகளை தக்கவைத்துக் கொள்ளும் நோக்கி லும், தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமுள்ள மாநிலங்களில் விரைவில் வரக்கூடிய சட்ட மன்றத் தேர்தல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டும், ராம்நாத் கோவிந்த் அறிவிப்பில், தொலைநோக்குப் பார்வையுடனே காய் நகர்த்தியுள்ளது பாஜக மேலிடம் என்கிறார்கள் அரசியல் நோக்கர்கள்.

500, 1000 ரூபாய் மதிப்பிழப்பு நடவடிக்கையின்போது கறுப்புப் பணம் மற்றும் ஊழலை இதனால் ஒழிக்க முடியும் என்று மோடிக்கு முழு ஆதரவையும் வழங்கியவர் ராம்நாத் கோவிந்த் என்பது குறிப்பிடத்தக்கது. அது மட்டுமில்லாமல் இத்தனை ஆண்டுகள் கட்சியில் இருந்தும் எந்தவித குற்றச்சாட்டும் இல்லாமல் இருப்பதும் இவரது தேர்வுக்கான காரணமாகக் கருதப்படுகிறது. அத்தனைக்கும் மேல் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் தலைவராக ராம்நாத் கோவிந்த் இருப்பார் என்றும் முழுதாக நம்புகிறது பாஜக.

ராம்நாத் கோவிந்தை வேட்பாளராகத் தேர்ந்தெடுக்க பாஜகவுக்கு இத்தனை காரணங்கள் இருந்தாலும், எதிர்க்கட்சிகள் இவரை எதிர்க்க முக்கிய காரணமாக இருப்பது இவருடைய ஆர்.எஸ்.எஸ். பின்னணி மட்டுமே. ஆர்.எஸ்.எஸ். பின்புலம் கொண்ட ஒருவரை தங்களால் ஆதரிக்க முடியாது என்றும், தலித் ஒருவரை வேட்பாளராக அறிவித்து அனைவரையும் பாஜக ஏமாற்றுகின்றது என்றும் சாடினர் சில கட்சியினர்.

ராம்நாத் கோவிந்த் போட்டியிடுவதாலேயே, காங்கிரஸ் தலைமையிலான எதிர்க்கட்சிகளின் சார்பிலும் தலித் ஒருவரே வேட்பாளராக அறிவிக்கப்பட வேண்டிய நிர்பந்தம். அதன்படி முன்னாள் துணை பிரதமர் பாபு ஜகஜீவன் ராமின் மகளும் லோக் சபாவின் முதல் பெண் சபாநாயகருமான மீரா குமார் (72) வேட்பாளராக களமிறங்கியுள்ளார். 17 கட்சிகளின் கூட்டமைப்பு ஒருமனதாக இவரை தேர்வு செய்துள்ளது.

பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி, காங்கிரஸ் தலைமையிலான எதிர்க்கட்சிகள் இரண்டும் தலித்தையே வேட்பாளராக நிறுத்தியுள்ளதால் தாழ்த்தப்பட்டோருக்கு இடையேயான தேர்தலாகவும் இது பார்க்கப்படுகிறது. இதனால், முன்னெப்போதும் இல்லாத அளவு இந்தத் தேர்தலில் சாதி பெரும் விவாதப் பொருளாக மாறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் குடியரசுத் தலைவர் தேர்தலுக்கும் மற்ற தேர்தலுக்கும் உள்ள வேறுபாடு, மற்ற தேர்தல்களில் மக்கள் நேரடியாக வாக்களித்து தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பார்கள். ஆனால், குடியரசுத் தலைவர் தேர்தலில் சட்டமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மட்டுமே வாக்களித்து குடியரசுத் தலைவரை முடிவு செய்வர். இந்தியாவில் மொத்தம் 776 நாடாளுமன்ற உறுப்பினர்களும், 4120 சட்டமன்ற உறுப்பினர்களும் உள்ளனர். ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் ஓட்டு மதிப்பு 708, சட்டமன்ற உறுப்பினரின் ஓட்டு மதிப்பு அந்தந்த மாநில மக்கள் தொகையைப் பொறுத்து மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும்.

வரும் குடியரசுத் தலைவர் தேர்தலில் ஒட்டு மொத்த நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் ஓட்டு மதிப்பு 10,98,882 என கணக்கிடப்பட்டுள்ளது. இதில் 50%க்கும் மேல் அதாவது 5,49,442 வாக்குகள் பெறுபவர் குடியரசு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.

இந்தியப் பிரதமர் பதவிக்கான நாடாளுமன்ற தேர்தலில் மட்டுமல்ல, இந்தியக் குடியரசுத் தலைவர் பதவிக்கான தேர்தலிலும் எப்போதும் வெற்றியை தீர்மானிக்கும் மாநிலமாக இருப்பது உத்தரப் பிரதேசம்தான். அங்கே பாஜக ஆட்சிதான் நடைபெறுகிறது. மேலும், உத்தர்காண்ட் உட்பட 13 இடங்களில் பாஜக ஆட்சியில் இருப்பதால் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் மொத்த வாக்கு மதிப்பு 48.93%ஆக உள்ளது. அதாவது 5 லட்சத்து 37 ஆயிரம் வாக்குகள் ஏற்கனவே இவர்கள் வசத்தில் உள்ளது.

வெற்றி பெறுவதற்கு இன்னும் 1.07% (கிட்டத்தட்ட 12,000) வாக்குகளே தேவை.

(தொடர்ச்சி 36 ஆம் பக்கம்...)



# உணர்வுகள்

**- ஞானா உருத்திரன் -**

உணர்வுகள் என்பது ஒரு GPS போல. இதுவே எமது வாழ்க்கையில் எல்லாவற்றையும் கட்டுப்படுத்துகின்றது. இவற்றை வைத்துத்தான் நாம் எல்லாவற்றையும் உணர்கிறோம். உணர்வுகள் மிக முக்கியமானவை. ஐம்புலன்களாலும் உணரப்படும் இந்த உணர்வுகள் எமக்கு ஒரு சக்தியாக வழிகாட்டியாக இருக்கின்றது.

உணர்வுகளை எமது எண்ணங்கள் மூலம் நாம் உருவாக்குகின்றோம். நாம் எதைச் சொல்லுகின்றோம் அல்லது எதை நினைக்கின்றோம் என்பதை பொறுத்து உணர்வுகளை உருவாக்குகின்றோம். நாம் எப்பொழுதும் ஒரு வசனத்தை சொல்லும் போது அதைச்சுற்றி ஓர் உணர்வை உருவாக்குகின்றோம்.

நமது உணர்வு நம்பிக்கைகளில் இருந்து வருகிறது. ஓர் உணர்வும் எண்ணமும் சேரும்போது நம்பிக்கை வருகிறது. நமது நம்பிக்கைகள் நமது வாழ்வை பாதிக்கின்றன. நாம் ஒன்றை நம்பும்போது அதனை சுற்றி உணர்வுகளையும் எண்ணங்களையும் நாம் எப்போதும் உருவாக்கிக் கொண்டே இருக்கின்றோம்.

அதனால் அதற்கு நாம் சக்தி கொடுக்கின்றோம். அது நம் வாழ்வில் உண்மையாக நடைபெறுகிறது. எதற்கு நாம் சக்தியை கொடுக்கின்றோமோ அல்லது எதில் நாம் கவனம் செலுத்துகிறோமோ அது நம் வாழ்க்கையில் வருகின்றது. எமது சக்தி எமது உடலை நல்ல முறையில் அல்லது எதிர்மறையாகப் பாதிக்கின்றது.



எப்படியான எண்ணம் அல்லது உணர்வை நாம் உருவாக்குகின்றோமோ அதற்கேற்ப நம் வாழ்க்கை மாறிக்கொண்டே இருக்கின்றது. இதில் நல்ல உணர்வு அல்லது எதிர்மறை உணர்வு என்பது எப்படி பார்க்கப்படுமென்றால் எமது இதயம் நல்ல உணர்வை உணரும்போது விரிகின்றது எதிர்மறை தவறான உணர்வை உணரும்போது எமது இதயம் சுருங்குவது அல்லது இழுப்பது போலத் தோன்றும். இன்றைய நவீன விஞ்ஞான ஆராய்ச்சிகளின் முடிவுகளின்படி நாம் நல்ல எண்ணங்களை எண்ணும்போது அல்லது உணரும்போது நமது உடலின் கலங்களிலுள்ள DNA எனப்படும் மரபணுக்கள் மாற்றமடைந்து விரிவடைவதாகவும் நல்ல ஓய்வு நிலையை அடைவதாகவும், எதிர்மறை உணர்வுகளின் மூலம் அவை சுருங்கிய தன்மையை அடைவதாகவும், இதனால் எமது நோய் எதிர்ப்புசக்தி குறைவதாகவும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. கோபம், பயம், கவலை போன்றவை தீய அல்லது எதிர்மறை உணர்வுகள் ஆகும். பெரும்பாலான மனிதர்கள் எதிர்மறை, நல்லதுமான உணர்வுகளை அடிக்கடி உணர்ந்து கொண்டிருப்பார்கள். அதாவது சிலநேரங்களில் மகிழ்ச்சியாகவும் சில நேரங்களில் கவலையாகவும் மாறி மாறி உணர்வார்கள். இப்படி சில நேரம் கவலை, சில நேரம் மகிழ்ச்சி என மாறுபட்ட உணர்வுகளை அடிக்கடி உணர்வதால் எமக்குள் இருக்கும் சக்திகள் வித்தியாசமாக இருக்கின்றன. உண்மையில் நாம் என்ன அதிர்வுகளில் (vibrations) இருக்கின்றோமோ அதற்கேற்ற வாழ்க்கையை உருவாக்கிக் கொண்டிருப்போம்.

நாங்கள் மின்சார காந்த சக்தியை (electric magnetic energy) கொண்டிருக்கின்றோம். எமது ஆன்மாவின் சக்திகள் (energy) அனைத்தும் electric energy ஆகும். எமது மூளைக்குள் எந்நேரமும் இந்த மின்சார சக்தி ஓடிக்கொண்டே இருக்கும். Magnetic energy என்பது இந்த பூமியில் உள்ளது. ஆக நாம் ஒரு மின்சார காந்த சக்தி (electric magnetic energy)ஆக இருக்கின்றோம். இந்த மின்காந்த ஆற்றலை மாற்றும்போது எமது வாழ்க்கையில் மாற்றம் வருகின்றது. எமது உணர்வுகள், நம்பிக்கைகள், எண்ணங்கள் என்பன electric energy ஆகும். அவை அதிக அதிர்வுகளை கொண்டிருப்பதால் எம்மால் அதை வெறும் கண்களால் பார்க்க முடிவதில்லை. ஆனால் அவை இயங்குவதை எங்களால் உணர முடியும். அதேபோல் புவியீர்ப்பு இந்த magnetic energy (புவியீர்ப்பு) ஆல் உருவாகின்றது. நாம் பூமியில் நிற்பதற்கு அது உதவுகின்றது. இவற்றை இந்த சக்திகளை நாம் அறிகின்றோமோ இல்லையோ அவை இயங்கிக் கொண்டிடேயிருக்கின்றது. ஆக உணர்வுகளை நாம் சரியான முறையில் உணர்ந்தோமென்றால் அவற்றை எமது வாழ்க்கையில் பயன்படுத்திக்கொள்ளலாம்.

ஞானா உருத்திரன். மருத்துவ துறையில் கல்வி கற்று உயிரியல் மருத்துவ (Bio Medicine) துறையில் முது நிலை பட்டப் படிப்பை முடித்து இருக்கிறார். Healing மற்றும் energy work போன்றவற்றை முழுமையாகப் படித்து இத்துறைகளில் மக்களுக்காக சேவை செய்து வருகிறார். தகவல்களை இணையத் தளத்தில் காணலாம்.
http://gnanauruthiren.com/tamil/

## vibration scale

தீய, கெட்ட எதிர்மறை உணர்வுகளை நாம் உணரவே கூடாது என்பதல்ல, ஆனால் நாம் எமது எண்ணங்களை மாற்றி உணர்வுகளை மாற்றுவதன் மூலம் எமது மரபணுக்களில் மாற்றங்கள் ஏற்படுவதுடன் எமது உடலை இயக்கும் பல சுரப்பிகளின் ஹோர்மோன் (hormone) அமைப்பு முறைகளிலும் மாற்றங்கள் வருவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக தியானம் செய்யும்

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)

பிரியாஸ்
புதிய முகவரியில் புதுப் பொலிவுடன்
1661 Denison Street (Kennedy & Denison) இல்
அமைந்திருந்த எமது நிறுவனம் தற்பொழுது வாடிக்கையாளரின்
நலன் கருதி புதிய முகவரியில்
7380 MCcowan Road, Unit #3, MARKHAM, ON L3S 3H8
அனைத்து வகையான இலங்கை இந்திய குறோசறி மற்றும்
மரக்கறி வகைகளை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்
905.944.1229

# மூச்சு விடுவதில் சிரமம் ஓர் ஆபத்தின் அறிகுறி

**நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்**




C - 416.617.5721/H - 416.289.2033 after 7:00pm

Breathing Problem is a sign of Danger

"மூச்சுத் திணறல், மூச்சு முட்டுதல் எனத் தமது சிரமத்தை பலரும் சொல்வதை தினமும் கேட்கிறோம். இந்தச் சிக்கல் இதயம் நுரையீரல் சார்ந்த கோளாறுகளின் வெளிப்பாடு. இதனை அலட்சியம் செய்வது ஆபத்தில் முடிவதால் இந்த நோயாளிகள் உடன் மருத்துவ பரிசோதனை செய்வது இன்றியமையாததாகும். தூங்கும்போது மூச்சுத்திணறல் ஏற்படுமாயின் அதனைக் கவனத்துடன் கண்காணிக்க வேண்டும். அன்றாட வீட்டு வேலைகளை செய்யும் போது மூச்சு இரைப்பு ஏற்படுமாயின் அதன் மூல காரணத்தை அறிந்து தகுந்த சிகிச்சை முறையை மேற்கொள்ள வேண்டும்.

மூச்சு இரைப்பு ஏற்பட பல காரணங்களைக் குறிப்பிடலாம். நிமோனியா, நுரையீரல் ஆஸ்துமா, மூச்சுக்குழாய் அடைப்பு, உடல் எடை அதிகரிப்பு, இரத்தச் சோகை, மனத் தளர்ச்சி, ஓய்வில்லாத உழைப்பு, அதிக குளிரில் நடமாடுதல், உண்டவுடன் தூங்கி செல்லுதல் போன்றவை.

### நுரையீரல் ஆஸ்துமா

ஆஸ்துமா என்று பொதுப்படையாக கூறுவது நுரையீரல் ஆஸ்துமாவைத்தான். இது தவிர இதய ஆஸ்துமாவும் உள்ளது. மூச்சு விடுவதில் சிரமம், இருமல், மூச்சு விடும் போது உருவாகும் ஒருவகை சத்தம். இவ்வாறு தொடர்ந்து வரும் ஆஸ்துமாவின் காரணமாக நுரையீரல் சுவர்களில் வெடிப்பு உண்டாகி அதன் இயங்கும் திறன் சீர்கெட்டு விடும்.

### இதய ஆஸ்துமா

நாள்பட்ட இரத்த அழுத்தம், நுரையீரல் நீர்த்தேக்கம் போன்ற காரணங்களால் இது ஏற்படுகிறது. மூச்சிரைப்பு இரவில்தான் ஏற்படும். இருமல், நீர் போன்ற சளி, நுரையீரலின் அடிப்பகுதியில் வலி என்பன தோன்றும். அத்துடன் மாரடைப்பிற்கான அறிகுறியும் தோன்றும். இதயம் பாதிக்கப்படும்போது கல்லீரல் வீக்கமடைந்து விடுகிறது. இதன் பாதிப்பால் கால்களில் நீர் தேங்கி வீக்கத்தை உண்டாக்குகின்றது.

### மூச்சுக்குழாய் அடைப்பு

மூச்சுக்குழாயில் அடைப்பு உண்டாவதால் மூச்சுத்திணறல் ஏற்படுகிறது. நுரையீரல் குழாய்களிலுள்ள தொற்றுக்களாலும் (Infection) அதில் தேங்கியிருக்கும் சளி இறுக்கமடைவதாலும் மூச்சுக்குழாயில் அடைப்பு ஏற்படுகிறது.

### அதிக எடை

உடல் எடை அளவுக்கு அதிகமாகி விடுவதாலும் மூச்சுத்திணறல் ஏற்படுவதுண்டு. ஊளைச்சதையைக் குறைக்கும் சில பயிற்சிகளைச் செய்வதுடன் தகுந்த உணவு முறைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

### இரத்த சோகை (Anaemia)

இரத்த சோகை என்பது பெரும்பாலும் பெண்களையே தாக்கும் ஒன்றாக உள்ளது. முதலில் அதன்மூல காரணத்தை அறிய-வேண்டும். ஒரு பெண்ணுக்கு மாதவிலக்கின் போது அதிக இரத்தப்போக்கு இருக்கலாம். மூலநோய் காரணமாகவும் இரத்தம் வீணாக-லாம். பொதுவாக சத்தான உணவு இல்லாமலும் இரத்தக் குறைபாடு ஏற்படலாம். எனவே இவற்றைக் கவனிக்காது விட்டால் சில சமயம் இருதயசெயலிழப்பு ஏற்பட வாய்ப்புண்டு. இந்தக் காலப்பகுதியில் அடிக்கடி மூச்சு இரைப்பு வந்துபோகும்.

### மலச்சிக்கல்

நுரையீரலுக்கும் பெருங்குடலுக்கும் நெருங்கிய தொடர்புள்ளது. ஒருவருக்கு சுவாச பிரச்சினைகள் ஏற்படும்போது மலச்சிக்கல் வருவதுண்டு. இவ்வாறு தொடர்ந்துவரும் மலச்சிக்கலால் வாயுத்தொல்லை, தலைவலி, உடல் எடை கூடுதல், மூட்டுவலிகள், மூல நோய் போன்றவை இலகுவாக பற்றிக் கொள்ளும்.


### சுவாசப் பிரச்சினைக்குத் தீர்வுதான் என்ன?

முதலில் உணவுப் பழக்கத்தில் சில மாற்றங்கள் தேவை. குளிருள்ளதும், காரம் உள்ளதுமான உணவுகளை முடிந்தவரை தவிர்க்க வேண்டும். இரவு உணவு எளிதில் ஜீரணமாகக் கூடியதாகவும் அளவோடும் இருக்க வேண்டும். உண்டவுடன் உறங்கப் போகக் கூடாது. மிருகங்களின் கொழுப்பு நிறைந்த உணவுகளை தவிர்க்கவும். காலையில் இஞ்சி, மதியம், சுக்கு, இரவில் மிளகு அல்லது கடுக்காய்தூள் என்பன உணவுடன் சேர்த்து உட்கொள்வது சிறந்தது. பச்சைக் காய்கறிகள் ,பழங்கள் நன்மை பயக்கும்.


### யோகாவில் நிரந்தர தீர்வு

ஆசனங்கள் சில சிறப்பு பயிற்சிகள் விரைவில் நல்ல பலனைத் தரும்.

1. ஒட்டக ஆசனம் (Camel pose)
2. புஜங்காசனம்
3. சர்வாங்க ஆசனம்
4. மருந்துப்பெட்டி ஆசனம்
5. மச்சாசனம்



இவற்றை தினமும் 10 முதல் 15 நிமிடம் செய்வதால் இரண்டு வாரங்களுள் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் தென்படும்.



### கபாலபாதி மூச்சுப்பயிற்சி

கபாலபாதி பயிற்சியானது சுவாச உறுப்புகள் அனைத்தையும் சுத்தம் செய்து அதனுள்ளிருந்த நீர் சளி மற்றும் அழுக்குகள் என்பனவற்றை வெளியேற்றுவதுடன் சுவாசப்பைகள் இலகுவாக விரிந்து சுருங்க உதவுகிறது.


இதனை ஒரு யோகாசன ஆசிரியரின் உதவியுடன் முறைப்படி பயிற்சி செய்துவர சுவாசப் பிரச்சினைகள் நீங்குவதுடன் அதன் காரணமாக ஏற்படும் மற்ற வியாதிகளும் நம்மை எப்போதும் அணுகாது பாதுகாப போமாக.

# நாமும்...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

அதிகமானவர்கள் குறைந்த வட்டிவீதத்துடன் புதிய வாகனம் வாங்குவதனையே விரும்புகின்றார்கள். இதனால் விலை கூடிய வாகனங்களையே வாங்குகின்றார்கள். அத்துடன் 5 வருடக்கடனை 7 வருடத்திற்கு எடுப்பதாகத் தெரியவருகின்றது. 52 வீதமானவர்கள், வாகனம் வாங்கும்போது 7 வருடக்கடனைப் பெறுகின்றார்கள். குறைந்த விலையுள்ள வாகனங்கள் வாங்குவது சிறந்ததாகலாம்.

### 7. வட்டிவீதம் கூடிய நிதிநிறுவனத்தில் பணத்தை வைத்திருத்தல்



நிதி நிறுவனங்களிற்கு ஏற்ப நாம் வைத்திருக்கும் பணத்திற்குரிய வட்டிவீதம் மாறும். வட்டிவீதம் அதிகம் கொடுக்கும் நிறுவனத்தில், மேலதிகமாக இருக்கும் பணத்தை வைத்திருந்தால் அதிக வட்டி கிடைக்கும்.

2 DAYS ONLY இரண்டு நாட்கள் மட்டும்
75% OFF மலிவு விற்பனை

உங்கள் குழந்தைச் செல்வங்களுக்கு தமிழ் கற்றுக்கொடுக்க CHILDREN BOOKS TAMIL

- வாழ்வை வளமாக்கும் அதிர்ஷ்டம்
- ஆன்மீகம் அருளும் அற்புதம்
- உங்களின் ஆயுள் முழுப்பலன்கள்
- சனிப்பெயர்ச்சிப்பலன் (2020 வரை)
- யோகசித்தி இரகசியங்கள்
- ஹிப்னாடிசம், மெஸ்மரிஸம்
- நினைத்ததை நிறைவேற்றித்தரும் மந்திரங்கள்
- ஐஸ்வர்யம் அருளும் குபேரபூசை
- வாஸ்து ரகசியம்
- செவ்வாய் தோசமும் பரிகாரங்களும்
- தலைமுடிப்பிரச்சினைக்கு எளிய தீர்வு
- தினசரி வாழ்வில் நன்மைதரும் பல இரகசியங்கள் அடங்கிய புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு.
- ஆன்மீக பக்திப் பாடல்கள் CD

கைவசம் உள்ள புத்தகங்கள் உடனே விற்று முடிந்துவிடும் ஆதலால் FIRST COME பலனடைவீர்கள்

கண் திருஷ்டி நீக்கும் பாதரச மணி விநாயகர்

உருத்ராட்சை மணிகள்

இடம்:

வரசித்தி விநாயகர் தேர்த்திருவிழாவின் முதல் நாள் பிற்பகல் தொடக்கம் July 21, 22 வரை கோயில் BOOTH இல் மிக மிக மலிவாகப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம்

விலை மதிப்புள்ள பல பெறுமதியான பொருட்கள் 75% விலையில். சில மணி நேரங்கள் மட்டும் உங்களுக்கு தரப்படும். பொன்னான சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்

3025 Kennedy Road, Unit -10, Scarborough, ON. M1V 1S3
ஸ்ரீ வரசித்தி விநாயகர் கோயில் திருவிழா BOOTH உள்ளே
அழையுங்கள்: 467-995-4099

## யாவரும் அறிந்திட இலகு தமிழில், அறிவியல்.

# அந்த மூன்று நிமிடங்கள்

## (பேரண்டத்தின் பரிணாம மாற்றத்தைக் கூறும் அழகியற் கதை)

- கனி -
416.261.1348
ptons@hotmail.ca



4. பேரிணை காலம் (தொடர்ச்சி)

சென்ற தடவையில் மாயத் துணிக்கைகள் பற்றிய மர்மத்தைத் தெரிந்து கொண்டோம். இனிப் பேரிணைகாலத்தில் என்னென்ன நடந்தன என்பவை பற்றி இன்னமும் தெரிந்து கொள்வோம்.

பேரிணைக் காலத்தில் எங்களின் பிரபஞ்சம், பேரண்டம், புடவி கொண்டிருந்தது சின்னஞ் சிறியவெளிதான். அதனுள் பொதுச் சார்புக் கொள்கையிற்கான வெளிப்புகள் வந்துவிட்டன. அத்துடன் குவாண்ரம் உலகும் அங்கே முளைத்து விட்டது. இவையிரண்டும் தங்கள் இருப்புகளைக் காட்டத் தொடங்கின. இன்னமும், மேலானவிசையின் சமச்சீர்ச் சமநில உடைவினால் ஈர்ப்புவிசை தனிவிசையாகவும் வந்துவிட்டது. இருப்பினும், அங்கே உண்மையாகத் துணிக்கைகள் இல்லாததால் ஈர்ப்புவிசையிற்கு இக்காலத்தில் உள்ளது போலத் தொழில்பட அவசியம் இல்லாது இருந்தது. ஆனாலும் அதன் இயல்பிற் பெரிய வித்தியாசம். மிகவும் வலிமை குறைந்த விசையான ஈர்ப்புவிசை அந்நேரத்தில் கிட்டத்தட்ட வலிந்தவிசையின் வலிமையைக் கொண்டதாக இருந்தது. மிகக் குறுகிய வெளியும் உயர்ந்த வெப்பநிலையும் இதற்கான காரணங்களாக இருக்கலாம். மூன்று இயற்கைவிசைகள் ஒன்றிணைந்திருந்த பேரிணைவிசையும் ஒன்றும் செய்ய முடியாது இருந்தது.

பேரிணைவிசையில் மின்காந்தவிசை, வலிந்தவிசை, மெலிந்தவிசை மூன்றும் ஒன்றாக இருந்தாலும் அவற்றினைப் தனித் தனியாகப் பிரித்து அறிந்திட முடியாது. உயர்ந்த வெப்பநிலையாலான உயர்சக்தி நிலையில் மூன்று விசைகளினதும் தன்மைகள் ஒரேவிசை போன்றதாகவே தோன்றின. இதுவும் ஒருவித சமச்சீர்தான். ஆக, பேரிணை காலத்தில் புடவி, பிளாங் யுகத்தினைப் போலல்லாது இருந்தாலும். வேறொரு சமச்சீர் இயல்புடையதாகவே இருந்தது என்பதை விஞ்ஞானிகள் தங்களின் கருதுகோளிற் குறிப்பிடுகின்றார்கள்.

இப்படியாக நேரமும் நகர்ந்து கொண்டிருக்க, பிக்பாங்கின் பின்னர் 10ன் - 35ம் அடுக்கு செக்கன் வந்ததும் புடவியினுள் அடுத்த முக்கியமான மாற்றம் நிகழ்ந்தது. அதனைத்தான் அடுத்துப் பார்க்கப் போகிறோம்.

5. பெருவீக்கக் காலம்

பேரிணைக் காலத்தின் அடுத்ததாக, பிக்பாங்கின் பின்னரான, பத்தின் மறை 35ம் அடுக்கு செக்கனில் புடவியில் அடுத்து ஒரு பெரிய மாற்றம் நிகழ்ந்தது. பிக்பாங்கில் இருந்து தோன்றிய புடவி விரிவடைந்து கொண்டே செல்கின்றது என்பது எங்களுக்குத் தெரிந்த ஒன்று. இதனைக் கூறிய விஞ்ஞானிகள் அந்த விரிவு பற்றிய ஆய்வுகளையும் செய்தார்கள் அதன்படி, எங்களின் பேரண்டம் தோன்றி சீராக விரிவடைந்து கொண்டு வந்திருந்தால், இப்போது இருக்கின்ற நிலைக்கு வருவதற்கு, 10 ஆயிரம் மில்லியன் ஆண்டுக்கும் அதிகமான காலம் என்பதை விட, 10 ஆயிரம் ஆண்டு காலமே போதுமானதாக இருந்திருக்கும். வெறும் விரிவின் அடிப்



படையில் பார்க்கும் போது இந்தக் காலம் தான் காட்டுகின்றது. ஆனால் பேரண்டம் கொண்டிருக்கும் தூசுக் கூட்டங்கள், கோள்கள், விண்மீன்கள், கலக்சிகள், கருந்துளைகள் போன்ற உள்ளீடுகளின்படி பார்த்தால் இது பொருந்தவில்லை.

மேலும், பேரண்டத்தின் சில பௌதீக இயல்புகள் இதற்குப் பொருத்தமானதாக இல்லாது இருந்தன. பேரண்டத்தின் 'அடிவானம்' (Horizon) என்ற இயல்பும், விரிவடையும் தன்மையில் அமைந்த 'தட்டையியல்பு' (Flatness) எனப்படும் இயல்பும் இந்த 20 மில்லியன் ஆண்டுக் கணிப்பிற்குப் பொருத்தமானதாக இருக்கவில்லை. அடிவானத் தன்மை, தட்டை இயல்பு என்பவை கொஞ்சம் சிக்கலான விஞ்ஞானச் சங்கதிகள் என்பதனால் அவற்றினை விட்டுவிட்டு, அப்படியான சிக்கல்கள் உள்ளன என்பதை மட்டும் தெரிந்து கொள்வோம்.

இச்சிக்கல்களில் நின்றும் பொருத்தமான முறையில் நீங்குவதற்கு விஞ்ஞானிகள் எமது பேரண்டம் தோன்றிய சில காலத்துள் சடுதியில் ஒரு பெரியதான வீக்கத்தை அடைந்திருக்க வேண்டும் என கருதினார்கள். அச்சிந்தனையை முன் வைத்தவர்களில் அலன் குத் (Alan Guth) என்பவர் குறிப்பிடத்தக்கவர். பெருவீக்கம் (Inflation) எனக் கூறப்படும் அந்த சடுதியான வீக்கத்தின் வழியிற் சிந்திக்கையில், அடிவானம், தட்டையியல்பு என்பவற்றிக்குச் சரியான விளக்கங்கள் பெறப்பட்டன. அதன்படி, புடவியின் பெருவீக்கம் என்பது விஞ்ஞானிகளினால் ஏற்றுக் கொள்ளப் பட்டது. ஆக, புடவியின் பிளாங் யுகம், பேரிணைக் காலம் என்பவற்றை அடுத்து, புடவி பெருவீக்கக் காலத்துள் மூன்றாவது நிலைமாற்ற நிகழ்வாக நுழைகின்றது. இந்தப் பெருவீக்கக் காலம், உண்மையில் பேரிணை காலப் பகுதியில் தான் நிகழ்கின்றது. இருப்பினும், சில விஞ்ஞானிகள் இந்தச் சிறிய காலப் பகுதியையும் பேரண்டத்தின் ஒரு யுகமாகக் கருதுவதுண்டு. ஏனெனில், பிரபஞ்சத்தின் பரிமாண மாற்றங்களில் இந்தப் பெரு வீக்கம் என்பது முக்கியமாக அமைந்து விடுகின்றது. அப்பொழுது நிகழும் மாற்றங்களைத் தனியொரு பகுதியாகப் பார்ப்பதிலும் தவறில்லை.

சரி, விடயத்திற்கு வருவோம். பிக்பாங்கின் பின் 10இன் மறை 35ம் அடுக்கு செக்கனில் புடவி சடுதியில் மிகப் பெரியதாக உப்பிவிடுகிறது. இந்த உப்பல் என்பதும் சின்னன் பொன்னனானது அல்ல. 10இன் மறை 35ம் அடுக்கு செக்கனில் இருந்து 10இன் மறை 33ம் அடுக்கு செக்கன் என்ற மிகச்சிறய காலப்பகுதியில் புடவி, தனது ஆரம்பப் பருமனில் இருந்து பத்தின் ஐம்பதாம் அடுக்கு அளவுக்கு மேலாகப் பருமனிற் பெருத்து விடுகின்றது. பெருவீக்கம் ஆரம்பமாகையில் கிட்டத்தட்ட ஒரு ஐதரசன் அணுக்கருவின் பருமனளவில் இருந்த புடவி, பெருவீக்கத்தால் ஒரு கிரிக்கட் பந்தினையும் விடச் சற்றுப் பெரியதாகப் பருமனில் மாறிவிடுகின்றது.
இந்தப் பெருவீக்கம்தான் புடவியின் வாழ்வில் ஏற்பட்ட பெரிய மாற்றம். இம் மாற்றம்தான் புடவியை இன்று இப்படியாகக் காட்சியளிக்க வைத்தது. ஆம், நான், நீங்கள் எல்லாம் இன்று புவியில் தோன்றுவதற்கு மூலகாரணமாக இருந்ததே கிட்டத்தட்ட 13700 மில்லியன் ஆண்டு முன்னராக நிகழ்ந்த இந்தப் பெருவீக்கம் தான் என்கிறார்கள் விஞ்ஞானிகள். இப் பெருவீக்கமானது ஒளியின் வேகத்தினை விடவும் மிஞ்சியதான வேகத்திலே நடந்திருக்கின்றது என்பதுதான் மிகப் பெரிய ஆச்சரியம்.

இப்பெருவீக்கம் நடப்பதற்கான பொருத்தப்பாடுகளையும் விஞ்ஞானம் அழகாகக் கூறுகின்றது. அதற்காக, பெருவீக்கம் அடைவதற்கு முன்னதான பேரிணைக் காலத்தில் என்னென்ன நிகழ்ந்திருக்கும், எப்படி அக்குட்டிப் புடவி நடந்து கொண்டிருக்கும் என்பதனை விஞ்ஞானிகளின் கருதுகோள்களின் வழியாகப் பார்ப்போம். அடுத்த தடவையில் அந்த அழகினைப் பார்ப்போம்.

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான வி'யங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து,
- முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL • TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis
Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss
Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids
Stumatitis, Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4



# கனடாவின் அதியுன்னத படைப்பாளி மார்கிரட் அற்வூட்



சிந்தனைப்பூக்கள்
எஸ். பத்மநாதன்

(Margaret Atwood)

கனடாவின் சிறந்த கவிஞர், சிறுகதை எழுத்தாளர், இலக்கியவிமர்சகர், கட்டுரை யாளர், நூல் வெளியீட்டாளர், சுற்றாடல் செயற்பாட்டாளர் போன்ற பலபக்கப் பரிமாணங்களை கொண்ட ஆளுமை மார்க்கிரட் அற்வூட் ஆவர். ஆர்தர் சி. கிளார்க் விருது, அஸ்ருறியாஸ் (Asturias) இளவரசியின் இலக்கியத்திற்கான விருது ஐந்து தடவை, சிறந்த நூல்களுக்காக பெற்ற விருது (Booker Prize) ஆளுநர் விருது, Canada's walk of fame விருது போன்ற பல விருதுகளையும், பரிசில் களையும் பெற்ற இப்பெண் எழுத்தாளர் அறியாத கனேடிய மற்றும் உலக எழுத்தாளர்கள் இருக்கமாட்டார்கள். அந்த அளவுக்கு மிகவும் புகழ்வாய்ந்த எழுத்தாளராக இவர் திகழ்கின்றார்.

கனடாவின் தலைநகரான ஒட்டாவாவில் மார்க்கிரட் டொரத்திக்கும் கார்ல் எட்மண்ட் அற்வூட்டுக்கும் இரண்டாவது பிள்ளையாகப் பிறந்தவரே இவராவர். தந்தையார் ஒரு உயிரியல் ஆய்வாளர் என்பதால் அவர் செல்லும் இடங்களுக்கு இவரும் செல்ல வாய்ப்பு கிடைத்தது. கியூபெக்கின் பல இடங்களுக்கும் இவர் சென்றதால் எட்டாம் வகுப்புவரை முழுநேரமாகப் படிக்கவில்லை. ஆனால் அவர் பிராணிகளின் கதைகள், நகைச்சுவை புத்தகங்கள், இலக்கிய நூல்கள் எல்லாவற்றையும் நிறையவே வாசித்தார். ரொறன்ரோவில் உள்ள லீசைட் (Leaside) உயர்பாடசாலையில் சேர்ந்து 1957 இல் படிப்பை முடித்தார். அக் காலத்திலேயே சிறிய நாடகங்கள், கவிதைகள், சிறுகதைகள் எழுத ஆரம்பித்து விட்டார். ரொறன்ரோ விக்ரோறியா பல்கலைக்கழகத்தில் இணைந்து 1961இல் ஆங்கிலச் சிறப்பு பாடத்திலும், தத்துவம், பிரெஞ்சு பாடங்களிலும் பீ.ஏ பட்டம் பெற்றார். அதன் பின்பு அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் (Massachusetts) மாகாணத் தில் உள்ள ஹாவாட் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. பட்டம் (1962) பெற்றார். தனது ஆறாவது வயதிலேயே எழுத ஆரம்பித்த இவர் பல்கலைக்கழகத்தில் புகழ்பெற்ற எழுத்தாளராக மாறியதில் வியப்பில்லை. இவரது பாடல்களையும், கட்டுரைகளையும் ரொறன்ரோ விக்ரோறியா பல்கலைக்கழக வெளியீடான Acta Victoriana வில் எழுதிப் புகழ்பெற்றார். கவிதைகளையும் இதில் வெளியிட்டார். 1961இன் பிற்பகுதியில் அவருக்கு E.J. Pratt மெடல் கவிதை நூலுக்காகக் கிடைத்தது. இக்கவிதைக்கு பெயர் Double Persephone என்பதாகும். 220 பிரதிகளையே வெளியிட்டார். அற்வூட் வெளியிட்ட முதல் கவிதை நூல் இது வாகும். ஹவாட் பல்கலைக்கழகத்தில் கலா நிதி (Ph.D) பட்டம் பெற இரண்டு வருடங் கள் முயன்றார். அதனை முடிக்கவில்லை.

இவர் செய்த கற்பித்தல் தொழில்களைப் பார்த்தால் மிக வியப்பே ஏற்படும். பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகம் (1964-1965) மொன்றியல் சேர். ஜோர்ச் வில்லியம் பல்கலைக்கழகம் (1967-1968), அல்பேட்டா பல்கலைக்கழகம் (1969-1970), யோக் பல்கலைக்கழகப் பேராசிரியர் (1971-1972), அலபாமா பல்கலைக்கழகம் (1985), நியூ யோர்க் பல்கலைக்கழகம் வருகை பேரா சிரியர் (1985) அவுஸ்திரேலியா மக்குவாரி (Macquarie University பல்கலைக்கழகம் (1987), றினிட்டி பல்கலைக்கழகம், ரெக்சாஸ் (1989) யாவற்றிலும் விரிவுரையா ளராகவும், வருகைப் பேராசிரியராகவும், உள்ளக ஆய்வாளராகவும் விளங்கியவர் இவர். குறுகிய காலத்தில் இவ்வளவு பல்கலைக்கழகங்களில் சேவை செய்த ஒரு கனடிய பெண்மணியாக இவரையே கருதலாம் போல் உள்ளது.

கனடாவில் உள்ள எழுத்தாளர்களுள் இவர் ஒரு உன்னத படைப்பாளியாக விளங்கு வதற்கு பல காரணிகள் உள. இவரது படை ப்புகள் பல ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், கனடா எல்லாவற்றிலும் விரும்பிப் படிக்கப்படுகின்றன. அதிகம் விற்பனையான புத்தகங்கள் பலவற்றை எழுதியவர். சில நூல்கள் நூறு தடவைக்கு மேல் மறுபிரசுரங் களாக வெளிவந்துள்ளன. புகழ்பெற்ற 14 நாவல்கள். 9 சிறுகதைத் தொகுப்புகள், 16 கவிதை நூல்கள், 10 சிறுகதைகளல்லாத எழுத்து தொகுதிகள் போன்றவற்றை வெளி யிட்டு கனடாவுக்கு பெருமை சேர்த்துள்ளார். இரண்டு தடவை ஆளுநரின் பரிசும், Giller price, A man booker prize என்பன தவிரப் பல பரிசில்களை எழுத்திற்காகவே பெற்றதுடன் கனடாவுக்கு பெருமை சேர்த்த மைக்காக வழங்கப்படும் 'Order of Canada' பட்டத்தினை பெற்றவர். 200க்கு மேற்பட்ட பல்வேறு துறைப்படைப்புகள் இவரால் செய்யப்பட்டுள்ளன. சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள் மட்டுமல்ல பிராணி களின் சம்பவங்கள், சிறுவர்களுக்கான கவிதைகள் போன்றவற்றையும் எழுதிக் குவித்த படைப்பாளியே இவராவர்.



இவர் வாழ்ந்துள்ள இடங்களைப் பார்த்தால் பெரும் மலைப்பே ஏற்படும். ஒட்டாவா (1939-1945), ரொறன்ரோ (1946-1961), மசாசுசெற் போஸ்ரன் (19610-1963) ரொறன்ரோ (1963-1964), வன்கூவர் (1964-1965), போஸ்ரன் (1965-1967), மொன்றியல் (1967-1968), எட்மண்டன் (1968-1970), இங்கிலாந்து, லண்டன், பிரான்ஸ் (1970-1971), ரொறன்ரோ (1971-1973), ஒன்ராரியோ அலிஸ்ரன் (1973-1980), ரொறன்ரோ (1980-1983), இங்கிலா ந்து, ஜேர்மன் (1983-1984), அலபாமா (1985), ரொறன்ரோ (1986-1991), பிரான்ஸ் 1992, ரொறன்ரோ (1992 - இன்றுவரை) இப்படி இவ்வளவு நாடுகளிலும், இடங் களிலும் இவர் சந்தித்த எழுத்தாளர்கள் கணக்கற்றவர்கள், இந்த சாதனையும் இவருக்கு உரிய ஒன்றாகும்.

அற்வூட் முதலில் ஒரு கவிஞராகவே இனம் காணப்பட்டவர். The Circle Game (1966) கவிதைத் தொகுப்பே அவரது முதல் வெளியீடாகும். 16க்கு மேற்பட்ட கவிதை தொகுப்புக்களை வெளியிட்டுள்ளார். காதல், வாழ்வு, அழகு, கிறிஸ்மஸ், சோகம், நட்பு, நம்பிக்கை, இயற்கை, பிறந்த நாள், மரணம், திருமணம் போன்ற பல தலைப் புக்களில் காலத்தால் அழியாத கவிதை களை இவர் இயற்றியுள்ளார். பாப்லோ நெருடா, எட்கார் அலன்வோ, வில்லியம் சேக்ஸ்பியர், வில்லியம் பிளேக், கார்லில் கிப்ரன் போன்ற உலக கவிஞர்களுடன் ஒப்பிட்டு பேசப்படக்கூடியவர் இவர். இவரது 500 கவிதைகள் உலகப்பிரசித்தி பெற்றவை.

அற்வூட் 1961இல் தொகுத்து வெளியிட்ட கவிதைத் தொகுதியான Double Peres-phone என்ற நூல் வெளிவந்த பின்பே அவரைப் பற்றி எழுத்தாளர்கள் அறிந்து கொண்டனர். 1964இல் The Circle game என்ற நூல் வெளியாயிற்று. இதற்கு ஆளுநர் விருது கிடைத்தது. இப்படியே Eat-ing Fire: Selected Poetry, 1965-1995 Morn-ing in the burned house (1995) போன்ற பாடத் தொகுதிகளை வெளியிட்டார். இந்த இடைவெளி காலத்தில் அவரது The ani-mals in that country (1968), Selected poems (1976), Snake poems (1983) போன்ற புகழ்பெற்ற கவிதை தொகுப்புகளும் வெளிவந்தன. 16 கவிதை தொகுதிகள் வெளிவந்தன.

இவரது நாவல்கள் உலக பிரசித்தி பெற்றவை. முதலாவது நாவல் The Edible

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)


புத்தக வெளியீடு

BOOK RELEASE

மாதகலைப் பற்றிய தகவல்களை உங்கள் பிள்ளைகள் தாங்கள் கற்கும் ஆங்கில மொழியில் அறிய உதவும் ஒரு நூல்

GLORY OF MATHAGAL

Compiled by: Saba. Arulsubramaniam, M.A
Collection Of Information : V.Sittampalam, B.A., Dip. in Edu
Translation: S.Raymond Rajabalan, B.Sc (Hons), Dip.in Acc

நாள்: 05-08-2017 (Saturday August 5th 2017) @2:30pm
இடம்: Scarborough Civic Centre,
150 Borough Drive. Scarborough, ON

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வெளியீட்டிற்கு பெறப்படும் நிதி மாதகலின் பொதுத் தேவைக்குப் பயன்படுத்தப்படும்.
வெளியீட்டுக்குழு சார்பில்: சபா அருள்சுப்பிரமணியம்
THAMILPOONKA, 3001-MARKHAM RD.#21

647.706.6124

# உணர்வுகள்...

14 ஆம் பக்கத்தொடர்ச்சி

ஒருவருடைய மூளையின் முற்பகுதி அதிகம் வளர்ந்திருப்பதாகவும் அதன் பின் பக்கப் பகுதி குறைவாக வளர்ந்து குறைந் தளவு வேலை செய்வதாகவும் கண்டுபிடிக்க ப்பட்டுள்ளது. நாம் ஒரு எண்ணத்தின் ஆற்றலை அனுப்பும்போது மூளையிலுள்ள ஒரு பகுதி அந்த ஆற்றலை அதன் முன் பக்கத்திற்கோ அல்லது பின் பகுதிக்கோ அனுப்புவதை தீர்மானிக்கின்றது.

எமது எண்ணத்தின் அல்லது உணர்வின் சக்தியை மூளையின் முற்பகுதிக்கு நாம் அனுப்பினால் எம்மால் எமது ஆத்மீக சக்தியுடன் தொடர்பு கொள்ளமுடிவதுடன் ஒரு சமநிலையுடன் வாழமுடியும். ஆனால் மூளையின் பிற்பகுதிக்கு அனுப்பினோ மென்றால் மூளை நம்மை பாதுகாக்கும் ஒரு நிலைப்பாட்டை எடுக்கின்றது. அதனை 'fig ht flight reaction' சண்டை பிடித்தல் அல்லது - பயந்து ஓடு எனக் கூறுவார்கள். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலேதான் மனி தன் கோபத்தில் பிழைகள் செய்வது, தவறு கள் இழைப்பது, பிறருக்குத் தீங்கிழைப்பது போன்றன நடக்கின்றன. அப்பொழுதுதான் எம்மைப் பாதுகாக்க வேண்டும் என்ற தன் முனைப்பு அகங்கார (ego) உணர்வுக்குள் நாம் போகின்றோம்.

ஆனால் எமது உணர்வுகளை மாற்றுவதன் மூலம் எம் ஆன்மாவுடன் நாம் தொடர்பு கொள்ளவும் அமைதியான நிம்மதியான வாழ்க்கையை வாழவும் முடியும். ஆக இந்த உணர்வுகளை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும் என்றால் எமது எண்ணங்களை நாம் சரியாக உணர வேண்டும். எமது நம்பிக்கைகளை மாற்றிக் கொள்ள வேண்டும். உண்மையில் எமது வாழ்க்கை நல்ல முறையில் மாற வேண்டும் என்றால் நாம் எம்மையும் எமது வாழ்க்கையையும் நேசிக்க வேண்டும்.

எமது ஆத்மா தூய்மையான அன்பால் உருவானது. நாம் அன்பை உலகத்தில் உணரவேண்டும் அல்லது அன்பை இந்த உலகத்திற்கு வழங்கவேண்டும் என்றால் நாம் அன்பை சுற்றியே எல்லாவற்றையும் பார்க்க வேண்டும். நாம் அன்புக்கு முக்கிய த்துவம் கொடுக்கும்போது எமது வாழ்க்கை யின் எல்லாத் தடைகளையும் தகர்த்து விடு கிறோம். எம்மையும் மற்றவர்களையும் நாம் சமமாக நேசிக்கும்போது நாம் ஒரு சம நிலைக்கு வந்து அன்பு செலுத்துகின் றோம். எம்மை வருத்தியோ அல்லது எம்மை இழந்தோ நாம் மற்றவர்களை நேசி க்க முற்பட்டால் எமது ஆத்மாவின் சக்தி யை நாம் மதிக்கவில்லை என்பதே உண்மை. ஏனெனில் எம்மை நாம் மதிக்கும்போது எமது ஆத்மாவின் சக்தியோடு நாம் தொடர்பு கொள்கின்றோம். எம்மை நாமே நேசிப்பது என்பது நாம் சமநிலையான அன்பை எமது உடலுக்கும் மனதிற்கும்



கொடுப்பது. எம்மை மற்றவர் போல மதிப்பது, ஆனால் பலர் நல்ல மனிதர்கள் மற்றவர்களை மட்டுமே பார்ப்பார்கள் தம்மைப் பார்க்க மாட்டார்கள், என்ற நம்பிக்கை வைத்திருக்கின்றார்கள். இந்த நம்பிக்கை அவர்களுடைய ஆத்மாவி லிருந்து அவர்களை விலக்கி விடும். காலம் செல்லச்செல்ல அவர்கள் தாங்க ளும் நிம்மதி அடைய மாட்டார்கள். அவர் களால் மற்றவருக்கு செய்யப்பட்ட உதவி களும் மற்றவர்களால் உணரப்பட முடியா மல் இருக்கும். ஏனெனில் எம்மிடம் ஒன்று இல்லை என்றால் எம்மால் மற்றவருக்கு கொடுக்க முடியாது. எம்மிடம் அன்பு இல்லையென்றால் நாம் அன்பை மற்றவர் களுக்குக் கொடுக்க முடியாது. எம்மிடம் அன்பு உள்ளதெனில் நாம் அன்பை vibrate பண்ண வேண்டும். அன்பை நாம் வெளியால் விட வேண்டும். அன்பை நாம் வெளியே வழங்க வேண்டு மென்றால் எமது ஆத்மாவின் தொடர்பு மிக முக்கியம். எமது இதயச்சக்கரம் (chakra) முழுமையாக திறந்து இருக்க வேண்டும். எமது இதயச்சக்கரம் திறந்து இருக்க வேண்டும் என்றால் நாம் எம்மை முழுமை யாக நேசிக்க வேண்டும். எமது உடலை வெறுக்காமல் எமது உடலை, மனதை நேசித்து எம்மை நாம் சமநிலையில் வைத் திருக்கும் போது எம்மால் மற்றவருக்கும் உதவி செய்ய முடிகிறது. இந்த ஆத்மீக ஆற்றலில் எம்மை நாம் நேசிப்பது முக்கிய பங்கு வகிக்கின்றது.

நவீன கண்டுபிடிப்புகளின்படி மூளையின் காந்த சக்தி (magnetic) ஆற்றலை விட இதயத்திலுள்ள ஆற்றல் அதிகமானது என் றும், இதயம் திறந்த மனிதர்கள் மற்றவர் களின் சக்திகளையும் அதிகரித்து மற்றவர் களுக்கு உதவி செய்வதும் கண்டுபிடிக்கப பட்டுள்ளது.

# கனடாவின்...

17 ஆம் பக்கத்தொடர்ச்சி

Woman (1969) என்பதாகும். Life before man நாவல் (1976) ஆளுநர் விருது பெற்றது. The Handmaid's Tale (1986) பல பரிசுகளை கொடுத்த நாவலாகும். இப்படியே The Blind assassin (2000), Penelopiad (2005) The Year of the flood (2009), Madd Addam (2013) போன்ற பல நாவல்கள் பரிசு பெற்றவை. விஞ்ஞான அறிவுள்ள நாவல்களையும் இவர் படைத்துள்ளார். 16 நாவல்கள் மொத்தமாக வெளியிடப்பட்டன. மின்னியல் நூல்கள் (E-Books) பலவற்றை வெளியிட்டுள்ளார். 2013இல் அவரது The Heart Goes Last கணினி நூலாக வெளிவந்தது.

பல நூற்திரட்டுகளை (Anthologies edit ed) தொகுத்துள்ளார். New oxford book of Canadian verse 1982 இல் வெளிவந்தது. இறுதியாக New oxford book Canadi an short stories in Englishe 1995 இல் வெளிவந்தது. இவரது சிறுவர்களுக் கான நூல்கள் 7 வெளிவந்தன. Up in the tree (1978) முதல் நூலாகும். இவ்வாறு 7 நூல்கள் இவரால் வெளியாகின. கதைகள் அற்ற நூல்கள் (Non - Fiction) பல வெளிவந்தன. 1972-2016வரை 7 நூல்களை வெளியிட்டார். சிறுகதை நூல்கள் 10 வெளிவந்தன. முதலாவது நூல் Dancing girls (1977) என்பதாகும். Murder in the dark (1983) வெளியானது. இறுதியான சிறுகதை நூல் Stone mattress (2014) ஆகும். இதுபோல் Graphic Novel 2016 இல் 'Angel Catbird' வெளியானது. CBC தொலைக்காட்சிக்கும் பல எழுத்துக்களை எழுதியுள்ளார். நாடகநூல்கள் 3 இவரால் வெளியிடப்பட்டுள்ளன. இவரது வானொலி பதிவுகள் 101 ஆகும். BBC முதல் உலகில் உள்ள பல வானொலி நிலையங்கள் இவரது உரைகளை பதிவு செய்துள்ளன.

ஒரு பெண்மணி இவ்வாறான வியப்புறு படைப்புக்களை செய்துள்ளார் எனும்போது வியப்பே மேலிடும். இவரது எழுத்துக்களை வைத்து அவர் ஒரு பெண்ணியவாதி (Femi nist) என சிலர் கருதுகின்றனர். ஆனால் அவர் பெண்களுக்கான சமூக உரிமை களை தனது எழுத்துகளில் வெளியிட்டார் என்பது உண்மையே. ஆனால் அவர் பெண்ணியவாதி என்று தன்னைக் குறிப்பிடவில்லை.

கனேடிய ஆங்கில இலக்கியத்தை தரமுயர்



த்திய பெருமையும் அவருக்கே உண்டு. மக்லீன்ஸ் சஞ்சிகை, Saturday Night, This magazine, Newyork times book review, The Globe and mail, National post, Toronto star, Washin gton post போன்ற பல பத்திரிகை களிலும், சஞ்சிகைகளிலும் அவரது எழுத்துக்கள் வெளியாகின.

அற்வூட்டின் எழுத்துக்கள் பிரெஞ்சு, ஜேர்மன், இத்தாலியன், உருது, எஸ்தோனி யன், ரோமானியன், துருக்கிஸ், ரஷ்யா, டச், டேனிஸ், நோர்வேஜியன், சுவீடிஸ், போத்துக் கீஸ், கிரீக், ஜப்பானிஸ், ஸ்பானிஸ், ஹீப்ரு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. 24 நாடுகள் அவரது எழுத்துக்களை வரவேற்று நிற்கின்றன. இவ்வளவு கௌரவம் கிடைத்த கனடிய எழுத்தாளர் ஒருவரின் திறமை அளப்பரியதாகும். The Economi st சஞ்சிகை (2008) அவரை பிரகாசமான படைப்பாளி Scintillating wordsmith என்கிறது.

கனடாவை அடையாளப்படுத்தி இவர் வெளியிட்ட படைப்புக்களே அதிகம். Surviv al: A Thematic Guide to Canadian Litera- ture வெகு பிரசித்தமானது. கனடிய இலக்கியத்திற்கு பல வழிகளை வழங்கியுள் ளார். சுயமனசாட்சி, சுயதன்னிறைவு இவரது படைப்புக்களில் இருந்தன. இவர் எடுத்து எழுதிய கருக்கள் அனைத்தும் எதிர்கால படைப்பாளிகளுக்கு வழிகாட்டுவதாயிற்று. இந்தப் படைப்புகள் கனடிய மாணவர்களால் பெரிதும் விரும்பி வாசிக்கப்படுகின்றன.

பிராணிகள் பற்றிய பார்வைகள் இவரைப் போல் எவருக்கும் இருந்ததில்லை. சிறு வயதிலிருந்தே பிராணிகள் மீது நிறைய அன்புள்ளவர். 'The Animals die that we may live, they are substitute people' என்று எழுதி நாம் வாழ்வதற்காக விலங்குகள் இறக்கின்றன. அவையே எங்களுக்கு உ ணவுமாகின்றன. நாம் மரணத்தினை உ ணபவர்கள் என்கிறார்.

இவரது அரசியல் பார்வையும் குறிப்பிடத் தக்கதாகும். இவர் எழுதிய The handmaid's tale கதையில் ஐக்கிய அமெரிக்கா வில் இடம்பெறும் சில தவறான நடவடிக்கை களைக் கூறி கனடாவே ஒரு நம்பிக்கையான இடம் என்கிறார். இவரும் இவரது துணை வரும் Green party க்கு ஆதரவு வழங்கினர். சுற்றாடல் பாதுகாப்புப் பற்றி பல கருத்துக்களை வெளியிட்டார். சர்வதேச பறவை வாழ்வு சங்கத்தில் உறுப்பினரானார். கனடாவின் எழுத்தாளர் சங்கத்தலைவராக (Pen Canada) விளங்கி தற்போது சர்வதேச Pen அமைப்பில் துணைத் தலை வராக உ ள்ளார். 2008 பொதுதேர்தலில் குவி பெக்கின் பிரிவினை கட்சி ஊர் வலத்திலும் கலந்தார். அவர்களின் கலை உணர்வுக்கு மதிப்பளித்தார். பழமைவாதக் கட்சிக்கு எதிராக எவருக்கும் வாக்களிக்கலாம் என்றார்.

கனடாவின் நூல் நிலையங்களின் வளர்ச்சிக் கும் இவரது பங்களிப்பு அதிகமாகும்.

(தொடர்ச்சி 36ஆம் பக்கம்...)

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➤ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➤ FUNCTIONS, ADV. FUNCTIONS
➤ CALCULUS & VECTORS, DATA MGT
➤ SCIENCE, MATH, ENGLISH
GR 9-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு
✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB &AP PROGRAMME
✓ M CAT Classes
✓ EQAO GR 3 & 6

# தண்டனை ரிக்கற் வழங்க முடியாத தனியார் வாகனத் தரிப்பு இடங்களின் வீதி ஒழுங்கு மீறல்கள்

**சிவ. பஞ்சலிங்கம்**, B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு
416.321.0999



## கனடிய தகவல் தொடர் 271

(Traffic law exceptions in Ontario private parking lots)

'தனியாருக்கு சொந்தமான இடங்களில் வீதி ஒழுங்கு சட்டங்கள் ஏன் பிரயோகிக்கப் படுவதில்லை'? (Why Don't traffic laws apply on private property in Onta rio) என்னும் தலைப்பில் ஒரு தகவல் கட்டுரை கனடாவின் ஆங்கில ஊடகமான 'த குளோப் & மெயில்' (The Globe & Mail) பத்திரிகையில் கடந்த பெப்ரவரி 02, 2016 இல் வெளிவந்திருந்தது. இதை ஒத்த தலைப்பில் வெவ்வேறு கோணங்களில் ஆய்வுக் கட்டுரைகள் வேறு ஊடகங்கள், இணைய தளங்களிலும் பல தடவை வெளியாகியிருந்தன. அதில் கட்டுரையாளர் ஒருவர் நடைபெற்ற சம்பவம் ஒன்றினை உதாரணமாக காட்டி 'வீதி ஒழுங்கு சட்ட விதிகளை மீறிய தப்புக்குரியவர்கள் எவ்வாறு தப்பிக் கொள்ளும் சந்தர்ப்பம் உண்டு' என்பதனை தெளிவு படுத்துகின்றார்.

அது ஒரு மிகப்பெரிய திருமண மண்டபத்தின் வாகனத் தரிப்பு இடம். பாடசாலை பேரூந்து ஒன்றில் பிரயாணிகளை ஏற்றி, பேரூந்தினைச் செலுத்தி வந்த சாரதி அங்கு தரித்து நின்ற இரு வாகனங்களோடு மெதுவாக மோதி விட்டார். அதனால் அவ்விரு வாகனங்களுக்கும் சிறு பாதிப்பு ஏற்பட்டுவிட்டது. விபத்து நடந்த இடத்திற்கு பொலிசார் அழைக்கப்பட்டனர். அங்கு பொலிசார் விபத்து தொடர்பான தங்கள் விசாரணை அறிக்கையினை வழங்கினார்களே தவிர தவறுபுரிந்த சாரதிக்கு எதுவிதமான தண்டனை ரிக்கற்றும் வழங்கும் அதிகாரம் தங்களுக்கு இல்லை என்பதனை தெரியப்படுத்தியிருந்தனர்.



'கவனமில்லாத வாகன ஓட்டம்' (Careless driving) என்ற குற்றச்சாட்டில் தண்டனை ரிக்கற் வழங்கியிருக்க வேண்டும். ஆனால் இந்த இடத்தில் மட்டும் அவ்வாறு வழங்க முடியாத நிலை. பகிரங்க வீதிகளில் மட்டும் வீதி ஒழுங்கு சட்ட விதிகளை மீறிய சாரதிகளுக்கு தண்டனை ரிக்கற் வழங்கும் அதிகாரம் பொலிசாருக்கு உண்டு. ஆனால் அதே அதிகாரங்களை தனியாருக்குச் சொந்தமான வாகனத் தரிப்புக்களில் (Private parking lots') பிரயோகிக்க முடியாது என்பதனை மாகாண பொலீஸ் சார்ஜன்ட் திரு. பீற்றர் லியோன் அந்த இடத்தில் தெரிவித்திருந்தார். ஆனால் அரசுக்கு சொந்தமான வாகன தரிப்பு இடங்களில் இது விதி விலக்கு. (கனடாவில் ஒன்ராரியோ மாகாணத்தில் மட்டுமே இந்த மாதிரியான சலுகை உண்டு. ஏனைய மாகாணங்களில் இவ்வாறு இல்லை.)

தனியாருக்கு சொந்தமான வாகனத் தரிப்பு இடங்கள் எனப்படும்போது பின்வரும் இடங்களை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

- கம்பனிகள், கூட்டுஸ்தாபனங்களுக்கு சொந்தமான பல்கடை கட்டிட பகுதியின் வாகனத் தரிப்பு இடங்கள் (Shopping mall parking lots).
- கொண்டாட்டங்கள், விழாக்கள் நடைபெறும் தனியாருக்கு சொந்தமான மண்டபங்களின் வாகனத் தரிப்பு இடங்கள் (Banquet halls, Convention centers, Parking lots)
- ஆலயங்கள், தேவாலயங்களின் வாகனத் தரிப்பிடங்கள் (Temples & church parking lots)
- தொடர் வணிக நிறுவனங்களின் வாகனத் தரிப்பு இடங்கள் (Parking lots in private business areas)

ஒன்ராரியோ மாகாண வீதி ஒழுங்கு சட்டப் பிரிவின் கீழ் (Ontario provincial traffic act) மட்டுமே தனியார் வாகனத் தரிப்புகளில் தண்டனை ரிக்கற்றை பொலிசாரால் வழங்க முடியாது.

மாகாண வீதி ஒழுங்கு மீறல்களுக்கு உதாரணமாகப் பின்வருவனவற்றினை குறிப்பிடலாம்.

- வாகனத் தரிப்பு இடங்களில் உள்ள நிறுத்துகை சைகைகளில் நிறுத்தாத மீறல்கள் (Fails to stop at stop sign in private parking lots).
- வேகமாக வாகனம் செலுத்துவது.
- காப்புறுதி இல்லாது வாகனம் செலுத்துதல்.
- அனுமதிப்பத்திரம் இல்லாது வாகனம் செலுத்துதல்.

இவ்வாறு வாகனம் செலுத்துவதில் மாகாண வீதி ஒழுங்குச் சட்ட மீறல்களுக்கு எடுத்துக் காட்டாக இன்னும் பல தவறுகளைக் குறிப்பிடலாம்.

இதே தனியார் வாகனத் தரிப்பு இடங்களில் ஏதாவது விபத்துகள் நடந்தால் விபத்து

(தொடர்ச்சி 34ஆம் பக்கம்...)



## Math tutorial346

Answers to tutorial345

1)An equation of the line passing through A(7 ,3 ) with direction vector $\bar{d}$=(2 ,-5) is $\bar{r}$=(7 ,3)+t(2 ,-5) if t=-1,$\bar{r}$=(5 ,8) then P(5 ,8) is on the line ,if t=5,then (17 ,-22) is on the line

2)A (4 ,-2 ,1).O(0,0,0) is on the x-axis ,therefor the direction is$\overline{OA}$=(4 ,-2 ,1 ).A second direction is the direction of the x-axis =(1 ,0 ,0 ), the cross product of both the direction vectors =(0 ,1 ,2) .Hence the plane has equation y+2z=0

3)The circle equation can be written as $9x-3)^2+(y-4)^2=49$, the centre O is (3 ,4 ) ,A (5 ,-1) slope of OA=-5/2 ,slope of chord = 5/2,Equation of chord is y+1 =5/2(x-5) or 5x-2y -27 =0

4)$s(t)=t^2+(2t-3)^{1/2}$,$V=s'(t)=2-1/2(2t-3)^{-1/2}(2)=2-(2t-3)^{-1/2}$,$a=s''(t)=$

$2-(2t-3)^{-3/2}$.

Tutorial346 (Questions)

1)For their project ,some students needed 30 poles ,each 6 units long ,20 poles , each 8 units long , and 10 poles ,each 10 units long.The poles were only available in 16 unit lengths.Assuming no gluing and no loss in cutting,what is the least number of 16 unit length poles needed? (for gr 7-9)

2)There are 10 questions on a true/false test .Students attempt all questions.(a)Show how an answer sheet can be represented by a sequence of length10.(b)How many different answer sheets are possible?

3)Twenty-four students arrange themselves in 3 rows of 8 for a class picnic.How many different arrangements are possible if the 8 tallest are in the back row?

4)Determine a vector equation of a plane containing the three points (2 ,6 ,-5 ) ,( -3 ,1 ,-4 ) and (6 ,-2 ,2 )

5)If f(x)=(x+5)q(x)+(x+3) what is the first multiple of(x+5) greater than f(x)?

By MrS.F.Xavier(Teacher)tel 6473409490/4167322228

# சிறுகதை - சவுக்கம்

- உமா வரதராஜன் -

பிரான்சிஸ் என்னை அழைத்துவருமாறு ஒரு போலிஸ்காரனை அனுப்பியிருந்தார்.

"தையல் மெஷினில் ஏதாவது கோளாறா?" என்று அவனைக் கேட்டேன்.

"அப்படி எதுவும் சொல்லவில்லை" என வந்தவன் சொன்னான். அவனுடைய சலனமற்ற முகத்தில் எதையும் என்னால் படித்தறிய முடியவில்லை. ஒரு வேளை மரணம் தன் கண்முன்னால் நின்று வெறிக்கூத்தாடிச் சென்ற திகைப்பிலிருந்து இப்போதுவரை மீளாமல் அவன் பேதலித்துப் போயிருக்கலாம். ஏதோ ஒரு தூணின் பின்னால் அல்லது மண்மூடைகளுக்குப் பின்னால் அல்லது பொலிஸ் நிலைய வளவினுள் நின்ற முறுக்கேறிய பெரிய மரங்களில் ஒன்றின் பின்னால் அல்லது கழிப்பறைக்குள் மறைந்து நின்று தன்னைத் தற்காத்துக் கொள்ள கண்டமேனிக்கு சுட்டுத் தள்ளியிருக்கலாம். எல்லா ஓசைகளும், புழுதியும் அடங்கிய பின் ஆமையின் தலை போல் எட்டிப் பார்த்து வெளியே வந்திருக்கலாம்.

எவருமே எதிர்பார்க்கவில்லைதான். ரத்தம் சொட்டிக் கொண்டிருக்கும் கடைவாய்ப் பற்களுடனும், நர மாமிச நெடியுடனும் அக்கம் பக்கமெல்லாம் அலைந்து கொண்டிருந்த அந்தப் பேய் எங்கள் பக்கத்துக் கதவையும் தட்டிப் பார்த்து விட்டது.



ஒரு வாரத்துக்கு முன்னால் அம்புலன்ஸில் திடீரென வந்திறங்கியவர்கள் அவன் குடியிருந்த வீட்டுக்குப் பக்கத்திலிருந்த பொலிஸ் நிலையத்தை சுற்றி வளைத்து துப்பாக்கிகளாலும், கைக்குண்டுகளாலும் சரமாரியாக தாக்குதல் நடத்தினார்கள் என அவன் கேள்விப்பட்டபோது முதலில் அதிர்ச்சியடைந்தான். அந்தத் தாக்குதல் நடந்த அன்றைய மாலை அவன் தன் வாடகை வீட்டில் இருக்கவில்லை. தொடர்ச்சியாக அமைந்த மூன்று நாள் விடுமுறை காலத்தைக் கழிக்க ஊருக்குக் கிளம்பியிருந்தான். பயணப் பையைத் தோளில் தொங்க விட்டவாறு, வாகனத்தை எதிர்பார்த்தபடி அன்று காலை வீதியில் நிற்கையில் நீலநிற பொலிஸ் ஜீப் அவனைக் கடந்து சென்றது. முன்னால் உட்கார்ந்திருந்த பிரான்சிஸ் அவனைப் பார்த்து லேசான புன்முறுவலுடன் கையசைத்துச் சென்றார். பதிலுக்கு அவனும் கையசைத்ததை ஜீப்பின் பக்கவாட்டுக் கண்ணாடி மூலமாவது பிரான்சிஸ் பார்த்திருக்கக் கூடும். வேகம் குறைந்து, சவுக்கு மரத் தோப்புக்கு முன்னாலிருந்த பொலிஸ் நிலையத்துக்குள் ஜீப் சென்று மறைவதை அவன் பார்த்தபடி நின்றான்.

ஒரே நாள் காலைக்கும் மாலைக்கும் நடுவில்தான் எவ்வளவு நிறமாற்றங்கள்! அன்றைய காலைவானம் எவ்வளவு நிர்மலமாக அப்பழுக்கற்ற நீல வர்ணத்துடன் இருந்தது. மரம், செடி, கொடிகள் எவ்வளவு மதாளிப்புடன் பச்சையாக இருந்தன. எல்லாவற்றையும் புரட்டிப்போட ஒரு நொடி போதும் போலும்.

அவன் விடுமுறை கழிந்து திரும்பி வந்தபோது பக்கத்திலிருந்தவர்கள் கதை கதையாகச் சொன்னார்கள். ஆளரவம் குறைந்த அந்த நெடுஞ்சாலையில் வாகனங்கள் அலறியபடி தாறுமாறாக ஓடியது பற்றி, பொலிஸ் நிலையத்தின் எதிரே இருந்த சவுக்கு மரத் தோப்புக்குள்ளிருந்து வெளியேறிய கால்நடைகள் மருண்டு எல்லாத் திசைகளிலும் ஓடியமை பற்றி, அக்கினி மழை போல் விடாது பொழிந்த வேட்டோசைகள் பற்றி, காற்றோடு கலந்து வந்த கந்தக வாசனை குறித்து, ஆகாயமெங்கும் அலைந்து கொண்டிருந்த கரும்புகைப் பூதங்கள் குறித்து, அதிர்ந்து குலுங்கிய கட்டிடங்கள் குறித்து, ஜன்னல் கண்ணாடிகள் நொறுங்கித் துகள்களாக வீழ்ந்தது பற்றி, கொச்சிப் பழங்கள் போல் கூரை ஓடுகளை உரசிச் சென்ற சன்னங்கள் பற்றி, மரக்கிளைகளிலிருந்து விர்ரென்று கிளம்பிய பறவைகளின் அபயக் குரல் பற்றி, குளம்படி பிசகிய வெண்ணிறப் பசு போல ஏராளமான குண்டுப் பொத்தல்களுடன் ஓர் அம்புலன்ஸ் வண்டி நெடுஞ்சாலை வழியாகத் திக்கிழந்து திசையிழந்து ஒரு மின்கம்பத்துடன் முட்டி மோதிக் கவிழ்ந்ததை, அதன் நீலச் சுழல் விளக்கு ஓயாமல் ஒலியெழுப்பி இயங்கிக் கொண்டிருந்ததை, அதனுள் இருந்து வெளியே வீழ்ந்தவர்களின் ஆறு விழிகளும் வானத்தை வெறித்துப் பார்த்தபடி நிலைகுத்திட்டு நின்றதை, கை நழுவிய குடங்கள் போலான அவர்களின் உடலிலிருந்து வீதியெங்கும் பரவிய இரத்தம் சூடு தணிய முன் உறைந்து போனதை அச்சம் அகலாத விழிகளுடன் அக்கம் பக்கம் பார்த்தபடி கதை கதையாக என்னிடம் சொன்னார்கள்.

"நீங்கள் போங்கள். உடுப்பை மாற்றிக் கொண்டு வருகிறேன்" என நான் கூறியதும் பிரான்சிஸ் அனுப்பிய பொலிஸ்காரன் சென்று விட்டான்.

நடந்து செல்லும் தூரத்திலேயே பொலிஸ் நிலையம் இருந்தது. நடுவில் நான்கைந்து அரசாங்க அலுவலகங்கள். வீதியால் போவோர் வருவோரை எப்போதும் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு வழிப் பிள்ளையார். அடுத்ததாக ஒரு பெந்தகோஸ்த சபை. அங்கிருந்த சகோதரர் சாந்தநேசன் பேய்களை ஓட்டுவதில் வல்லவர் எனப் பலரும் கூறியதால், அவரை வீதியில் எதிர்கொள்ள நேரும் போதெல்லாம் நான் மறுபக்கத்துக்கு நகர்ந்து விடுவதுண்டு. பெந்தகோஸ்த சபையிலிருந்து முன்னரெல்லாம் பரவசநிலையுடன் கூடிய கூக்குரல்களும், கோஷங்களும் கேட்டபடியிருக்கும். ஆனால் கடந்த வார அசம்பாவிதத்துக்குப் பிறகு அந்த வீடு மிகவும் அமைதியடைந்து விட்டது.

நான் நேரே பொலிஸ்நிலைய வளாகத்திலிருந்த பிரான்சிஸின் விடுதிக்குச் சென்று அழைப்பு மணியை அழுத்தி விட்டுக் காத்திருந்தேன். தையல் இயந்திரத்தின் ஷட்டில், அல்லது கேரியரில் நூல் சிக்கிக் கொண்டிருக்கலாம். அல்லது இயந்திரம் இயங்கும் முறையில் பிசகு ஏதாவது இருக்கலாம். அப்படி ஏதும் இருந்தால் ஊசிகள் உடைந்து கொண்டேயிருக்கும். அல்லது கால்மிதி பாகத்தில் லொடலொடவென்ற சத்தம் கேட்டபடி இருக்கலாம். இவையெல்லாம் அடிக்கடி வரக் கூடிய கோளாறுகள்தான். மிஸிஸ். பிரான்சிஸுக்கு தையல் இயந்திரம் என்பது கிட்டத்தட்ட தனது இன்னொரு குழந்தையைப் போல.

விடுதியின் கதவைத் திறந்து கொண்டு மிஸிஸ். பிரான்சிஸ் வெளியே வந்தாள். "சேர் வரச் சொல்லி தகவல் அனுப்பியிருந்தார். மெஷினில் ஏதாவது கோளாறா?" என்று புன்னகையுடன் கேட்டேன். அவளுடைய முகத்தில் தென்படும் வழமையான மலர்ச்சி மறைந்து போயிருந்தது.

குழப்பம் நிறைந்த முகத்துடன் "இல்லையே …" என்றாள். கதவருகே நின்ற என்னை நோக்கி "அங்கிள்" என்று அழைத்தபடி பிரான்சிஸின் சின்ன மகள் ஓடி வந்தாள். இன்று அவளுக்கு சொக்லேட் வாங்கி வரவில்லையே என்பது அப்போதுதான் என்னை உறுத்தியது. மிஸிஸ். பிரான்சிஸ் தன் மகளின் கையை இறுகப் பற்றி தடுத்து நிறுத்தி விட்டாள். குழந்தையின் கையில் யானைப் பொம்மை இருந்தது. வழக்கம் போல் அந்தப் பொம்மையின் சாவியை முடுக்கி, அது பிளிறிக் கொண்டு நடப்பதை நான் காண்பிப்பேன் எனக் குழந்தை எதிர் பார்த்திருக்கக் கூடும். கை காலை உதறியபடி என்னிடம் வர அந்தப் பிள்ளை திமிறிக் கொண்டிருப்பது மனதுக்கு கஷ்டத்தைத் தந்தது ."ஐயா ஸ்டேஷனில் இருப்பார். அங்கு போய் என்னவென்று விசாரியுங்கள்".

நான் பிள்ளையை நோக்கிக் கையசைத்து விட்டு பொலிஸ் நிலையத்தை நோக்கி நடந்தேன். முன்புற சுவர் முழுக்க நூற்றுக் கணக்கான கண்கள் முளைத்தது போல் தோட்டாக்களின் துளைகள். பட்டை உரிந்த மரங்களைப் போல் அங்கிருந்த தூண்களின் மேற்பூச்சுகள் கழன்று போயிருந்தன. கூரையில் கரி படிந்து போயிருந்தது.

பிரான்சிஸ் தனக்குரிய அறையில், சுழல் நாற்காலியில் அமர்ந்திருந்தார். நான் மாலை வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு உள்ளே நுழைந்தேன். அவர் கடலையைக் கொறித்தபடி என்னைநிமிர்ந்து பார்த்தார்.

தொடர்ச்சி 33ஆம் பக்கம்...)


பேட் சில்வர் காடின் முதியோர் இல்லம்

Birdsilver Gardens
COMFORT SECURITY TRANQUILITY
Senior Assisted Living

24 மணி நேர முதியோர் பராமரிப்பு சேவை

பயிற்றப்பட்ட பராமரிப்பாளர்களால்
24 மணி நேரமும் ஆதரவாகவும்,
சௌகரியமாகவும், மகிழ்ச்சியாகவும்
கழித்திட நாடவேண்டிய ஓரே இடம்

Tel. (416) 613-1840
Cell. (647) 272-6993
birdsilvergardens@gmail.com



16 Birdsilver Gardens, Scarborough M1C 4M5
(Port Union & Island Rd)

# CONDO FOR SALE
# 1612-430 MCLEVIN AVE SCARBOROUGH



**2 BEDROOMS 2 WASHROOMS**

**FULLY RENOVATED KITCHEN, FRESHLY PAINTED, AND CONER LOT**

வீதி வழியே இடமும் வலமுமாக செல்லும் வாகனங்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். என்னை ஒரு ஜீவனாகவே கருதாமல் குறுக்கும் நெடுக்குமாக ஓட்டமும் நடையுமாகத் திரிந்த காக்கிச் சீருடை காவலர்களின் முகங்களை ஒரு பசுக் கன்றின் தாகத்துடன் மாறி மாறிப் பரிதாபத்துடன் பார்த்தேன். மாலையானதும் தத்தம் அலுவலக சாவிகளை ஒப்படைக்க வந்த அதிகாரிகளை ஏக்கத்துடன் பார்த்தேன். என் முன்னால் நின்ற கொன்றை மரத்தின் கிளைகளில் நெடுநேரமாக இரண்டு செண்பகங்கள் தத்தித் தாவி விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். பெந்தகோஸ்து சபையின் வெண்ணிற ஆடை அணிந்த மனிதர்கள் கடைசி பஸ் பிடிக்க விரைந்து செல்வதைக் கண்டேன். வெறுமையாகிப் போன அரசாங்க அலுவலகங்களின் திக்கில் 'கூடடையச்' செல்லும் புறாக்களின் வரிசையை வானத்தில்



பார்த்தேன்.

வெளியே ஒளி மங்கிக் கொண்டிருந்த அதவேளையில் மதகை உடைத்து உட்புகும் நீர்ப்பெருக்குப் போல் என் மனமெங்கும் துயரத்தின் இருளும், பயங்கரத்தின் திகிலும் குடியேறிக் கொண்டிருந்தன. திடீரென என் பெஞ்ச் அருகே பிரான்சிஸ் வந்து நின்றார். நான் எழுந்து நின்றேன்.

"குளவிக் கூட்டுக்கு கல்லெறிந்தால் என்ன நடக்கும் என்று பார்த்தாய்தானே?"

"சேர், நீங்கள் எதை மனதில் வைத்துக் கொண்டு பேசுகிறீர்கள், இப்படியெல்லாம் நடத்துகிறீர்கள் என இந்த நிமிடம் வரை எனக்கு எதுவும் புரியவில்லை ..."

"ஓஹோ...அது புரியாமல்தான் அன்று காலையிலேயே ஊருக்குக் கிளம்பினாயாக்கும் ...."

பிரான்சிஸ் போடும் முடிச்சு இப்போது எனக்குப் புரியத் தொடங்கியது. ஆனால் அதை எப்படி அவிழ்ப்பது என்று தெரியவில்லை.

"சத்தியமாக எனக்கு எதுவும் தெரியாது" என்றேன்.

"எல்லோருமே அப்படித்தான் ஆரம்பத்தில் சொல்லுகிறார்கள். அதை எப்படிக் கண்டு பிடிப்பது என்று எனக்குத் தெரியும். ஆனால் அதை நான் செய்யப் போவதில்லை. இவ்வளவு நாளும் நெருக்கமாகப் பழகிய ஒருவன் மீது கை வைக்க என்னால் முடியவில்லை. அதனால்தான் உன்னோடு இவ்வளவு அமைதியாகப், பொறுமையாகப் பேசிக் கொண்டிருக் கிறேன். ஆனால் நாளைக்கு உன்னை விசாரிக்க வரும் பியசிறி நிச்சயமாக என்னைப் போல் இருக்க மாட்டான்."

பிரான்சிஸ் தன் விடுதியை நோக்கிப் போவது தெரிந்தது. நான் கைது செய்யப்பட்டிருக்கிறேன் என்ற உண்மையை உணர எனக்கு இவ்வளவு நேரம் எடுத்திருக்கிறது.

நான் அப்படியே ஸ்தம்பித்துப் போயிருந்தேன். பொலிஸ் நிலைய விளக்குகளை எல்லாம் அணைத்து விட்டார் கள். மாரிகாலத் தவளைகளின் சத்தம் போல் வயர்லெஸ் சாதனங்களிலிருந்து நொடிக்கொரு தரம் கட்டைக் குரல்கள் ஒலித்துக் கொண்டி ருந்தன. வீதியை நான் வெறித்துக் கொண்டிருந்தேன். வீதியில் வாகன நடமாட்டம் நின்று வெகுநேரமாகயிருந்தது. அந்த வீதியும் எனக்கு எட்டாத தூரத்தை நோக்கி நகர்ந்து செல்லத் தொடங்கி விட்டதைப் போலிருந்தது. வானில் தலை முட்டும் எலும்புக் கூடுகள் போல சவுக்கு மரங்கள் இருட்டில் தோன்றின.

பெஞ்சில் உட்கார்ந்திருந்த என்னருகே ஒரு பொலிஸ்காரன் வந்து "எழும்பி உள்ளே போ!" என்றான்.

நான் குழப்பத்துடன் அவனைப் பார்த்தேன்.

"மிஸ்டர் பிரான்சிஸ் சொன்னாரா ?" என்று கேட்டேன்.

"ஆம் ...அவர்தான் சொன்னார் ...மறுபடியும் அவர்கள் தாக்க வரமாட்டார்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்? அந்தத் தாக்குதலில் உன்னைப் போன்ற அப்பாவிகள் மாட்டி விடக் கூடாதல்லவா?"

'உன்னைப் போன்ற அப்பாவிகள்' எனக் கூறும்போது அந்த வார்த்தைகளுக்கு அழுத்தம் கொடுத்து, பற்களை கடித்து அவன் என்னை முறைத்துப் பார்ப்பது தெரிந்தது. நான் பயத்துடன் அவனைப் பின் தொடர்ந்தேன். அவன் கூட்டின்

தொடர்ச்சி 38ஆம் பக்கம்...)

# பூவும் நீரும் இறை பூசனைக்குரியவை



நா. க. சிவராமலிங்கம்



பூ, பூவாய் பிறந்திருக்கு பூமியிலே ஆயிரம் பூ அவை கண்ணுக்குக் குளிர்ச்சியையும் கருத்துக்கு ரசனையையும் தருவன. வசந்தம் பூக்களின் வகை தொகையினை காட்டுவதாகும். மணத்தாலும் நிறத்தாலும் பூக்கள் வேறுபடும். மங்கலப் பொருள் களில் முதன்மையானது மலர்களாகும். மங்கையர் சூடுவதும், தெய்வங்களுக்கு சூட்டி மகிழ்வதும் மலர்களாகும். பூக்களை மாலையாக தொடுப்பார்கள். இது தொடை யல் என்றும் அலங்கல் என்றும் அழைக் கப்படும். நறுமணம் உள்ளவை, நறுமணம் அற்றவை என்று பூக்களைப் பிரிக்கலாம்.
நாறும் பூவும் தேவர்க்காம் நாறாப்பூவும் தேவர்க்காம் எனும் சொற்றொடர் இரு வகைப் பூக்களும் தெய்வங்கள் அனைத் திற்கும் உரியன என்பன உணர்த்தும். பூக்கள் நான்கு வகைப்படும்.

கோட்டுப்பூ - மரத்தில் பூப்பது
கொடிப்பூ - படரும் கொடியில் பூப்பது
நீர்ப்பூ - குளங்களில் பூப்பது
நிலப்பூ - நிலத்தில் செடியில் பூப்பது
இந்த நால்வகைப் பூக்களையும் நித்தம் பறித்து திருப்புகலூர் மேவிய புண்ணிய னுக்கு மாலை கட்டிக் கொடுத்து வந்தார் முருக நாயனார் அதனை குறிப்பிடும் பாடல் இது.

கோட்டுமலரும் நிலமலரும் குளிர்நீர்மலரும் கொழுங்கொடியில்
தோட்டுமலரும் மாமலரும் - சுருதி மலரும் திருவாயில்
காட்டு முறுவல் நிலவரக் கனகவரையின் பன்னக நான்
பூட்டும் ஒருவர் திருமுடிமேல் புனையலாகும் மலர் தெரிந்து
சிவபூசையில் செய்யப்படும் செயல்களில் அஷ்டபுஸ்பம் அணிவிப்பது சிறந்த செயல். ‘அட்டமாமலர்கள் தூவி’ என்பார் அப்பரடிகள்.

செந்தாமரை, நீலோற்பலம், சண்பகம், புன்னை, நந்தியாவட்டை, அலரி, வெள்ளெருக்கு, பாதிரி என்பன எட்டு மலர் களாகும். வெள்ளெருக்கு மலரை பாலில் தோய்த்து பயன்படுத்த வேண்டும். பூக்களை பறிக்கும்போது பூக்குடலையில் எடுக்க வேண்டும். சிவ வழிபாட்டிற்கு வேண்டப்படும் பொருள்கள்: மலர்கள், விளக்கு, தூபம் என்னும் மூன்றுமாம். இதனை அப்பர் தேவாரம் உணர்த்தும்

பெரும்புலர் காலை மூழ்கி
பித்தர்க்கு பத்தராகி
அரும்பொடு மலர்கள் கொண்டு
ஆங்கு ஆர்வத்தை உள்ளே வைத்து
விரும்பி நல்விளக்கு தூபம்
விதியினால் இடவல்லார்க்கு
கரும்பினில் கட்டி போல்வார்
கடவூர் வீரட்டனாரே
பூசைப் பொருட்களில் முதன்மை பெறுவது பூக்கள் என்கின்றார் ஞானசம்பந்தர்.

பூவார் மலர் கொண்டடியார் தொழுவார்
புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்கள் எரித்தவன்று மூவர்க்கருள் செய்தார்
தூமா மழைநின்றதிர வெருவித் தொறுவின்னிரையோடு
ஆமாம் பிணை வந்தனையும் சாரல் அண்ணாமலையாரே!

நீரும், பூவும், தூபமும் நித்திய பூசையில் இடம் பெற வேண்டும் என்கின்றார் அப்பரடிகள்.

சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேனடியே னதிலைக்கெடில
வீரட்டானத்துறை யம்மானே
புண்ணியம் செய்பவர் பூவையும் நீரையும் பயன்படுத்த வேண்டும் என்பது திருமூலர் வாக்கு.

புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அது கண்டருள் புரியா நிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறை ஈசனை
நண்ணறியாமல் நழுவுகின்றாமோ

முருகநாயனார், செருந்துணை நாயனார், திலகவதியார், சிவகாமி ஆண்டாள் ஆகியோர் நித்தம் மலர் பறித்து இறைவனுக்கு சூட்டி மகிழ்ந்தனர். நீரும் பூவும் இயற்கையில் எளிதில் கிடைப்பன. எல்லோராலும் பயன்படுத்தக் கூடியது.

தொழுது தூமலர் தூவி பொழுதெல்லாம் அழுது பரவும் அன்பர் தமக்கு பழுதிலாவாழ்வு அருள்வான் பரமன்.

# கனடாவின் 150வது பிறந்த தினத்தைக் கொண்டாடி மகிழும் தமிழர்

- வீரகேசரி மூர்த்தி -

**கடந்த இதழ் தொடர்ச்சி....**

அதனையடுத்து 1550ஆம் ஆண்டு முதல் கனடா என்ற பெயர் உலகப் படத்தில் இடம்பெற்றது. புளோறிடாவிற்கு வடக்கே 1604ஆம் ஆண்டில் முதலா வது பிரெஞ் இனத்தவர்களின் குடியேற்றம் ஆரம்பமாகி யது. அதனையடுத்து 1608ஆம்ஆண்டில் தற்போது கியூபெக் நகர் என அழைக்கப் பட்டு வரும் இடத்தில் சம்பிளெயின் என்ப வர் கோட்டை ஒன்றினை கட்டினார். 1670இல் இரண்டாவது கிங் சாள்ஸ் என்ப வர் தோல் சம்பந்தமான வர்த்தகப் பொறுப் பினை “கட்சன் பே” என்ற கொம்பனிக்கு வழங்கினார். அக்கொம்பனி நூறாண்டு காலம் மொன்றியலில் இருந்த வர்த்தகர்களுடன் போராடி வந்தது.
தோல் வர்த்தகத்தில் அதிகளவு ஈடுபாடு காட்டிவந்த பிரான்ஸ் நாட்டினரான ஜீன்ர லோன், பிசெப் லவால், கவுன்ட் புரென்டி னெக் ஆகியோர் வட அமெரிக்காவில் கட்சன் குடாவிலிருந்து மெக்சிக்கோ குடா வரை பிரான்ஸின் ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்தினார்கள். அதனை முதலாவது குடிமக்களான செவ்விந்தியர்கள் நூறாண்டு



காலமாக எதிர்த்து வந்தார்கள். பின்னர் 1701ஆம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டினர் அவர்களுடன் சமாதான ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொண்டனர். கியூபெக் நகரின் உரிமைக்காக 1700இல் பிரான்ஸூம், பிரித்தானியாவும் போராடின. 1759இல் பிரான்ஸினை பிரித்தானியா தோற்கடித்தது. கியூபெக்கின் ஆளுனரான சேர்கை கால்ரன் என்பவர் 1775ஆம் ஆண்டு அமெரிக்க இராணுவத்தினரால் மேற்கொ ள்ளப்பட்ட தாக்குதலை தடுத்து நிறுத்தி கனடியர்களின் உரிமையை பாதுகாத்தார். யுத்தத்தினை அடுத்து கியூ பெக்கின் பெயரினை பிரித்தானிய அரசு “கியூபெக் மாகாணம்” என மாற்றி அமைத்தது.
கனடா எங்கும் படிப்படியாக ஜனநாயக ஆட்சி முறை அமுலுக்கு வந்தது. 1758ஆம் ஆண்டு நோவா ஸ்கோசியாவி லுள்ள ஹலிபெக்ஸில் முதலா வது நாடாளுமன்ற ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. அதனை அடுத்து 1773ஆம் ஆண்டு பிரின்ஸ் எட்வேட் தீவிலும், 1791ஆம் ஆண்டு அரசியல் அமைப்பு சட்டத்தின் பிரகாரம் கியூபெக் மாகாணம் (பிரெஞ் மாகாணம்) ஒன்ராறியோ கீழ் மாகாணம் எனவும், ஒன்ராறியோ (ஆங்கிலம்) மேல் மாகாணம் எனவும் பிரிக்கப்பட்டன. அன்று முதல் கனடாவில் முதன் முறையாக மக்கள் தங்கள் பிரதிநிதி-களை நாடாளு மன்றத்துக்கு தெரிவு செய்யும் நடைமுறை யும் அமலுக்கு வந்தது.

கனடாவில் தமிழ் மக்கள் கல்வி, அரசியல், வர்த்தகத்தில் முன்னேற்றம்!

தமிழ் பேசும் மக்கள் 1983ஆம் ஆண்டு முதன் முதலாக இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் இருந்து மிகக் குறைந் தளவில் கனடாவிற்கு வந்து மொன்றியல் நகரில் குடியேறினார்கள். ஆரம்ப காலத் தில் 150 தமிழர்கள் வந்தனர். 1991ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட குடிசன கணக் கெடுப்பின்போது ரொறன்ரோ பெரும்பாகப் பகுதியில் துரிதமாகத் தமிழர்களின் எண்ணிக்கை இரண்டு லட்சமாக அதிகரித் தது. குறிப்பாக இலங்கையில் 1991ஆம் ஆண்டுக்கும் 2001ஆம் ஆண்டுக்கும் இடையே நடைபெற்ற இனக் கலவரத்தினை அடுத்தே தமிழர்களின் வருகை அதிகரித் தது. அதன் காரணமாக தமிழர்கள் ஆசி யாவுக்கு வெளியே உலக நாடுகளில் இரண்டு லட்சத்துக்கு மேலாக புலம் பெயர்ந்து வாழும் நாடு கனடா என்ற பெயர் ஏற்பட்டது.

கனடாவுக்கு 2000ஆம் ஆண்டில் புலம்

தொடர்ச்சி 38ஆம் பக்கம்...)

# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

வைத்திய கலாநிதி
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
*Tel.: 647.456.9796*



## 'ஒவ்வாமை' Allergy

நாம் முதல் ஒவ்வாமை Allergy என்றால் என்ன? என்பதை அறிவது முக்கியமாகும். ஒருவருக்கு உடம்பில் எந்நிலையிலும் பாதிக்காத பொருள் மற்றும் ஒருவருக்கு விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தல் பெரும்பாலும் ஒவ்வாமை எனக் கூறலாம்.

நோய்களைப் பொறுத்தமட்டில் தொய்வு எனக் கூறப்படும் ஈழை, எக்ஸிமா (Eczema) போன்றவற்றினால் ஏற்படும் பிரபலமான நோய்களைக் குறிப்பிடலாம். இவற்றை குறிப்பிட்ட போதிலும் உடம்பில் எந்தப் பகுதிகளும் பாதிக்க இடம் உண்டு. மூக்கைப் பொறுத்தமட்டில் ஒவ்வாமை வேளையில் மூக்கடைப்பு, தும்மல், அழற்சியுடன் அரிப்பு, நீர்வடிந்து சிந்துதல் போன்ற அறிகுறியும் மற்றும் சருமத்தில் ஏற்படும் எக்ஸிமாவினால் சொறியுடன் கூடிய தடிப்பு நிலையும், வயிற்றில் ஒருவகையான முறுக்கல், வயிற்றோட்டம், கண் எரிவு, நீர் வடிதல், கடி போன்ற பல அறிகுறிகள் தென்படுவதை அறியக்கூடியதாக இருக்கும்.

அலர்ஜி நிலையில் உயிர் ஆபத்து சிலவேளையில் ஏற்படலாம். இந்நிலையை 'Anaphylaxis' என்று கூறப்படும் ஒருவகையான அதிர்ச்சியாகும். இந்நிலை ஏற்படும்போது உரியவரின் உடல் வெளிறிக் குளிர்ந்து வியர்வையும் வந்த வண்ணம் இருக்கும். இந்நிலையில் இருத்தல் நன்று அன்று. இவரின் இரத்த அமுக்க நிலையை பரீட்சித்துப் பார்க்கும்போது மிகக்குறைந்து காணப்படும். எனவே தாமதிக்காமல் வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டும். அங்கு சென்றால் உடனடி சிகிச்சை செய்து குணப்படுத்த முடியும்.

அலர்ஜியை உண்டாக்கும் பொருட்கள் எல்லோருக்கும் இந்நிலையை உண்டாக் காது. சிலரின் உடல், மருந்துகள், உணவு கள், சுற்றாடல் போன்றவை ஒத்துவராமல் இருக்கும். சிலருக்கு தூசி பரந்த சூழல், தரமற்ற மகரந்தத்தாலும் ஏற்படலாம்.

உணவைப் பொறுத்தமட்டில் இறால், நண்டு, கருவாடு, கணவாய், சிலவகை மீன், முட்டை, இறைச்சி வகை மற்றும் சொக்லேட் போன்ற சாதாரண உணவாலும் ஒவ்வாமை ஏற்படலாம். அன்னாசிப்பழம் சிலருக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தும். முதல் அப்படிப் பட்ட உணவுகளை உண்டபின்பு வாய், உதடு போன்றவை தடிக்கத் தொடங்கும். கையால் கசக்கவும் தொடங்குவார்கள். வீக்கம் தென்படலாம். மற்றும் உடல் முழுவதும் தடிப்பு நிலை ஏற்பட்டு அவ்விடத்தை சொறிந்து கொள்வர். வயிற்றினுள் ஒரு வகைவலி தென்படும். வயிற்றோட்டம் சிலவேளை ஏற்படலாம்.

மேலும் சிலர் தகர டப்பாக்களில் அடைக்கப் பட்டிருக்கும் உணவுப் பொருட்களைப் பாவித்தாலும் ஒவ்வாமைநிலை ஏற்படலாம். மற்றும் சில சோடா, ஜாம் போன்றவற்றைப் பாவித்தாலும் ஒவ்வாமைநிலை ஏற்படும்.




நமது சருமத்தில் ஒரே இடத்தில் நாம் தொடர்ந்து பாவிக்கும் பொருட்களினாலும் அழற்சி நிலை (Contact dermatitis) ஏற்படலாம். நாம் நெற்றியில் பாவிக்கும் சாந்துப்பொட்டு, குங்குமம் போன்றவற்றி னாலும் தலையிலிடும் சாயம் போன்ற 'டை' என்பவற்றாலும் தலை, நெற்றி போன்ற இடங்களில் அழற்சி, கடி, சொறி போன்ற ஒவ்வாமை ஏற்படலாம்.

சிலருக்கு கைகடிகாரம் பயன்படுத்தும்போது அதன் பட்டியினால் ஒவ்வாமை நிலை ஏற்படலாம். மற்றும் மார்பில் அணியும் உடுப்புக்களில் உள்ள கொழுக்கியினாலும் ஒவ்வாமை நிலை ஏற்படலாம். இறுக்கமான பட்டிகள் உடம்பில் தாக்கத்தை ஏற்படுத்தலாம். காலணிப் பொருட்களி னாலும் சிலருக்கு ஒவ்வாமை நிலை ஏற்படலாம். இந்நிலை இருப்பின் தகுந்த முறையில் பயன்படுத்துதல் நன்றாகும்.

அடுத்து எமக்கு ஏற்படும் நோய்களைத் தடுப்பதற்கு சிலமருந்து வகைகளைப் பாவித்தாலும் சிலருக்கு ஒவ்வாமை நிலை ஏற்படுவதை நாம் அறிவோம். உ+ம் பென்சிலின், அஸ்பிறின், ரெட்டாசக்கிளின் போன்றவற்றை குறிப்பிடலாம். பென்சிலின் ஊசி செலுத்துமுன் உரியவருக்கு ஏற்றலாமா? என்பதை வைத்தியர்கள் அறிந்து கொள்வர்.

மற்றும் இன்டோசிட் (Indocid), சல்பர் மருந்துகள், குடும்பக்கட்டுப்பாட்டு மருந்து கள், சில விட்டமின் குளிகைகள் போன்ற வற்றாலும் சிலருக்கு ஒவ்வாமை நிலை ஏற்படலாம். எனவே ஒவ்வொருவரின் உடல் நிலையைப்பொறுத்து அமைவதாகும்.

மேலும் தலையிடி (Migraine), மனவிரக்தி, நெஞ்செரிவு, மனப்பிதட்டல், வலிப்பு, படுக் கையில் சிறுநீர் கழிதல் எனப் பல்வேறு நிகழ்வுகளும் ஏற்படலாம். எனவே ஒவ்வாமை ஏற்படாது தப்பித்துக் கொள்வது மிக நன்றாகும்.

# பெருமைக்குரியவரே கிழவர்

- பண்டிதர் ஏ. பரஞ்சோதி -

கிழவர் உரிமை உடையவர்கள். இவ் வுலகத்தின் நெளிவு சுழிவுகளை தம் நேர் அனுபவத்தில் அறிந்து அதில் தங்கு தடைஇல்லாமல் வாழத் தெரிந் தவர். தம்மை அடுத்தவருக்கும் அந்த நல்வாழ்வு நிலைமையைக் கொடுக் கும் பரந்த மனப்பான்மை உடையவர்.

பெரும்பாலும் வயது கூடியவர்களைக் கிழவர் என்கிறோம். வயது கூடக்கூட அந்த அறிவும் வளர இடம் இருக்கி றது தான். ஆனால் எல்லா வயோதி பரும் கிழவராகக் காணவில்லையே. தம்மைக் கவனிப்பார் இல்லையே என்று கண்ணீர் விடுபவர், தம் அயலார் சுற்றத்தாரைக் குறை கூறி மொறுமொறுப்பவர், முந்திய வலு இல்லையே உடல் தளர்ந்துவிட்டதே என்று அனுங்கிக்கொண்டு திரிபவர், இந்தக்காலத்துப் பொடிப்பயல்கள் எங்களை மதிப்பதில்லையே கலி முற்றிவிட்டது அந்தக்காலம் என்றால் என்று அங்கலாய்ப்பவர் இன்னும்



எத்தனை எத்தனை விதமாக எண்ணி எண்ணி வருந்தும் வயோதிபர்களைக் காண்கின்றோம்.

இவர்கள் எல்லோரும் இளமையில் தவறான வழியில் நடந்தவர்கள் அல்லது தம் முன்னோரால் நடத்தப் பட்டவர். சைவ அறிஞர் கூறிவைத்த சரியை கிரியை, யோக, ஞான நெறிக ளின் நோக்கத்தை இளமையிலேயே சரியான படி அறிந்து அவற்றை அவ் வக்காலங்களில் வாழ்க்கையில் கைக் கொண்டு சீரும் சிறப்புமாக வாழத் தவறியவர்கள். மாணவப்பருவத்து சரி யையிலும் வாலிபப்பருவத்து கிரியை யிலும் இல்லறப்பருவத்தில் யோகத்தி லும் ஈற்றில் வயோதிபப்பருவத்து ஞானத்திலும் நின்று சுவைக்கத்தவறி யவர்கள். இவர்கள் தொகை பெருகி யதாலேயே உலகத்தில் நிம்மதி யின்மை நிலைதிருக்கின்றது.

அந்த இழிவை நீக்கி நல்லதோர் எதிர்கால உலகத்தை ஆக்கும் வல்லமை இன்றைய இளைஞர் கையிலேயே உள்ளது. அவர்கள் புல இன்பங்களுக்கு அடிமையாகாமல் உலகம் என்ற பாடசாலையில் உண் மையைக்காண்பதில் மகிழ்ச்சி கண்டு சுவைக்கத் தொடங்கினார்களேயா னால் தாமும் மகிழ்ந்து தம்மை அடுத்தோரையும் மகிழவைக்கும் கிழவராவார்.

30 வயதளவில் ஒருவர் கிழவராக - சீவன் முத்தராக வரவேண்டும். அதன் பிறகு அந்தத் திறமையைப்பெறுவது மிகக்கடினம் என ஔவையார் தம் நல்வழியில் கூறுகிறார். எனவே இன்றைய வாலிபர் தம் வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சி குன்றாமல் தாமும் வாழ்ந்து தம்மை அடுத்த வரையும் வாழவைக்க விரும்பினால் பரந்த மனப்பான்மையோடு உலகத் தைப்படித்து படித்தபடி நடக்கத் தடை செய்யும் புல இன்பங்களுக்கு அடிமைப்படாது நடப்பாரேயானால் அவர்கள் எண்ணம் தடையின்றிக் கைகூடும். உலகமும் புலவர்கள் கற்பனையில் கண்டுவந்த சொர்க்க பூமியாகும் - சிவலோகமாகும்.

**யோகா சோதிடம்**
● கிரகப்பொருத்தம் பார்த்தல் ● சுபமுகூர்த்தம் கணித்தல்
● பலன் பார்த்தல் ● சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# கனடாவின்...


18 ஆம் பக்கத்தொடர்ச்சி

எதிர்கால நூலக வளர்ச்சிக்காக Scribbler moon நாவலை வெளியிட்டு ஆரம்பித்தார். 2015 வரையும் இவரது சேவைகள் இருந்துள்ளன. அவரது நூலில் தனது அபிலாசைகளை வெளியிட்டார். தனது நூல்கள் 100 வருடங்கள் வாழப்போகின்றன. இந்த நூல்கள் அழகாகத் தூங்குகின்றன. ஆனால் அவை எப்போதும் வாழும் என்றார்.

இவ்வளவு பெரிய சாதனைப் பெண்மணி முதலில் Jim Polk என்பவரை 1968 இல் திருமணம் செய்தார். எனினும் 1973 இல் விவாகரத்து நிகழ்ந்தது. அதேவேளையில் தனது எழுத்துத் துறையில் புகழ் பெற்ற Gramegibson என்பவருடன் தொடர்பு கொண்டு வட ஒன்ராரியோவில், வடக்கு ரொறன்ரோவில் உள்ள அலிஸ்ரன் நகருக்கு சென்று வாழ்ந்தபோது தனது மகளான Eleanor Jess Atwood Gibson 1976 இல் பெற்றெடுத்தார். 1980 இல் ரொறன்ரோவுக்கு குடும்பமாக திரும்பவும் வாழ்வினை ஏற்படுத்தினர். தற்போது அவருக்கு வயது 77 ஆகும்.

ஒப்புவமையில்லாத இந்த எழுத்தாளப் பெண்மணிக்கு கிடைத்த விருதுகளும், பரிசுகளும் பட்டங்களும் கணக்கற்றவை. 1966, 1985 களில் இரு தடவை கனடிய ஆளுநர் விருதுகளை பெற்றவர்.

இவர் படிப்படியாக Order of Canada (1981), Humanist of the year (1987), Nebula Award (1986), Arthur C. Clarke விருது 1987, Canadian booksellers association Author of the year (1989), Trillium book award 1991,1993,1995, Booker prize (2000), Prince of Asturias Award (2008) இப்படிப் பலவாகும்.



இவருக்கு கிடைத்த கௌரவ பட்டங்கள் 23 ஆகும். முதலில் Trent University (1973) இல் பட்டம் வழங்கியது. இப்படியே குவீன்ஸ் (1974), கொங்கோடியா (Concordia) (1979), ரொறன்ரோ 1983, வோட்டலூ (1985), கல்ப் (Guelph), (1985), மொன்றியல் (1991) லீட்ஸ் (Leeds,) (1994), ஒக்ஸ்போட் (1998), கேம்பிரிட்ஜ் (2001), ஹாவாட் (2004), அயர்லாந்து (2011), றையார்சன் (Ryerson) (2012) என மொத்தமாக 55 விருதுகளையும் கௌரவப் பட்டங்களையும் கனடாவிலும், சர்வதேசங்களிலும் பெற்றுள்ளார். இதனையெல்லாம் பார்க்கும்போது இவர் சாதாரண மானிடப் பிறவியா அல்லது தெய்வப் பிறவியா என்று எண்ண தோன்றும். இவரது வாழ்வு பற்றி எமது தமிழ் எழுத்தாளர்கள், படைப்பாளர்கள் தெளிவாக உணர வேண்டும்.

# தண்டனை.....

19 ஆம் பக்கத்தொடர்ச்சி



களில் சரி? பிழை? எந்தப் பக்கம் என முடிவு பண்ணும் சட்டப் பிரிவுகளின் அடிப்படையில் (Ontario accident fault determination rules & regulation) காப்புறுதி கம்பனிகள் தங்கள் நட்ட ஈடுகளை வழங்குகின்றது. இந்த விபத்துக் களும், நட்டஈடு வழங்கலும் பதிவுகளில் போகும் போது, அது தொடர்ச்சியான மாதாந்த காப்புறுதி கொடுப்பனவு (Premium) விலைகளைப் பாதிக்கின்றது.

ஆனால் இதே இடத்தில் பிரத்தியேகமாக பொலிசார் கடமைக்காக நியமிக்கப் பட்டிருந்தால் (Private enforcement) அல்லது மோசமான விபத்தாக இருந்து ஒரு எல்லையினை கடந்து வீதி ஒழுங்கு சட்டங்களை மீறும்போது, விசேடமாக அதி வேக வாகனம் செலுத்தும் சாரதிகளுக்கு 'பொதுமக்களுக்கு தொல்லை கொடுத்தது' (Public mischief) என்ற கிரிமினல் குற்ற சாட்டில் தண்டிக்கப்படலாம் என சி. ஏ நிறுவனத்தின் சட்ட ஆலோசனை பிரிவு மனேஜர் திரு. ரெரி. எல். ஃவொக்ஸ் (Mr. Terry L. Fox manager legal advisor department C.A. A south central Ontario) தனது ஆய்வுக் கட்டுரைகளில் தெரிவித்திருந்தார்.

உதாரணமாக மதுபோதையில் வாகனம் செலுத்துதல் (Speeding) விபத்து நடந்த இடத்திலிருந்து தப்பி தலைமறைவாகுதல், (Hit & Run) கவனமில்லாத வாகன ஓட்டம் (Careless Driving), அதி வேக திறில் ஓட்டம் (Racing) ஆகியவற்றினை இங்கு குறிப்பிடலாம். இந்தக் கட்டுரை ஓர் அறிமுகமே. இதுபற்றிய தகுந்த ஆலோசனைகளை அந்தந்த தொழிலில் பாண்டித்தியம் பெற்றவர்களின் அறிவுறுத்தலை பெறுவதே சிறந்தது

# கவிஞர்...

27 ஆம் பக்கத்தொடர்ச்சி

நினைவில் வைத்துக் கொண்டு எழுதியிருக்கிறார். ஒவ்வொரு வரியும் 'ஆய்' என்ற சத்தத்துடன் முடிகிறது. ஆறு வரிகளில் வாலி சுகமாக ஆறு அவதாரங்கள் பெற்ற உருவங்களை வடிவாகக் கூறி உள்ளார்.

### அல்லி அர்ச்சுனனா காவியத்தலைவன்:

'வந்தனம் வந்தனம் வந்தனம் வந்தனம் எல்லோருக்கும் தந்தனம் தந்தனம் குந்தனும் குந்தனும் குந்தனும் குந்தனும் இடம் பிடிக்க முந்தனும் முந்தனும்' 'அவையிலிருக்கும் அத்தனை பேருக்கும் வணக்கம் வணக்கம் வணக்கம் என் வணக்கத்திலே தமிழ் மணக்கும் பஞ்சபாண்டவர் ஐந்து பேர்கள் நடுவினில் நான் பிறந்தேன். அர்சுனன் என் பேரு அத்தினாபுரி என் ஊரு....' இது வாலி எழுதிய கடைசிப்பாட்டு ஆகும். இப்படத்தின் எல்லா பாட்டுகளையும் எழுத இருந்தவர் இதை மட்டும் எழுதினார். இப்பாட்டு பழங்காலத்து கூத்துப் போல எழுதப்பட்டிருக்கிறது. இதில் பாவிக்கப்படும் சொற்கள் அவையில் இருந்தவர்களுக்குப் புரியும்படி பேச்சுவழக்கில் உள்ளன. அத்துடன் கூத்தின் கதாபாத்திரமான அர்ச்சுனனை அறிமுகம் செய்வது இப்பாடலாகும். தொடக்கத்தில் 'வந்தனம், தந்தனம், குந்தனும், முந்தனும்' எல்லாம் 'தனம்' 'தனும்' என முடிகின்றன.



1958இல் தொடங்கி இறக்கும்வரை (2013) வாலி பாட்டுக்களை இயற்றினார். இவ்வளவு காலத்திற்குப் பிறகும் அவரது பாடல்கள் பிரபலமாக இருப்பதன் காரணம் அவரது திறமை ஆகும். காலத்திற்கு ஏற்ப அவரது பாடல்கள் மாறின. சிவாஜிக்கு எழுதின பாட்டிற்கும், ரஜினிக்கு எழுதின பாட்டிற்கும், விஜயிற்கு எழுதின பாட்டிற்கும் வித்தியாசங்கள் உண்டு. இதனால் தான் அவர் இவ்வளவு காலமும் மிகவும் பிரபலமாக இருந்தார்.

# இந்தியக்.......

13 ஆம் பக்கத்தொடர்ச்சி

இந்நிலையில் 2% வாக்குகளை வைத்துள்ள தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி (தெலுங்கானா), 5.39% வாக்குகளைக் கொண்ட அதிமுக (அனைத்து அணிகளும்), 1.53% வாக்குகளைக் கொண்ட ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் (ஆந்திரா), 2.99% வாக்குகளைக் கொண்ட பிஜூ ஜனதாதளம் (ஒரிசா), 1.91% வாக்குகளைக் கொண்ட ஜனதாதளம் (பிஹார்) மற்றும் தெலுங்கு தேசம் (ஆந்திரா) ஆகிய கட்சிகள் ராம் நாத் கோவிந்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. ஆக, ஏறக்குறைய 63% வாக்குகள் இப்போதே உறுதியாகிவிட்டது. இதனால் அவரது வெற்றி உறுதியாகிவிட்டது.

இன்னொரு பக்கம், காங்கிரஸ் தலைமையில் திரினமுல் காங்கிரஸ், சமாஜ்வாடி, பகுஜன் சமாஜ், திமுக என 17 கட்சிகள்



கூட்டாக சேர்ந்து மீரா குமாரை வேட்பாளராக நிறுத்தியிருந்தாலும், அவரால் 30% வாக்குகளைப் பெறமுடியுமா என்பதே பெரும் கேள்விக்குறியாக உள்ளது.

ஆகையால், இந்தியாவின் அடுத்த குடியரசுத் தலைவர் யார் என்று குழப்பம் ஏதும் இல்லாமல், ஜூலை 17-ம் தேதி நாட்டின் 15-வது குடியரசுத் தலைவர் தேர்தலைச் சந்திக்கிறது இந்தியா.




# என் மகனைப் பார்த்து பாஜக பயப்படுகிறது!

## திருமுருகன் காந்தி அப்பா

**சந்திப்பு: சிவதாணு**

ஈழத் தமிழர் விவகாரம், சாதி ஆணவக் கொலைகள், அரசின் மக்கள் விரோத திட்டங்கள் என எந்தப் பிரச்சனையாக இருந்தாலும், மாற்றுப் பார்வையுடனும் ஆதாரங்களுடனும் இந்திய மத்திய அரசுக்கும், தமிழக மாநில அரசுக்கும் நெருக்கடி கொடுத்து வந்தவர் மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி. இப்போது குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். சிறையில் எப்படி இருக்கிறார்? அவரது பிரிவு குடும்பத்தினரை எந்தளவுக்குப் பாதித்துள்ளது? உண்மையில் கைது பின்னணி என்ன? தொழிற்சங்கவாதியும் திருமுருகன் காந்தியின் தந்தையுமான காந்தியை சந்தித்துப் பேசினோம்.

திருமுருகன் காந்தி கைதை ஒரு தந்தையாக எப்படி பார்க்கிறீர்கள்?

மகன் சிறையில் இருப்பது நிச்சயமாக எந்த ஒரு தந்தைக்கும் மகிழ்ச்சியான விடயம் கிடையாது. ஆனால், அவர் எதற்காக சிறையில் இருக்கிறார் என்பது குறித்து ஒரு தந்தை பெருமைகொள்ள வழி இருக்கிறது. என் மகன் சரியான ஒரு காரணத்திற்காகத்தான் போராட்டம் செய்து, அதற்காக ஒரு விலையை கொடுத்திருக்கிறார் என்னும் வகையில் சமூக ஆர்வலராக நான் பெருமைப்படுகிறேன். அப்பா - மகன் என்ற இடைவெளியே எங்களுக்கு கிடையாது. எப்போதும் அரசியல் பற்றி விவாதிப்போம்.



சிறையில் எப்படி இருக்கிறார்?

சிறையில் என்னைப் பார்த்ததும், "நீங்க பயப்படாதீங்கப்பா. எனக்கு ஒன்னுமில்லை. நான் நல்லாருக்கேன். தைரியமா இருங்க" என்று நம்பிக்கையூட்டினார். எனக்கு 72 வயதாகிறது என்பதால் திருமுருகனுக்கு கவலையெல்லாம் அப்பாவைப் பற்றி மட்டும்தான். மற்றப்படி சிறையில் தன்னம்பிக்கையோடு இருக்கிறார்.

அவருடைய கைது நடவடிக்கையால் ஈழப் பிரச்சனை திரும்பவும் மேலே வந்துள்ளதில் மகிழ்ச்சி.

குண்டர் சட்டம் பாயும் அளவுக்கு என்ன பிரச்னை?

குண்டர் சட்டம் என்பது மிகவும் ஆபத்தான செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது போடப்படும் சட்டம். பொதுமக்கள் மத்தியில் பெரிய அச்ச உணர்வை ஏற்படுத்தக்கூடிய மோசமான கிரிமினல்கள், தொடர்ச்சியாக குற்றங்களை செய்யக்கூடிய தாதாக்கள் மேல்தான் குண்டர் சட்டத்தை போடுவார்கள். இந்தச் சட்டம் திருமுருகனுக்கு எந்த விதத்திலும் பொருந்தாது. காவல்துறை திருமுருகன் மீது 5 வழக்குகளைப் போட்டு குண்டர் சட்டத்தில் அடைத்துள்ளது. இந்த 5 வழக்குகளுக்கும் குண்டர் சட்டத்துக்கும் எந்த தொடர்பும் கிடையாது.
முதலாவதாக 2015-ம் ஆண்டு அமெரிக்க தீர்மானத்தை எதிர்த்து ஆர்பாட்டம் நடத்தியது, இரண்டாவது செல்லாக் காசு நடவடிக்கையை எதிர்த்து வள்ளுவர் கோட்டத்தில் போராட்டம் செய்தது, மூன்றாவது ஐ.நா. சபையை இலங்கையில் நடந்தது இனப் படுகொலை என அறிவிக்கக் கோரிப் போராடியது.

தமிழகத்திற்கு கர்நாடகா தண்ணீர் தரவில்லை என்பதை எதிர்த்து அதிகாலை 3 மணிக்கு இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் மீது சிலர் கல்லெறிந்திருக்கிறார்கள். 2016 ஆம் ஆண்டு நடந்த இந்தச் சம்பவத்தின்

தொடர்ச்சி 39ஆம் பக்கம்...)




# கனடாவின்...

36 ஆம் பக்கத்தொடர்ச்சி

பெயர்ந்து வந்த மக்களின் எண்ணிக்கையில் இலங்கை மக்களின் எண்ணிக்கை 5,841 (2.57%) ஆகும். இரண்டாயிரம் ஆண்டில் கனடாவுக்கு அதிகளவில் புலம் பெயர்ந்து வரும் மக்களுள் இலங்கை தமிழர்களின் எண்ணிக்கை ஐந்தாவது இடத்தினை பெற்றிருந்தது. சீனா, இந்தியா, பிலிப்பைன்ஸ், ஹொங்கொங் ஆகியவற்றுக்கு அடுத்தாக இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை இருந்தது. கனடாவில் 2006ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டின்போது கனடாவில் வாழும் தமிழர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து மூவாயிரத்தி 625 ஆக அதிகரித்திருந்தது. இது கனடாவுக்கு புலம் பெயர்ந்து வந்தோரின் எண்ணிக்கையில் 2.57 வீதமாகும். ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் விவகாரத்துக்கான ஆணைக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் 2010ம் ஆண்டில் இலங்கையில் இருந்து வந்த அகதிகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 41 ஆயிரத்தி 74 ஆகும். 2011ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் அகதிகள் விவகார ஆணைக் குழு இலங்கையில் இருந்து 5 லட்சத்து 89 ஆயிரத்தி 639 பேர் அகதிகளாக வந்துள்ளதாகப் பதிவு செய்துள்ளது.

கனடாவுக்கு புலம் பெயர்ந்து வந்துள்ள தமிழ் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை உயர் கல்வி கற்க ஊக்குவித்து வருவதனா




லும், உயர் கல்வி கற்பதற்கான கடன் வசதியை அரசாங்கம் வழங்கி வருவதனாலும் பெரும்பாலான தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் உயர் கல்வி கற்று இன்று வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக, விஞ்ஞானிகளாக, கணக்காளர்களாக, சட்டத்தரணிகளாக அத்துடன் அரசியல்வாதிகளாகவும் பணியாற்றி கனடா நாட்டிற்கே பெரும் புகழினை ஏற்படுத்தி உள்ளனர். இதன் காரணமாக "தைத் திருநாள் தமிழர் திருநாள்" என்பதற்கொப்ப கனடா அரசு 2016ம் ஆண்டு ஒக்டோபர் 5ஆம் திகதி, நாடாளுமன்றத்தில் ஜனவரி மாதத்தினை தமிழர்களின் பாரம்பரிய மாதமாக "Tamil Heritage Month Act, 2014" சட்ட ரீதியாகப் பிரகடனப்படுத்தி பெருமை சேர்த்துள்ளது. அத்துடன் தமிழ் பெருமக்கள் கனடா அரசியலிலும், வைத்தியத்துறை, பல்வேறு வர்த்தகத் துறைகளிலும், பத்திரிகைத் துறையிலும் ஈடுபட்டு தமிழினத்தின் பெருமையினை மேலும் பறைசாற்றி உள்ளனர். செல்வி ராதிகா சிற்சபைஈசன், சட்டத்தரணி திரு. ஹரி ஆனந்தசங்கரி ஆகியோர் எம்.பீ.க்களாகவும், பட்டதாரியான திரு .லோகன் கணபதி 2006ஆம் ஆண்டு மார்க்கம் மாநகர சபையின் அங்கத் தவராக தெரிவு செய்யப்பட்டதன் மூலம் கனடா அரசியலில் ஈடுபட்ட முதலாவது தமிழர் என்ற பெருமையினை பெற்று ள்ளார். அவர் தொடர்ந்தும் பத்தாண்டு களுக்கு மேலாக அதே பதவியினை வகித்து வருவதும் பாராட்டுக்குரியதாகும். அத்துடன் வருடா வருடம் தமிழர் திரு நாளான பொங்கல் தினத்தை மார்க்கம் மாநகர சபையில் கொண்டாடி வருவதும் தமிழினத்துக்கு பெருமை சேர்க்கும் விடயமாகும். அதேபோன்று மதி நுட்பமும், விடா முயற்சியும் கொண்ட இளைஞரான திரு. நீதன் சான், கல்விச் சபை உறுப்பினராகவும், ரொறன்ரோ மாநகர சபையின் முதலாவது தமிழ் உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டு பணியாற்றி வருவது பாராட்டுக்குரியதாகும். அவரைப் போலவே கல்விச் சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்ட திரு.பார்த்தி கந்தவேள், செல்வி யுவனிதா நாதன் ஆகியோரும் தமிழினத்திற்குப் பெருமை தேடித் தந்துள்ளனர். மேலும் பல்வேறு தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் பல்கலைக் கழகங்களில் வைத்தியர்களாகவும், பொறி யிலாளர்களாகவும் பட்டம் பெற்று உயர் பதவிகளை வகித்து வருவதும் தமிழ் இனத்துக்கே பெருமை சேர்ப்பதாகும்.

# சிறுகதை.......

33 ஆம் பக்கத்தொடர்ச்சி

கதவைத் திறந்து விட்டான். உடலை வளைத்து, குனிந்து நான் உள்ளே நுழைந்ததும் கதவு சாத்தப் பட்டு, வெளிப்புறமாகப் பூட்டுப் போடப்பட்டது.

அந்தக் கூட்டின் இருட்டுக்கும், மூத்திர நெடிக்கும் பழக்கப்பட எனக்கு சில நிமிடங்கள் எடுத்தன. அந்தக் கூட்டின் ஒரு மூலையில் சுவரில் சாய்ந்தபடி தலையைக் குனிந்தவாறு ஒருவன் உட்கார்ந்திருந்தான். அவனிடம் எனக்கு எதுவும் பேசத் தோன்றவில்லை. என் கண்களில் நீர் கோர்த்திருந்தது.

என் வாழ்க்கையில் மட்டும் விதியின் வரிகள் ஏன் இவ்வாறெல்லாம் புதிர்த் தன்மையுடன் எழுதப்பட்டிருக்கின்றன என்ற கேள்வியை என்னை நோக்கி நானே பல தடவை கேட்டுக் கொண்டிருந்தேன். இது நான் பழைய பாட்டுகளைக் கேட்டபடி தூங்குவதற்கு ஆயத்தமாகின்ற இரவு நேரம். வாசலில் மல்லிகைப்பூக்கள் மணத்துக் கொண்டேயிருக்கும். படுக்கும் போது வழக்கமாக என் கால்களுக்கும் ஒரு தலையணையை வைத்துக் கொள்ளுவேன். ஆனால் இன்றைய இரவில் நான் சற்றும் எதிர்பாராத இடத்துக்கு வந்து சேர்ந்திருக்கிறேன். இனி மறுபடியும் என் பழைய இரவுகளுக்குப் போய்ச் சேர்வேன் என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லை. உயிருடன் இருப்பேன் என்பதற்கும்தான். எனது குற்றமும், அதற்கான தண்டனையும் இறுக மூடப்பட்ட ஏதோ ஒரு மாய சீசாவுக்குள்ளோ அல்லது இந்தக் கட்டிடத்தின் முன் புறத்தில் தடுப்பரணாக அடுக்கப்பட்டிருக்கும் மண் மூட்டைகளுக்குள்ளோ அல்லது எதிரேயுள்ள சவுக்கு மரங்கள் உதிர்த்த சருகுப் படைகளின் கீழோ ஒளித்துக் கொண்டிருக்கலாம்.

பொலிஸ் நிலையத்தின் முன்புறம் நிற்கும் ஜீப் வண்டிகள் அடுத்த நாள் வேட்டைக்குப் போக முன் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் ராட்சஸ விலங்குகள் போலத் தெரிகின்றன.

ஒரு போலிஸ்காரன் புகைத்துக் கொண்டிருக்கிறான். அவனுடைய சிகரெட் முனையின் சிவப்புக் கண் ஒளிர்வதும் மறைவதுமாக இருக்கிறது. இந்த இரவு கடக்க முடியாத ஓர் ஆறு போலவும் திறக்க முடியாத ஒரு காடு போலவும் என் முன்னே விரிந்து கிடந்தது. கரை என்பது ஒரு சிறு கோடாகி கண்களிலிருந்து நழுவிக் கொண்டிருந்தது. முடிவற்ற தொடுவானம் நோக்கி மூர்க்கமான காற்று என் படகை உந்தித் தள்ளிச் சென்று கொண்டிருந்தது.

என் எதிர்ப்புற மூலையிலிருந்தவன் என்னை நோக்கி ஏதோ கேட்பது போலிருந்தது. அது கனவின் வாசகமோ என்றுதான் முதலில் நினைத்தேன். இரண்டாவது தடவையாகவும் அதை அவன் கேட்டபோது முழு விழிப்பு நிலைக்கு நான் வந்து விட்டேன்.

"உங்களை ஏன் இங்கு கொண்டு வந்திருக்கிறார்கள்?"

"சந்தேகம் ...ஆனால் நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை...விடுமுறைக்கு ஊருக்குப் போனதைத் தவிர..." என்றேன்.

"ஓ ...அப்படியா?"

"உங்களை ஏன் இங்கு கொண்டு வந்து வைத்திருக்கிறார்கள்" என்று அவனிடம் மெதுவாகக் கேட்டேன்.

அவனும் மிகவும் தணிவான குரலில் சொன்னான் "கண்ணகையம்மன் கோயிலடியில் அரசியல் வகுப்பு எடுத்துக் கொண்டிருந்தேன். யாரோ தகவல் கொடுத்திருக்க வேண்டும். தப்புவதற்காக எல்லோரும் ஓடினோம். ஆனால் என்னை மாத்திரம் குறி வைத்து துரத்திப் பிடித்து விட்டார்கள் ...."

"உங்களுடைய பெயர்?"

"பார்த்திபன்"

நான் அதற்குப் பிறகு அவனுடன் பேச அஞ்சினேன். யாராவது ஒட்டுக் கேட்கலாம். அல்லது இந்த இருட்டு நிறைந்த கூட்டுக்குள் ஒட்டுக் கேட்கும் சாதனங் களைப் பொருத்தியிருக்கலாம். அல்லது பார்த்திபன் என்ற பெயருடன் அறிமுகமாகி யிருக்கும் இவனே கூட என்னை ஆழம் பார்க்க அனுப்பப் பட்டிருக்கும் ஓர் உளவாளியாக இருக்கலாம்.

நுளம்பு காதுகளைச் சுற்றிக் கிணு கிணுத்துக் கொண்டிருந்தன. வியர்த்துத் தள்ளியது. தாகமாக இருந்தது. அடிவயிறு கலங்கிக் கொண்டிருந்தது. நேரத்தை நகர விடாமல் ஒரு பெரிய பாறாங்கல் மறித்துக் கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டேன். அதை ஆமோதிப்பது போல் பல்லியொன்று மூன்று தடவைகள் சத்தம் எழுப்பியது.

திடீரென எங்கள் கூட்டின் பூட்டு திறபடும் ஓசை கேட்டது. உட்கார்ந்த நிலையில் இருந்த எனக்கு நான்கு கால்கள்தான் முதலில் வெளியே தெரிந்தன.

"வெளியே வா!" என்றார்கள்.

எழும்புவதற்கு ஆயத்தமான என்னை நோக்கி "நீ இல்லை...அவன்..." என்றார்கள்.

பார்த்திபன் எழுந்தான். வெளியேறிய அவனை அழைத்துக் கொண்டு அவர்கள் சென்றார்கள். கெந்திக் கெந்தி சென்று கொண்டிருந்த அவன் ஒரு தடவை என்னைத் திரும்பிப் பார்ப்பது அந்த இருட்டிலும் மங்கலான ரூபத்தில் தெரிந்தது.

அவனை அவர்கள் அழைத்துச் சென்ற 10 நிமிடங்களுக்குள் சவுக்கு மரத் தோப்புப் பக்கமிருந்து துப்பாக்கி வேட்டுச் சத்தம் ஒன்று கேட்டது.

அதைத் தொடர்ந்து காகங்கள் ஒருமித்த குரலில் கரையும் ஓசை கேட்டது. அவை கரைந்தபடியே பறந்திருக்க வேண்டும். அவை எழுப்பிய பேரோசை மெல்ல மெல்ல தூரம் நோக்கி நகர்ந்து, மங்கிக் கொண்டிருந்தது.

நான் கண்களை மூடாமல் அச்சத்துடன் விழித்த படியிருந்தேன்.

பார்த்திபன் மறுபடியும் வரவேயில்லை. ஆனால் பியசிறி நாளை வருவான்.

## நூல் வெளியீடு

"அன்புடைமை" என்னும் சுயமுன்னேற்ற அறிவியல் நூலும், "இன்பமுற வாழ்வதற்கு இலக்கியப் புதையல்கள்" என்னும் இலக்கிய நூலும் வெளியீடு செய்யப்படவுள்ளன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்து நூற்பிரதிகளையும் வாங்கி ஆதரவு தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

காலம் : யூலை மாதம் 22ஆம் திகதி நேரம்: பிற்பகல் 2:45 மணி

இடம் : ஸ்காபரோ சிவிக் சென்ரர் (Scarborough Civic Centre150, Borough Drive, Scarborough, ON, M1P 4N7)

அன்புடன் அகணி சுரேஸ், நூலாசிரியர் : 416.732.8021

# என் மகனைப்.....

37 ஆம் பக்கத்தொடர்ச்சி

போது திருமுருகனை காவல்துறை எதுவுமே கேட்கவில்லை. அவருக்கும் அதில் தொடர்புமில்லை. ஆனால், இப்போது காவல்துறை இவரது ஆலோசனையில் பேரில்தான் கல்லெறிந்துள்ளார்கள் என்று புதிதாகப் பொய் வழக்கை நான்காவதாக சேர்த்திருக்கிறது.

கடைசி வழக்காக மெரினாவில் நடத்திய நினைவேந்தல் நிகழ்ச்சியை சேர்த்துள்ளார்கள். ஈழத்தில் படுகொலை செய்யப்பட்ட ஒன்றரை லட்சம் மக்களுக்காக நடத்தப்பட்ட நினைவேந்தல் நிகழ்வு அது. 6 வருடமாக இந்த நிகழ்வை மே 17 இயக்கம் தொடர்ந்து நடத்திவருகிறது. அதற்கு காவல்துறையும் அனுமதி கொடுத்திருக்கிறது. ஆனால், இப்போது திடீரென, திருமுருகனும் நண்பர்களும் பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தார்கள், குச்சி மற்றும் பதாகைகளால் பஸ் கண்ணாடிகளை உடைத்தார்கள் என்ற பொய்க் குற்றச்சாட்டை சுமத்தி வழக்கு பதிவு செய்துள்ளது.

எல்லாவற்றையும்விட பெரிய வினோதம் என்னவென்றால், திருமுருகனைக் கைது செய்த குறிப்பாணையை என்னிடம் கொடுத்ததாகவும், என் முகவரியை போட்டு காந்தி என்ற இடத்தில் நான் கையெழுத்துப் போட்டதாகவும், என்னிடம் விசாரணை நடத்தியதாகவும் போலியான ஆவணத்தை காவல் துறையே உருவாக்கியுள்ளது.

காவல்துறைக்கு தனிப்பட்ட முறையில் திருமுருகன் காந்தி மீது காழ்ப்புணர்ச்சி இருக்கிறது. ஜல்லிக்கட்டு போராட்டத்தின் போது மீனவ குப்பங்களில் அட்டூழியம் நடத்தியது காவல்துறை. அந்த மக்களுக்கு பல்வேறு அமைப்புகளும் பொதுமக்களும் உதவி செய்தார்கள். ஆனால், மே 17 இயக்கம் மட்டும்தான், அந்த அட்டூழியங்களை குற்றச்சாட்டுகளாக மாற்றி, ராஜேஸ்வரன் கமிட்டி முன்னிலையில் 30 குற்றச்சாட்டுகளை பதிவு செய்துள்ளது. அந்தக் குற்றச்சாட்டுகள் மீது விசாரணை வர இருக்கிறது.

திருமுருகனை குண்டாஸில் போட்டு விட்டோம். சாட்சி சொன்னால் உன்னையும் போடுவோம் என்ற மிரட்டுவதுதான் நோக்கம். இவை மட்டுமல்லாமல், திருமுருகன் கைதில் பல்வேறு அரசியல் நோக்கங்களும் பின்னணியும் இருக்கிறது. தமிழக அரசை மறைமுகமாக நிர்வகித்து வரும் மத்திய பாஜக அரசு முக்கிய காரணம்.

எதை வைத்து இப்படி சொல்கிறீர்கள்?

ஈழத்தில் ஒன்றரை லட்சம் மக்கள் கொல்லப்பட்ட துயரத்தை எத்தனை நூற்றாண்டுகளானாலும் மறக்கமுடியாது. அதை ஒவ்வொரு வருடமும் நினைவுப்படுத்துவது பண்பாட்டுவியலானது. அதை முடக்க யாருக்கும் அனுமதி கிடையாது. தமிழக சட்டமன்றமே, அது இனப்படுகொலை என்று தீர்மானம் போட்டுள்ளது. சுனாமி வந்த டிசம்பர் 26-ம் தேதியில் கூடத்தான் ஒவ்வொரு வருடமும் ஆழிப்பேரலையில் இறந்தவர்களுக்காக கடற்கரையோரம் அஞ்சலி செலுத்துகிறார்கள். அதை இந்த அரசால் தடுக்க முடியுமா? தமிழ் உணர்வு தழைத்துவிடக்கூடாது என்பதுதான் பாஜகவின் நோக்கம். திருமுருகனைப் பார்த்து பாஜக பயப்படுகிறது.




திருமுருகன் காந்தியின் சிறைவாசம் அவரது குழந்தையைப் பாதித்துள்ளதா?

திருமுருகன் சமூக பங்களிப்பு செய்வதால் வீட்டில் இருக்கும் நேரம் குறைவுதான். மேலும், ஐ.நா. மனித உரிமை ஆணைய கூட்டத்துக்கு போகும்போதெல்லாம் 1 மாத காலம் என்று சாதாரணமாக இடைவெளி இருந்தது. ஆகவே, இப்போது அவர் வீட்டில் இல்லாததும் மருமகள் காந்திமையும் பேத்தி ஆதிரையையும் பாதித்தது என்று சொல்லமுடியாது. பேத்தி ஆதிரை நான்காவது படிக்கிறாள். தனது தந்தை சிறையில் இருப்பது அவளுக்கும் தெரியும். ஆனாலும், அது அவளை பெரிதாக பாதிக்கவில்லை. அப்பா மீது மிகப்பெரிய பிரியம் இருந்தாலும் அப்பா அடிக்கடி கிடைக்க மாட்டார் என்பது ஆதிரைக்குப் புரியும். அதனால், அவளது அத்தை, தாத்தா, அம்மாதான் அவளது வட்டம்.

மே 17 இயக்கம் ஆயுதப் புரட்சியை ஆதரிப்பதால் தீவிரவாத இயக்கம் என்கிறதே பாஜக?

மூவாயிரம் இஸ்லாமியர்களை கொன்றவர்கள், தனது மாநிலத்தின் வழியாக சென்ற இஸ்லாமியர்களை என்கவுண்டரில் சுட்டவர்கள், பாகிஸ்தானுக்கு செல்லக்கூடிய ரயிலில் குண்டு வைத்து வெடித்தவர்கள், 400 ஆண்டுகால பழமை வாய்ந்த கட்டிடத்தை இடித்து அமைதியான நாட்டில் பெரிய மதக் கலவரத்தை உண்டாக்கியவர்கள், இன்றைக்கும் மாடு என்ற பெயரில் இந்தியா முழுவதிலும் மதக் கலவரத்தையும் மக்களையும் கொல்பவர்கள், ஒரு முதலமைச்சரின் தலையை வெட்டிக்கொண்டு வந்தால் 1 கோடி ரூபாய் பணம் தருகிறேன் என்றவர்கள் பாஜககாரர்கள். அவர்கள், 50 போராட்டங்களுக்கு மேல் இந்திய சட்ட வரையறைக்குள் நின்று, அதுவும் மக்கள் பிரச்னைகளுக்காக போராட்டம் நடத்தியவர்களைப் பார்த்து, தீவிரவாத இயக்கம் என்று சொல்வது ஒன்றும் அதிசயமில்லை.

உங்கள் குடும்பம் குறித்து?

திருச்சி மாவட்டம் கல்விக்குடி கிராமம்தான் எங்கள் சொந்த ஊர். நான் ஒரு தொழிற்சங்கவாதி என்பதால் கோவை, மதுரை என ஒவ்வொரு மாவட்டமாக ட்ரான்ஸ்பர் ஆனேன். மகள் பூங்குழலி, மகன் திருமுருகன் என இரண்டே பிள்ளைகள், என்னுடைய மனைவி இறந்துவிட்டார். எங்கள் குடும்பமே நீண்டகால திராவிட பாரம்பரிய குடும்பம்தான். சிறுவயதிலேயே சாதிக்கு எதிரானவராக திருமுருகனை வளர்த்தேன். பள்ளியில் யாராவது சாதி என்னவென்று கேட்டால் பறையன் என்று கூறு என்பேன். அதுதான், முதலில் நான் அவருக்கு சொல்லிக் கொடுத்தது. அதுவே, அவரை அனைத்து சமூக பிரச்சனைகளுக்கு எதிராகவும் போராடத் தூண்டியது.

திருமுருகன் இளம் வயதிலிருந்தே விளையாட்டுகளில் ஆர்வமுள்ள குழந்தை அல்ல. அவரது ஆர்வம் ஓவியத்தில்தான். 12ஆம் வகுப்பு படிப்பதற்கு முன்னே மார்டன் ஆர்டிஸ்ட் அளவுக்கு உயர்ந்திருந்தார். வீடு முழுக்க அவரது ஓவியங்கள் தான். ரஷ்ய இலக்கியங்களில் பெரிய ஆர்வம் கொண்டவர். மாணவராக இருக்கும் போது, கோவை அருகேயுள்ள வீரியம் பாளையம் கிராமத்தில், தலித் மாணவர்கள் கல்வியில் முன்னேற வேண்டும் என்பதற் காக கணிதப் பாடங்களை சொல்லிக் கொடுப்பார். எம்.சி.ஏ. படித்திருக்கிறார். 1998ஆம் ஆண்டு மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் பெஸ்ட் அவுட்கோயிங் ஸ்டுடண்ட்டாக வந்தவர். அதன்பிறகு விளம்பர நிறுவனங்கள் தொடங்க ஆரம்பித்து வேகமாக முன்னேறினார்.



பொதுவாகவே ஈழ பிரச்சனைகளுக்காக குரல் கொடுக்கக்கூடிய இயக்கங்கள் மீது வெளிநாட்டிலிருந்து பணம் வாங்கிக் கொண்டு இயங்குகின்றன என்ற விமர்சனம் இருக்கிறதே?

மே 17 இயக்கத்தை பொறுத்தவரை ஈழ மக்களுக்காக போராட தமிழக மக்களிடம் இருந்து மட்டும்தான் நன்கொடை பெறவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறது. இன்றுவரை வெளிநாட்டிலிருந்து எந்த உதவியையும் பெறவில்லை. இன்றும் பல நண்பர்கள் ஏதாவது உதவி வேண்டுமா என்று கேட்கிறார்கள். அனைத்தையும் மறுத்துவிட்டோம். ஈழமக்களின் வெற்றி என்பது தமிழக மக்களின் பங்களிப்பாகத்தான் இருக்கவேண்டும் என்பதில் தெளிவாக உள்ளோம். இதுவரை வந்த அனைத்து நன்கொடைகளும் தமிழகத்தில் வசூலிக்கப்பட்டவைதான். நாங்கள் அதிகாரத்தை நோக்கிச் செல்வதற்காக இயக்கம் நடத்தவில்லை. மக்களுக்கு விழிப்புணர்வூட்டத்தான் எங்களது இயக்கம்.

### தாயக மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம்
### தொண்டர்கள் விடுக்கும் வேண்டுகோள்

2014 சித்திரை மாதம் எமது சனசமூக நிலையத்தின் தாய்ச்சங்கம் எம்மிடம் ஒரு வேண்டுகோளை முன்வைத்தது. கல்விகற்க ஆர்வமிருந்தும், வசதிகுறைந்த மாணவர்களுக்கு ஊர், பாடசாலை என்ற வேறுபாடின்றி புலமைப்பரிசில் வழங்கும் திட்டம் ஒன்றை அது முன்வைத்தது. அதை உலகளாவிய முறையில் நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம். புலம்பெயர்ந்த கொடையாளர்கள் வழங்கும் நிதியுதவி ஊடாக 19 தாயகப் பாடசாலைகளைச் சேர்ந்த 250 மாணவர்கள் தற்பொழுது புலமைப்பரிசில் பெற்று வருகிறார்கள். அவர்களுள் 15 பேர் பல்கலைக்கழக மாணவர்கள்.

இலங்கையில் அரை நூற்றாண்டுக்கு மேலாக இயங்கிவரும் எமது தாய்ச்சங்கத்தின் பதிவுப் பெயர் "என். சி. சி." (NCC). அதே பதிவுப் பெயர் வெளிநாடுகளிலும் பதியப்பட்டுள்ளது. 2014 முதல் பாடசாலை அதிபர்களையும், ஆசிரியர்களையும் கொண்ட ஒரு தொண்டர் குழு தாயகத்தில் பணியாற்றி வருகிறது. பழைய மாணவர்களைக் கொண்ட தொண்டர் குழுக்கள் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, கனடா ஆகிய நாடுகளில் இயங்கி வருகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளிலும் எமது கொடை விபரம் பின்வருமாறு:

| ஆண்டு | மாணவர்கள் | கொடையாளர்கள் | கொடை |
|---|---|---|---|
| 2016 | 222 | 112 | ரூபா 37,06,630.00 |
| 2015 | 180 | 120 | ரூபா 21,63,525.00 |
| 2014 | 118 | 77 | ரூபா 16,67,100.00 |

இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் எங்களுடன் ஒத்துழைக்குமாறும், எங்களுக்கு கைகொடுக்குமாறும் வேண்டிக் கொள்கின்றோம். அன்பர்கள் நேரடியாக எமது தாய்ச்சங்கத்துடன் தொடர்பு கொள்ளலாம். அல்லது எங்களுடன் தொடர்பு கொள்ளவும்:

| இலங்கை தாய்சசங்கம் | அமெரிக்கா கிளை | ஆஸ்திரேலியா கிளை | இங்கிலாந்து கிளை | கனடா கிளை |
|---|---|---|---|---|
| கிருஷ்ணகுமார் 077-019-7344 | ரமேஷ் 1-718-217-2151 | அகிலன் 61-416-803-992 | பார்த்திபன் 44-794-164-7062 | சிவாஸ்கரன் 416-826-6039 |
| சற்குணலிங்கம் 077-600-6353 | | | சுபாஷினி 44-208-760-5187 | கிருஷ்ணகுமார் 416-558-1376 |
| சுதர்சன் 077-572-7269 | | | ஸ்ரீ 44-777-581-1232 | கிருஷ்ணர் 416-519-2822 |
| சுகந்தன் 077-721-4135 | | | | சிவஞானம் 416-871-0716 |
| | | | | தேவன் 416-568-7617 |

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
Advanced function
Calculus & vectors
Data management
All Classes available in Scarborough & Stouffville

Mr.S.F.Xavier (Teacher)
Contact: 647.340.9490 / 416.732.2228

# கனடா 150 வது பிறந்தநாள்




மேப்பிள் இலை கொண்ட நாம் வாழும் கனடாவின்
வயதின்று நூற்றி ஐம்பது

எழுந்து நிற்கும் சி.என் ரவர்
தினமும் வீழும் நைகரா
மேப்பிள் இலை கொண்டு வெண் சிகப்பு நிறம் இரண்டு
காற்றடித்து பறக்கையிலே புத்துணர்வு மிளிர்கிறது
ஓ கனடா!

அகில உலகெல்லாம் அவதியுறும் மக்களுக்கு
அவர் நிலைமை கேட்டாய் அகதியென தான் ஏற்றாய்
கடலிலே தத்தளித்தோர் கரையேற்று உயிர்காத்து
கல்வியுடன் தொழில்வாய்ப்பு அத்துடனே குடியுரிமை
ஓ கனடா!

தினம் தினம் கொம்பியூட்டரில் ஐ கோண்
கனடாவில் வளம் பெருக்கும் யு கோண்
யாதும் ஊரே யாவரும் கேளிர்

நூற்றைம்பது ஆண்டுகள்
இருபத்தி நான்கு பிரதமர்கள் பெண்ணொருவர் இதிலுண்டு
வீழும் நைகரா நீரால் மின்னுற்பத்தி
நம்மைச் சூழ்ந்த கடலால் மீன் வளம் அதனால் தொழில் வளம்
அங்கு மிங்கும் கதைப்பதற்கு வரவழைத்தார் பிளாக்பரி

வளமான மண்ணிலே ருசியான றாஸ்பரி பிளாக்பரி சிகப்பாய் ஸ்ரோபரி
பால் வளம் பழவளம் பற்பல தொழில் வளம்
வெள்ளம் வந்தாலும் வள்ளம் கொண்டு உதவும்
கனேடிய படை வீரர்

எதிரிகள் வாரமல் எமையெல்லாம் காத்திடும்
கடல் தரை ஆகாயப் படையினர்
ஓடி விளையாடு பாப்பா என்ற பாரதி கூற்றைப்போல்
பதட்டமில்லாமல் விளையாடி ஒலிம்பிக்கில் எத்தனை பதக்கம்
ஓ கனடா!

அன்றுமுதல் இன்றுவரை நாட்டிற்காய் தம்முயிர் தந்தார்க்கு
நவம்பர் பதினொன்றில் நாடளாவ நினைவு தினம்
வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி மக்கள் மனதில் நிற்பவர் யார்?
மாபெரும் வீரர் மானம் காத்தோர் மக்கள் மனதில் நிற்கின்றார்

ஆங்கிலமும் பிரென்சும் உன்னிரு மொழி யெனினும்
எத்தனை மொழிக்கு பேதமின்றி இடம்தந்தாய்
சி.என் ரவர் போல நீ நிமிர்ந்து நிற்கின்றாய்
இம் மண்வாழும் எங்களுக்கும் தனிப்பெருமைதனைத் தந்தாய்
ஓ கனடா!

தமிழிலே வீதிகள் தமிழ் பொங்கலுக்கும் பெரு விழாக்கள்
எத்தனை சமயங்கள் அத்தனைக்கும் உரிய இடம்
காரோடும் வீதிகளில் தேரோட வழிதந்தாய்
பாற் குடமும் காவடியும் ஆடிவர வழி தந்தாய்

கனடாவின் நட்பு நாடி மோடி ஓடி வந்தார்
வல்லரசு நாடு அருகுள்ள அமெரிக்க ஒபாமா பறந்து வந்தார்

வரட்சியில் பஞ்சத்தில் உயிரிழப்பில் பலநாடு

நன்னீர் வளத்தினிலே நாம் வாழும் பொன் நாடாம் கனடா
வீட்டினிலும் வீதியிலும் நம் வேலைத் தலத்தினிலும்
புகைத்தல் தடைசெய்து சூழலிலே இல்லை மாசு
நமைச்சூழ வாராது இனி மாசு
சொர்க்கம் செல்லவென பலருக்கு ஆசையுண்டு
நாம் வாழும் கனடாவே சொர்க்கபுரி தானெமக்கு
ஓ கனடா!



**கலகலப்பு தீசன்**

# புனிதம் தந்தாய் கனடாவே

உலகில் அமைதி நிலைத் திருக்க
அலகில் உணவும் நிறை ததும்ப
புலத்தில் அமைதி நிலைத் தங்கு
நிலத்தில் கனடா மிளிர்கின்றதே

போரே இல்லா அமைதி பெறும்
சோர்வே இல்லா உழைப்பினிலே
நிகரே இல்லா நல்வினைகள்
கரவே இல்லாக் கனடாவே

கரடும் காடும் நீக்கி நல்ல
வரவும் கொண்டாய் கனடாவே
இடரும் இருப்பும் தரும் உடைமை
தொடரும் பணியால் தருகின்றாய்

ஆண்டான் அடிமை வர்க்க பேதம்
சீண்டான் சிறுமை நிலை நீக்கி
மீண்ட பிறவிப் புத்துலகாய் என்றும்
நீண்டு நீயும் வாழ் கனடா.

CANADA 150

நூற்று ஐம்பது ஆண்டுகளாய்
தோற்றும் உந்தன் எழில் உருவம்
மாற்றம் கொண்டு மதிநுட்பம்
ஏற்றம் கொண்டாய் கனடாவே!

உலகின் அமைதிப் பூங்காவாய்
அலகின் அருமை பெருமைகளை
கலகமின்றி குடிகள் இன்று
துலங்க வைத்தாய் கனடாவே!

உந்தன் பிறப்போ பெருவிருந்து
எந்தம் வாழ்வின் அருவிருந்து
சந்தம் சந்தடியேதும் இன்றி
சித்தம் குளிர்ந்தோம் கனடாவே!

அகதி வாழ்வை அரவணைத்து
சகதி தன்னில் வீழாமல் என்றும்
தகுதி தரங்கள் பெற்றிடவே
தந்தாய் கனடா கவின்நீயே!

சாதி சமய பேதங்களை
கோதி எறிந்து மனிதவினம்
ஓதி ஒன்றார் வாழ்கின்றார்
ஆதி முதல்வன் நீகனடா!

கல்விக் கலைகள் மெத்தவிங்கு
கல்லிக் கல்லி வளர்கிறதே
கவ்விக் கொண்டார் கல்விதனை
கவ்வி வாழ்வைப் போற்றுகின்றார்

பன்மொழி பயின்ற பாவலரும்
தன்மொழி கொண்ட தகவிலரும்
என்மொழி ஏற்றம் என்ற பேதமின்றி
ஒன்றாய் வாழ்வதும் உன்பணியே!

மன்பதை வாழ்வை மனிதவினம்
மனிதம் போற்றும் பெறும்பேற்றை
புனிதம் என்றொ கொண்டிடவே
புனிதம் தந்தாய் கனடாவே!

**த.சிவபாலு**





Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
$5 Free Lycachat credit when you download
Lycachat
ஒருவருட
இணைப்புச் சந்தா
$99
மட்டுமே
SET TOP BOX INCLUDED
புதுப்பித்தல்
15
மாதங்கள்
$99
மட்டுமே
50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
பன்னாட்டு நேரங்களில் உங்கள் மனங்கவர்ந்த தொலைக்காட்சி அலைவரிசைகள்
INDIA
CANADA
USA
INCLUDED
TENTKOTTA
EROSNOW
சிவலிங்கா
கடம்பன்
காஷ்மோரா
மாநகரம்
BAJIRAO MASTANI
SANAM TERI KASAM
DISHOOM
7000க்கும் அதிகமான சூப்பர்ஹிட் திரைப்படங்கள்
iPhone & iPad
Tablet & Mobile
Download on the App Store
GET IT ON Google Play
உங்கள் MOBILE DEVICE இல்
TENTKOTTA மற்றும் EROSNOW Apps ஐ
download செய்து திரைப்படங்களை
பார்த்து மகிழுங்கள்
Google play
Download on the App Store
Roku
AirPlay
chromecast
Samsung SMART TV
LG Smart TV
androidtv
amazon fireTV
kindle fire
XBOX
SALES
647 968 1087
CUSTOMER SERVICE
647 931 1745
www.lycatv.tv
FULL TERMS AND CONDITIONS ARE AVAILABLE AT WWW.LYCATV.TV. LYCATV IS A TRADEMARK AND SERVICE MARK BELONGING TO LYCA MEDIA LTD. ANY PRODUCT
IDENTIFY A THIRD PARTY AS THE SOURCE, THEREOF MAY (EVEN IF NOT SO INDICATED) BE THE SERVICE OR TRADEMARK OF THAT RESPECTIVE ENTITY OR

# Ajax

CREMATORIUM & VISITATION CENTRE INC.

Crematorium Operated by Park Lawn Corp.

# Now Open in Ajax

## New Crematorium / Visitation Centre




**Serving our Community at:**

**384 Finley Avenue Ajax, ON L1S 2E3**

**Tel: 289-372-3300 / *info@acvc.info***

## பார்வைக்கு வைக்கும் இடமும் தகனம் செய்யும் இடமும் ஒரே இடத்தில் அமைந்துள்ளது

- 500 பேர்வரை அமரக்கூடிய விசாலமான சகல வசதிகளுடன் கூடிய மண்டபம்.
- ஒரே இடத்தில் குறைந்த செலவுடன் நிறைந்த மன திருப்தியுடன் உங்களது அன்புக்குரியவரின் இறுதிக்கிரிகைகளை உங்களது சமய முறைப்படி நிறைவேற்றலாம்.
- தகனக்கிரிகை ஞாயிற்றுக் கிழமைகளிலும் நிறைவேற்றலாம்.
- 250 ற்கு மேற்பட்ட வாகனத்தரிப்பிட வசதி.
- வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.



# FOR ALL YOUR MORTGAGE NEEDS

Access over 30 lenders with one application

*Best Rates & Advice You Can Trust!*

**Purchase**

**Refinance**

**Renewal**

PRE-QUALIFIED

PRE-APPROVED

*Dedicated and knowledgable team...*
*Provide you with the best solutions for 1st and 2nd Mortgage...*
*Our commitment to you is to provide with the very best...*





**Pradeepraj Mani**
*Mortgage Agent*
LIC# M14001956
**416.997.3862**
*np_57@hotmail.com*

**Gaya Kathir**
*Mortgage Agent*
LIC# M13001852 FSCO #10530
**416.806.2274**
*gayamortgage@hotmail.com*
*www.mortgageagencytoronto.ca*


MORTGAGE ALLIANCE




























விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com

